Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

## கலைச் செல்வி

சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், அறிவரங்கம், வளரும் எழுத்தாளர் பகுதி முதலிய விசேட பகுதிகளுடன் ஒவ்வொரு தமிழ் மாதம் முதலாம் திகதிகளிலும் மலரும் திங்களிதழ்

தனிப்பிரதி: 35 சதம் — ஆண்டு சந்தா ரூ. 4/-

க லை ச் செ ல் வி

சுந்தரோடை : : சுன்னுகம்

புத்தகம் 12 திருவள்ளுவர் ஆண்டு 1989 தைத்திங்கள் 5-ம் நாள் 18—1—1959 ஞாயிற்றுக்கிழமை றஜப் பிறை 8 இதழ் 34

# கடல் உப்புக்கும் காட்டு மரத்துக்கும் கூட இனி அதிக விலையாகலாம்

## குரல்வளையை நெரிக்கும் பண நெருக்கடியைத் தீர்க்க

### அரசாங்கத்தின் புதிய ஆலோசனைகள்

### தபால் தந்திக் கட்டணங்களும் உயரும்?

(சுதந்திரன் நிருபர்)

பண நெருக்கடி அரசாங்கத்தின் குரல்வளையை முன் எப்பொழுதும் இல்லாத வகையில் மிகப்பலமாக நெரிக்கத் தொடங்கி விட்டது. மந்திரிகள் தத்தமது இலாகாச் செலவுகளுக்கான பணம் பெறுவதில் ஆளுநக்காள் கடிபட்டுக் கொள்ளும் அளவுக்கும், நிதிமந்திரி அழாக் குறையாக அலமந்து இருந்து விழிக்கும் அளவுக்கும் நிலைமை முற்றி விட்டது.

இதனுல், தண்டச் செலவுகளை விட்டாலும் அத்தியாவசிய நிர்வாகச் செலவுகளுக்கேனும் போதுமான அளவுவருமானத்தைப்பெறப்புதுவரிகள், கட்டண உயர்வுகள் அவசியம் என்று கருதப்படுகிறது.

தபால் இலாகாவிலேயே முதலில் கைபோடப் படலாம் என்று தெரிய வருகிறது. தபால் தந்தி கட்டணங்களை உயர்த்துவதன் மூலம் கணிசமான அளவில் வருவாயைப் பெருக்கலாம். வேறு எந்தக் கட்டண உயர்வாலும் கிடைக்க முடியாத தொகையை தபால் தந்திக் கட்டண உயர்வால் சுலபமாகத் திரட்டி விடலாம் என்று கருதுவதனுலேயே முதலில் அந்த இலாகாவில் கை போடத்திர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

#### தபால் கட்டண உயர்வு

"தபால் இலாகா செம்மையாக நடைபெறவில்லை என்று மக்கள் அதன்மீது ஏற்கனவே அதிருப்திகொண்டிருக்கையில் தபால் தந்திக் கட்டணங்களை உயர்த்திஞல் யாரும் அதை விரும்ப மாட்டார்கள். எம்.ஈ.பி. அரசாங்கமே வெறுத்து ஒதுக்கப்பட வேண்டும் என்று தீவிரமாக எண்ணும் அளவுக்கு மக்கள் போய் விடலாம். அதனுல், அவசரப்பட்டு தபால் தந்திக் கட்டணங்களை உயர்த்தி விடக்கூடாது" என்று மந்திரி சபையில் உள்ள ஒரு கோஷ்டி அஞ்சுகிறது.

#### உப்பும் மரமும்

தபால் தந்திக் கட்டணங்களை உயர்த்துவது தவிர, சில வரிகளைக் கூட்டுவதென்றும், உப்பு, காட்டு மரங்கள், போன்ற சில பொருள்களின் விலையை அதிகரிப்பதென்றும் அரசாங்கம் எண்ணியுள்ளது.

இதையும் உள்ளேயுள்ள கோஷ்டி ஒன்றுஎதிர்க்கிறது. "கடலில் விளையும் உப்புக்கும் காட்டில் வளரும் மரத்துக்கும் கூட விலை உயர்வு என்றுல் நாம் மக்கள் மத்தியில் தலை காட்டத்தானும் முடியுமா?" என்பது அந்தக் கோஷ்டியின் கேள்வி.

#### குழப்பம்

நாட்டின் பொருளாதாரம் அடி பெயர்ந்து விட்டதே, வருவாய் முக்கிய செலவுகளுக்கே போதவில்லையே என்ற கவலை மந்திரி சபையில் உள்ள அனைவருக்கும் இருந்த போதிலும் வருவாயைக் கூட்ட கையாளும் வழிவகைகளில் அவர்களுக்கிடையில் ஒரே குழப்பம். இதனுல் பொருட்களின் விலையேற்றமும் கட்டண உயர்வும் நடைபெறு என்பதற்கில்லை. சற்று தாமதம் அடையலாம். அவ்வளவு தான்.

## வாழ்க்கைச் செலவு ஆராய்ச்சியில் மட்டக்களப்பு விலக்கப்பட்டதேன்?

வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்காக சமீபத்தில் குடிமதிப்பு புள்ளி விவர இலாகாவினுல் நடத்தப்பெற்ற அகில இலங்கை ஆராய்ச்சியில் மட்டக்களப்பு மட்டும் தவிர்க்கப்பட்டது ஏன் என்ற காரணம் மர்மமாகவேயிருந்து வருகிறது.

நடுத்தர வகுப்பாரின் வாழ்க்கைச் செலவினங்களை நிதர்சனம் கண்டு கேட்டறிந்து ஒரு சரியான புள்ளி விவரத்தைத் திரட்டுவதற்கு குடிமதிப்பு புள்ளி விவர இலாகா சமீபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இலங்கையின் பிரதான நகரங்களிலும் அர்பன் பிரதேசங்களிலும் இந்த ஆராய்ச்சி நடைபெற்றது. சுமார் நாற்பது ஐம்பது ஆய்வாளர் இப்பணியில் ஈடுபட்டு உழைத்தனர்.

ஐ. நா. நிபுணர்களும், ஐ. எல். ஓ. நிபுணர்களும் இந்த ஆய்வாளருக்கு உதவிபுரிந்தனர் என்று தெரிய வருகிறது.

வட பகுதி தென் பகுதியெல்லாம் இந்த ஆராய்ச்சிக்குள் சேர்க்கப்பட்டிருந்தன. மட்டக்களப்பு மாவட்டம் மட்டும் தவிர்க்கப்பட்டு விட்டது.

மேற்படி ஆராய்ச்சியைத் தொடர்ந்து இப்பொழுது சுமார் ஓராயிரம் கிராமங்களில் வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

## கொழும்பில் தமிழர் திருநாள்

அகில இலங்கை பகுத்தறிவு இயக்கம் கொழும்புக் கிளையின் ஆதரவில் தமிழர் திருநாளாகிய பொங்கல் விழா 17-1-59 சனிக்கிழமை 4.30 மணிக்கு கொழும்பு விவேகானந்தா சபை மண்டபத்தில் கொண்டாடப்படும் என்று தெரிகிறது.

தலைவர் ஆ. வேலாயுதம். பேச்சாளர்கள்: திரு சி. சிவகுருநாதன், செல்வி பவளமலர் கந்தையா, திரு அல்வாய்க் கணபதி, திரு பெ. சாமி ஆகியோர்.

கொழும்புத் தமிழ்ச் சங்க சார்பில் 19-1-59 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் தமிழர் விழா கொண்டாடப்படும். தலைவர்: பண்டிதர் கா. பொ. இரத்தினம், பேச்சாளர்கள்: திருவாளர்கள் கு. பூரணனந்தா, அ. வெ. மயில்வாகனம், கி. லக்ஷ்மணன்.

## சுதந்திர சூரியன் மீண்டும் உதயம்



திரு என். ஆர். இராஜவரோதயம்

சுதந்திர சூரியன் மீண்டும் உதயமாகி விட்டான். தூங்காதே தமிழா, தமிழரைப் பிடித்த பீடை அகல வழிகாட்ட முன் வந்துவிட்டான். அவன் வருகை நல்வரவாகுக.

சுதந்திரன் தமிழனின் உரிமைக் குரல். அரசியல் சூதாடிகளால் தமிழனின் உரிமைக் குரல் சிலகாலம் தணிக்கப்பட்டிருந்தது. குரல்வளையில் இடப்பட்ட கரங்கள் அகற்றப்பட்டு விட்டன. முன்னர்போல் பாரபட்சம் இல்லாமல் உண்மையை உண்மையாம்படி எடுத்துரைப்பான்.

(9-ம் பக்கம் பார்க்க)

## அவசரகால நிலைமை '58

அவசரகால நிலைமை '58 என்ற ஆங்கில நூல் உலகெங்கும் பெயர் எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த வருடம் மே, ஜூன் மாதங்களில் நடந்த இனக் கலவரத்தின்போது நிகழ்ந்த அட்டுழியங்களை நடுநிலை நின்று அதன் ஆசிரியர் அதில் எழுதியிருப்பதாகவும் அதை ஒரு ஆதாரபூர்வமான சிறந்த நூலாகவே கொள்ளலாம் என்றும் அதற்குப் பாராட்டுரை வழங்கப்பட்டிருக்கிறது.

அடுத்த வாரச் சுதந்திரனில் அந்த நூல் விமர்சனம் செய்யப்படும். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அந்த நூலின் தகுதி என்ன என்பது விசேஷமாக ஆராயப்படும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்:

# நீலவேணி

"நவம்"

## (14)

## அஜந்தாவின் திகைப்பு.

'திடுதிப்' என்று நீலவேணியின் தலையில் ஒரு பெரிய அபாண்டத்தை அலாக்காக நிழல் மனிதன் தூக்கிப் போட்டது நேயர்களைப் போன்று அஜந்தாவையும் சற்றுத் திகைப்புக்குள்ளாக்கி விட்டது.

"இத்தனை வம்புக்கும் நீலா தான் காரணமா?" என்று கேட்டாள் அஜந்தா.

"இத்தனை வம்புக்கென்ன; இனி வரப்போகும் பிரளயத்துக்கெல்லாம்கூட நீலவேணிதான் காலாக இருக்கப்போகிறாள்!"

"திடீரென்று உங்கள் பேச்சின் வேகம் இப்படித் திசை மாறி ஒலிப்பது எனக்குக் குழப்பமாக இருக்கிறது. கொஞ்சம் தெளிவாகச் சொன்னால் நல்லது"

"அவ்வளவு பெரிய மர்மத்தை இவ்வளவு விரைவில் சொல்வதென்றால் இத்தனை நடிப்பும் எதற்கு? எல்லாம் வேளைவரும்போது கூறுகிறேன். மேற்கொண்டு என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்"

இப்படிக் கூறிய நிழல் மனிதனின் குரலில் தொனித்த உறுதியை அவதானித்த அஜந்தா மேற்கொண்டும் அதை வளர்த்துவதில் பலன் இல்லை என்று பேச்சை வேறு பக்கம் திருப்பினாள்.

"ஆமாம்; இவ்வளவும் செய்கிறீர்களே, நீங்கள் யார் என்பதை எனக்குக் கூறக்கூடாதா?"

"நானா? நான்தான் நிழல் மனிதன் என்று எடுத்த எடுப்பிலேயே என்னை அறிமுகம் செய்து கொண்டேனே நீங்கள் அவதானிக்கவில்லையா?" என்று ஒரு போடு போட்டுவிட்டு அவனே மீண்டும் பேசத் தொடங்கினான்.

"நகன் யார் என்பது தேவ ரகஸியமில்லை! மற்ற மனிதர்களைப்போல் நானும் ஒரு சாதாரண மனிதன்தான். நான் எடுத்துக் கொண்ட முயற்சி எவ்வளவு விரைவில் முடிகிறதோ அவ்வளவு விரைவில் என் வேஷமும் கலைக்கப்படும். அவசியம் நேர்ந்தால் தங்களைப்போன்றவர்களிடம், என் குறிக்கோள் நிறைவேறுவதற்குள்ளாகவே என்னை யார் என்று காட்ட வேண்டி ஏற்படலாம்....ம், சரி நீண்ட நேரம் பேசித் தீர்த்து விட்டேன். இந்த ரீதியில் பேச்சுக்குமுக்கியத்துவம்கொடுத்துக் கொண்டு போனால் என் லட்சியம் நிறைவேறிய மாதிரித்தான்! தவிரவும் எனக்கு இப்போ ஒரு முக்கியமான ஜோலி இருக்கிறது. நான் உடனே சங்கரன் மருத்துவமனையில் நுழைய வேண்டும். அங்கு சென்று டோரினின் உயிரை வாங்கிய சுழல் துப்பாக்கியை அதற்குரிய பேர்வழியான மியூறியலிடம் சேர்ப்பித்துவிட்டு வர வேண்டும். மேற்கொண்டும் அவளுக்கு இது மாதிரியான கைங்கர்யங்கள் செய்வதற்கு அது வேண்டுமல்லவா?

"தங்களை நான் டெலிபோனில் அழைத்ததே தங்களின் தேக நிலையைத் தெரிந்துகொள்ளத்தான். துப்பாக்கிவேட்டின் அதிர்ச்சியால் தங்களுக்கு ஏதும் நேர்ந்திருக்கலாமல்லவா? எதற்கும் டாக்டர் சங்கரன் இன்னும் சிறிது வேளையில் அங்கு வருவார். சிலவேளை நீலாவின் அண்ணா அழகேசனும் சங்கரனுடன் வரக்கூடும்..." என்று 'மள' மள' என்று பேசிவிட்டு அஜந்தாவின் பதிலுக்கே காத்திருக்காமல் 'டக்' கென்று டெலிபோன் தொடர்பை நிறுத்தினான் நிழல் மனிதன்.

இதுவரை தனக்கும் நிழல் மனிதனுக்குமிடையில் நடந்து முடிந்த டெலிபோன் பேச்சை நினைத்தபொழுது அஜந்தாவுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. "அடடா! நம்பரைக்கூடக் கேட்டுத் தெரிந்து வைக்காமல் போனேனே?" என்று தன் அசட்டுத் தனத்தைக் கடிந்து கொண்டாள்.

டாக்டர் சங்கரன் வருவதற்குள்ளாக சுவறிக்கிடந்த குருதியைத் தண்ணீர் கொண்டு கழுவிச் சுத்தம் செய்தாள் அஜந்தா. மற்றும் அங்கங்கே கிடந்த சாமான்களை எடுத்து ஒழுங்குபடுத்துவதில் முனைந்துகொண்டிருக்கும் போதே தோட்டப் பங்களாவுக்குள் உறுமிக் கொண்டு நுழைந்தது ஒரு கார்.

காரிலிருந்து சங்கரனும் அழகேசனும் இறங்கினார்கள். "வாருங்கள்" என்று அழைத்து இருவரையும் வரவேற்றாள் அஜந்தா.

வரும்போதே அழகேசனின் கண்கள் அகல விரிந்து கொண்டு அந்தப் பங்களா பூராவையும் ஒரு துழாவு துழாவியன. சங்கரனும் அதைக் கவனித்துக்கொண்டான்.

"தங்கள் வீட்டில் கடந்த இரவு நடந்த துயரச் செய்தியைக் கேள்விப்பட்டோம்" என்று பேச்சை ஆரம்பித்தான் சங்கரன்.

"கேள்விப்பட்டீர்களா? உங்களுக்கு யார் சொன்னார்கள்? நிழல் மனிதன்தான் சொல்லியிருப்பார்" என்றவள் சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டவள் போலக் குறுகினாள்.

"ஓகோ! நிழல் மனிதன் உங்களைவேறு விட்டுவைக்கவில்லையா?" என்றான் அழகு.

இனி மறைப்பதில் பலனில்லை என்று கருதிய அஜந்தா நடந்த விவரங்கள் யாவற்றையும் மறைக்காமல் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, "உங்கள் உடம்பை நன்கு கவனிக்கும்படி நிழல் மனிதன் எனக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறான். அதிர்ச்சியால் நீங்கள் பாதிக்கப் பட்டிருக்கிறீர்களா?" என்று கேட்டான் சங்கரன்.

"ஆமாம் அம்மா! சொல்லுங்கள். இல்லாவிட்டால் டாக்டரின் உயிரையே எடுத்து விடுவான் அந்தப் பொல்லாத மனிதன்! தம் டிஸ்பென்ஸரியில் எத்தனையோ 'அர்ஜண்டான' நோயாளிகள் 'அட்மிட்'டாகியிருந்தும், அவர்களைக் கவனிப்பதற்கே டாக்டருக்கு அநுமதிதர அந்த எமகாதகப்பேர்வழி மறுத்து விட்டான்! சற்று முன்னால் நானும், தங்கை நீலாவும் டிஸ்பென்ஸரிக்குப் போயிருந்தோம். சங்கரனைச் சந்திக்கவே முடியவில்லை. அவர் 'அஸிஸ்டன்ட்' தான் எங்களுக்கு மருந்து கட்டிவிட்டார். அங்கே கூட ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிட்டான் நிழல் மனிதன்!" என்று அடுக்கிக்கொண்டு போனான் அழகு.

அஜந்தாவுக்கு இதைக் கேட்டதும் டெலிபோன் சம்பாஷணை பளிச்சென்று ஞாபகம் வந்தது. அங்கு நடந்ததாக அழகேசன் சொல்லும் பரபரப்பூட்டிய சம்பவம் சுழல் துப்பாக்கியை நிழல் மனிதன் மியூறியலிடம் சேர்ப்பித்த கதையாகத்தானிருக்க வேண்டும் என்பதை ஊகித்துக்கொண்டாள். நேரடியாக அழகேசனிடம் அந்த விவரத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவள் மனம் துடித்தது. கேட்டாள்.

அழகேசனும் அன்று காலை டிஸ்பென்ஸரியில் நடந்த கதையை ஒன்றுவிடாமல் கூறிமுடித்தான்.

சங்கரனுக்குப் பொறுத்துப் பொறுத்து அலுத்துவிட்டது. தான்வந்த காரியத்தை மீண்டும் ஞாபகப்படுத்தினான்.

"தங்களுக்கு எந்தச் சிரமமும் வைக்காதபடி என் அதிர்ச்சி எப்போதோ நீங்கிவிட்டது. எனக்கு வைத்திய உதவி தேவையில்லை!" என்று சொல்வதற்கிடையில் நிழல் மனிதன் அவசரப்பட்டு டெலிபோன் தொடர்பை அறுத்துக்கொண்டான். என்றாலும், நீங்கள் இங்கு வந்ததும் ஒருவகைக்கு நல்லதாயிற்று. நிழல் மனிதன் நெஞ்சுறுதி பற்றி எவ்வளவோ தெரிந்து கொண்டேன்" என்றவள் திடீரென்று அழகேசன் பக்கம் திரும்பி, "நீலவேணியை நான் பார்க்க வேண்டுமே?" என்றாள்.

"நீலா தரிசனம் பெற வேண்டுமென்றால் மிஸ்டர் சங்கரன் டிஸ்பென்ஸரிக் கல்லவா போகவேண்டும்" என்றான் அழகேசன். அஜந்தா அப்படியே திகைத்து விட்டாள்.

## (15)

## இந்துமதி

சற்றும் எதிர்பாராத வகையில் மியூறியலிடமிருந்து கிடைத்த அந்தக் கடிதத்தை அருகே நின்ற அழகேசனிடம் தந்தாள் நீலவேணி.

அதை வாங்கிப் படித்த அழகேசன் நீலவேணியை நிமிர்ந்து பார்த்தான். 'நீ போவதென்றே தீர்மானித்துவிட்டாயா?' என்று கேட்பதுபோலிருந்தது அவன் பார்த்த அந்தப் பார்வை!

"என்ன அவசர காரியமோ தெரியவில்லை. போகாமல் விடுவது இங்கிதமில்லை. பண்புள்ள அவள் உள்ளம் புண்பட்டுவிடும். நீயும் வா. உடனேயே திரும்பிவிடுவோம்" என்று குழைந்தாள் நீலா.

நீலவேணியின் அப்போதைய மனப்போக்கைப் புரிந்துகொண்ட அழகேசன், அவளைத் தடுப்பதில் பிரயோஜனம் இல்லை என்று கண்டு, "மன்னிக்க வேண்டும் நீலம், எனக்கு முக்கிய ஜோலியொன்று இருக்கின்றது. தவிரவும் காயங்கள் கூடச் சற்றுக் கரிக்கிறது. நீ வேண்டுமானால் போய்விட்டு வா" என்று கூறி வைத்தான்.

அழகுவின் மன இயல்பைத் தெரிந்துவைத்திருந்த நீலாவும் அதற்குமேல் ஒன்றும் கூறாமல் காரில் ஏறப் போனாள். காரில் ஏறிக் கொண்டே, "எனக்குத் தெரியும் உனக்கிருக்கும் தலைபோகிற வேலை என்ன என்று!" என்று ஒரு போடு போட்டாள்.

"உனக்குத் தெரியுமா?"

"ம்..." என்று 'ஊம்' கொட்டிவிட்டு சேலையைச் சரிப்படுத்தினாள் நீலா.

அழகேசன் கொஞ்சம் கலவரமடைந்துவிட்டானென்றே சொல்ல வேண்டும். இருந்தும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், மெள்ள காருக்கு அருகில் நெருங்கி வந்து, "நீ கண்டுவிட்ட துப்பு இருக்கிறதே, அதை எங்கே கொஞ்சம் கக்கு பார்க்கலாம்" என்றான்.

"எல்லாம் பின்னால் சொல்லுகிறேன். இப்பொழுது அவசர அழைப்பு வந்திருக்கிறது" என்று தப்பிக்கொள்ளப் பார்த்தாள் நீலா.

அழகேசன் ஒரு விடாக்கண்டன் என்று தெரிந்து வைத்திருந்தும் இப்படிச் சொன்னாள்.

"தொடர் கதை எழுதுகிறவர்கள், தங்கள் கதையோடு வாசகநேயர்களை இழுத்துக்கொண்டு செல்வதற்காக அவர்களுக்கு ஒரு அங்கலாய்ப்பை ஏற்படுத்தும்வண்ணம் நெருக்கடியான கட்டத்தில் 'தொடரும்' என்று போட்டுவிடுவது போலல்லவா இருக்கிறது 'எல்லாம் பின்னால் சொல்லுகிறேன்' என்று நீ சொல்வதும்" என்று தன் எழுத்துலக அநுபவ பாணியில் தங்கையை நெருக்கினான் அழகேசன்.

"இன்று புறப்பட்டமாதிரி தான்" என்று தனக்குள்ளேயே முன்யோசனையில்லாமல் தான் உளறியதைச் சபித்துக்கொண்டு சொன்னாள் நீலா.

(15-ம் பக்கம் பார்க்க)





குடும்பத்திற்குகந்த
நவீன பொரேட்டட்
பவுடர்

மிக்காடோ
மெட்ரோ
டல்கம் பவுடர்

மிருதுவாக வாசனையூட்டப் பெற்றது.

உங்களது வியாபாரியிடம் அல்லது எங்களிடம் கேட்டு வாங்குங்கள்.

மிக்காடோ அன் கம்பெனி,
டாம் வீதி, கொழும்பு.
போன்: 3242

போன்: 281. தந்தி: "ஜுவல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள் !
அழகிற் சிறந்த ஆபரணங்கள் ! !
யாவற்றிற்கும்
ஈழத்திருநாட்டில் இணையற்ற ஸ்தாபனங்கள்

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ் & தங்க மாளிகை

யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள எல். கே. எஸ். நகைகளையே அணிந்து ஆனந்தமடையுங்கள்.
கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சீனுவில் சிறுபான்மையோருக்கு சுயாட்சி, மொழி உரிமைகள்

## 6 சத வீதத்தினருக்கு பாராளுமன்றத்தில் 14 சத வீதமான ஸ்தானங்கள்

### அடக்குமுறை, அவமதிப்பு, இன ஒதுக்கல் எதுவுமில்லை அங்கே; ஆனால் இங்கே.....?

(மு. சிவானந்தம் பி. ஏ. (ஆனர்ஸ்)

பதுளை தருமதாதர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. மு. சிவானந்தம் கடந்த ஆண்டில் இலங்கை ஆசிரியர் நல்லெண்ணத் தூதுக்குழுவில் ஒருவராகச் சீன சென்று திரும்பினர். அவர் சேர்ந்து சென்ற கோஷ்டி ஒருமாத காலமாக நவசீன, ஹொங்கொங், பாங்கொக் முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தது.

பீக்கிங்கில் உள்ள தேசியச் சிறுபான்மையோர் நிறுவனத்துக்குச் சென்றபோது, நிறுவனத்தின் செயலாளரான திரு. லியாங்—சூ—வென் நேரில் கொடுத்த தகவல்கள், புள்ளி விவரங்கள் முதலியவற்றையும், ஆசிரியர் நேரில் கண்டவற்றையும் ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை தீட்டப் பெற்றதாகும்.

ஈழத்திலுள்ளது போல் பல் வேறு நாடுகளிலும் சிறுபான்மையோர் சிக்கல்கள் எழுந்துள்ளன. பல நாடுகள் சிக்கலைத் தீர்ப்பதற்கு நேரிய வழிகளைக் கைக்கொண்டுள்ளன. மொழியுரிமையிழந்து, குடியுரிமையின்றி, வாழும் உரிமைக்கே ஈழத்துச் சிறுபான்மையோர் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், சீனவிற் சிறுபான்மையோர் சிக்கலை எவ்வாறு தீர்க்க முற்பட்டுள்ளனர் என்பதை அறிதல் சாலவும் பொருந்தும். செஞ்சீன சென்று திரும்பிய இலங்கை ஆசிரியர் நல்லெண்ணத் தூதுக் குழுவினருள் ஒருவனாகிய எனக்கு இதுபற்றியறிய ஓரளவு வாய்ப்புக் கிட்டியது. பொதுவுடமை ஆட்சியின் விளைவுகள் என்னவாயிருப்பினும் அங்கு சிறுபான்மையோர் சிக்கல்களைத் தீர்க்க முற்பட்டிருக்கும் முறை போற்றத் தகுந்தது.

#### சம உரிமைகள்

1954-ம் வருடம் கணக்கெடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் படி, சீனவின் மொத்த மக்கட் தொகை 60 கோடி. இதிலே மூன்றரைக் கோடி பேர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆறு சத வீதத்தினராயினும் 60 சத வீதமான இடத்திலே வசிக்கிறார்கள். வடமேற்குப் பகுதியிலும், தென்மேற்குப் பகுதியிலுமே பெருமளவில் வாழ்கிறார்கள். 45 வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்தச் சிறுபான்மையோர். 1949-ம் ஆண்டுக்குப் பின்னர் இவர்கட்குச் சட்டரீதியாக ஹான் (Hans) என்ற பெரும்பான்மை யினத்தவருக்குச் சமமாகச் சகல உரிமைகளும் வழங்கப் பட்டுள்ளன.

#### சுயாட்சி

சிறுபான்மையோரது மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவை பூரணமான வளர்ச்சியடைய அவர்களுக்கெனச் சுயாட்சி (Autonomy) வழங்கப் பட்டுள்ளது. எங்கெங்கு சிறுபான்மையோர் பெருமளவில் வசிக்கிறார்களோ அங்கங்கெல்லாம் அவர்களுக்கெனத் தனியாட்சி மன்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. பிரதேசம் பெரிய அளவில் இருந்தால் மாவட்ட ஆட்சியும், சிறிய பிரதேசங்களில் வட்ட மன்றங்களும் (District Councils), கிராமச் சங்கங்களும் (Country Councils) இன அடிப்படையில் ஆக்கப்பட்டுள்ளன. உதாரணமாக உள்மொங்கோலியா, திபெத்து, சிங்கியாங், ஊசூர் பிரதேசங்களில் மாவட்ட அரசுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. உள் நாட்டு நிர்வாகம், நீதி நிர்வாகம், கல்வி, தொழில் முதலிய பொறுப்புக்கள் இவ்வரசுகளிடம் தரப்பட்டுள்ளன.

#### பாராளுமன்ற ஸ்தானங்கள்

செஞ்சீனவின் பாராளுமன்றமான தேசிய மக்கள் காங்கிரசின் (National peoples' Congress) 1226 உறுப்பினருள் சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் 177 பேர். அதாவது மொத்த மக்கட் தொகையில் 6 சத வீதமான சிறுபான்மையினருக்கு 14 சத வீதமான ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

#### இழிவு இல்லை

1949க்கு முன்னர் சில இனத்தவர்கட்கு இழிவான பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. பெரும்பான்மை இனத்தவர்களால் இவர்கள் நாயினுங் கீழாய் மதிக்கப் பட்டார்கள். ஆனால் இன்றோ அவமானமான அப்பெயர்கள் நீக்கப் பெற்றுப் புதுப்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. "சிறுபான்மை இனத்தவர்கள் இழிந்தவர்கள்; பெரும்பான்மை இனத்தவர்களான ஹான் வம்சத்தினர் தான் நாகரிகமானவர்கள்; பண்பாடுடையவர்கள்" என்ற போலி மனப்பான்மை முன்னே வளர்ந்து வந்தது; வளர்க்கப்பட்டும் வந்தது. இந்த மனப்பான்மை வளர்ந்து வந்தமை பிரித்தாளுபவர்களுக்குப் பெருமுதவியாயிருந்தது. ஆனால் இன்று சிறுபான்மை இனத்தவர்களுக்குச் சகல உரிமைகளும் கொடுத்து, அவர்களுக்கான முன்னேற்றத்தில் போதிய கவனம் செலுத்தப் படுகின்றமையினால் எல்லா இனத்தவர்களும் ஒன்று சேர்ந்து பொருளாதார முன்னேற்றத்திற்காக உழைக்கிறார்கள். இன, மத வேறுபாட்டுச் சிக்கல்களில் நாட்டின் உழைப்புச் சக்தி விரயமாவதில்லை.

#### உரிமை மொழி

சிறுபான்மையினருக்கு மொழியுரிமையும் வழங்கப் பட்டிருக்கின்றது. சுய ஆட்சி பிரதேசங்களிலே தம் சொந்த மொழியிலேயே நாட்டு நிர்வாகத்தை நடத்தும் உரிமை கொடுக்கப் பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்துடன் கடிதப் போக்கு வரத்தென்றாலும் தமது மொழியையே பயன் படுத்துகிறார்கள். வேண்டிய மொழி [illegible] ரான பீக்கிங்கில் நடைபெறுகின்றது. 1941-ம் ஆண்டில் குவைசோ (Kweichow) மாவட்டத்தில் மீயோ (Mioa) என்னும் இனத்தவர்கள் தமது மொழியைப் பொதுவிடங்களிற் பேசலாகாது என்னும் ஆணை ஆட்சியாளர்களால் பிறப்பிக்கப் பட்டது. இன்றோ இத்தகைய ஆணைகள் எதுவுமேயில்லை.

#### பத்திரிகை வானொலி

சிறுபான்மையோர் மொழிகளிலே பல செய்தித் தாள்கள் வெளியிடப் படுகின்றன. 1953ல் பீக்கிங்கில் சிறுபான்மை மொழிகளின் வெளியீட்டகம் (Minorities' languages publishing house) நிறுவப்பட்டது. பல நூல்கள் மொழிபெயர்க்கப் பட்டும், புது நூல்கள் ஆக்கப் பெற்றும் வருகின்றன. சிறுபான்மையினரின் பண்பாட்டு வளர்ச்சிக்கான வானொலி நிகழ்ச்சிகளும் அந்தந்தப் பகுதிகளிலே ஒலி பரப்பப்படுகின்றன.

#### கலை நிகழ்ச்சிகள்

சிறுபான்மை யினத்தவர்களின் கலை நிகழ்ச்சிகளுக்கு எங்கும் நல்ல வரவேற்புக் கிடைக்கின்றது. சீனவின் மத்திய கிழக்கிலிருக்கும் கவின்பெரு நகரான கன்சோவில் (Hanchow) நாம் தங்கியிருக்கும் போது வடமேற்கிலுள்ள மொங்கோலியரது கலை நிகழ்ச்சி யொன்றிற்குச் சென்றிருந்தோம். 24 மணி நேரத்திற்கு முன்னரே அனுமதிச் சீட்டுக்கள் யாவும் விற்றொழிந்து விட்டமையினால், எமக்கெனத் தனியிடம் ஒழுங்கு செய்தார்கள். ஆயிரக் கணக்கில் கூடியிருந்த அனைவரும் சிறுபான்மையினத்தவர்களின் கலை நிகழ்ச்சிகளைச் சிறந்த முறையில் ரசித்தார்கள்.

#### மே தினத்தில்

பொதுவுடைமையாளர் பக்திசிரத்தையோடு கொண்டாடும் மே தினத்தன்று கூடச் சிறுபான்மையோருக்குச் சிறப்புண்டு. மே தினப் பவனியில் அவர்கள் தமது வழக்கமான உடைகளோடு காட்சி தருகிறார்கள். நடனக் குழுக்களும், இசை வல்லுனரும் பவனியில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். நாம் சீனவின் தொழிற்பெரு நகரானசங்காயிலே (Shanhai) மே தின விழாவில் கலந்து கொண்ட போது இத்தகைய காட்சிகளை நேரிலே காணும் அரிய வாய்ப்பினைப் பெற்றோம்.

#### பொது இடங்களில்

சிறுபான்மையோரைப் போற்றி வாழ்த்தும் நல்லுரைகள் பொதுவிடங்களிலே காணப்படுகின்றன. ஒரு ரயில் நிலையத்திலே, சிறுபான்மையினத்தவர்களின் படங்கள் வரையப் பெற்று, அவற்றின்கீழ் வாழ்த்துரை பொறிக்கப்பட்டிருந்ததை நேரிலே கண்டு இறும்பூதெய்திய வேளையில் ஈழத்தில் சிறுபான்மையோர் பெற்றிருக்கும் மதிப்பை எண்ணிக் கவலையுற்றோம்.

(அடுத்த இதழில் முடியும்)

## மருமகனே கண்வளராய்!

'நானுமானு'

ஆராரோ, ஆரிரரோ! ஆரமுதே கண்வளராய்!
சீராரு மிலங்கையிலே சீரோடு வாழ்ந்திருந்தோம்,

பாராளு மன்றத்தில் பாங்காய்க் கொலுவிருந்து
ஊராளு மங்கத்தோர் ஊதிவிட்ட தீப்பொறிபோய்க்,

காலி, கண்டி, கொழும்பின்னும் காணு விடம் பலவும்
காலிகளின் தீச்செயலால் காட்டுத்தீ பாச்சுதடா!

மூலை முடுக்கெல்லாம் மூண்டுவிட்ட தீயதனால்
வேலையற்ற அரக்கரவர் வேகவைத்தார் தமிழர்களை!!

அடக்கு முறைதனையே அமுலாக்கி யரசாள்வோர்
மடக்கிவிட்டா ரெமையென்றே மகிழ்ந்திட்டா ரென் கண்ணே!

அலைசூழக் கப்பலிலே அகதியாய் வந்தவனே!
நிலையுணர்ந்தே நீசர்தமை நின்றெதிர்த்து வாழ்ந்திட நீ

உறக்கமிலா திரவுபகல் உழைத்திடவே வேண்டுமதால்
உறங்கிடுவா யிந் நேரம்! உறுதுயில் நீ கொண்டிடுவாய்!

ஆராரோ, ஆரிரரோ! ஆரமுதே கண்வளராய்!
வாயாரப் பலர் புகழ வாழ்ந்திடுவாய், கண்வளராய்!

தொட்டிலிட்டுத் தாலாட்டித் தொட்டு மகிழ்ந்துனையே
இட்டமுட னெடுத்தணைக்க இல்லையடா அன்னையிங்கு!

பண்டாவின் ஆட்சியிலே பட்டப் பகலினிலே
உண்டான படுகொலையில் உயிரிழந்தவுன் தந்தை

நினைவினிலே யினையின்று நெடும்பயண மானுனைக்
கனவினிலே கண்டுள்ளம் களிப்பெய்தக் கண்வளராய்!

கட்டிக் கரும்பேயென் கற்கண்டே, கனிரசமே
மட்டில்லா மகிழ்வுடனென் மருமகனே கண்வளராய்!!



## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை யெழுத விரும்புவர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெறாத அட்டைகள் கவனிக்கப்பட மாட்டா.

### போட்டி இல : 3

இந்த மூன்றாவது வெண்பாப் போட்டிக்கு "தொல்லைகள் நம் காலில் தூசு" என்ற ஈற்றடி தரப் பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப் படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப் படும்.

—ஆசிரியர் : சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
C/o ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1183.
கொழும்பு—12.

வெண்பாக்கள்
கிடைக்க வேண்டிய
முடிவு திகதி
25—1—1959

தொல்லைகள் நம் காலில் தூசு

சுதந்திரன்
இன்றேல்
சுபீட்சமில்லை

## பிரதிநிதிகள் தேவை

இலங்கையின் பிரதான பட்டணங்களில் எல்லாம் சுதந்திரனுக்கு செய்திகளும், விளம்பரங்களும் திரட்டக்கூடிய பிரதிநிதிகள் தேவை. கல்வித் தராதரம், வயது முதலியவற்றைக் குறிப்பிட்டு, இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர் : சுதந்திரன்.

194 ஏ, தட்டா தெரு.
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்புக் காவலில் மூன்று மாதங்கள்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

பொலீஸ் சுப்ரின்ரென்டென்ட் ஜில்லா கேட்ட கேள்வி எங்கள் இருவரையும் சிரிப்பில் ஆழ்த்தியது.

"உங்கள் இருவரையும் கொழும்புக்கு வருமாறு கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலகா கேட்டுக் கொள்ளுகிருர். நாளை (ஜூன் 3, 1958) காலை அம்பாறை விமான நிலையத்தில் ஒரு பிரத்தியேக விமானம் உங்களை அழைத்துச் செல்ல அனுப்பப்படும். அந்த விமானத்தில் நீங்கள் இருவரும் புறப்பட்டுச் செல்ல வேண்டும். மறுத்தால் உங்கள் இருவரையும் என்னுடைய பாதுகாப்பில் வைத்திருக்குமாறு கேட்கப்பட்டிருக்கின்றது. என்ன சொல்லுகிறீர்கள்?"—இப்படித்தான் திரு ஜில்லா கேட்டார்.

நாங்கள் சிரித்து விட்டு கவர்னர் ஜெனரலுடன்பேச விரும்புவதாகக் கூறிேனும். திரு ஜில்லா தொலைபேசி மூலம் கவர்னர் ஜெனரலுடன் பேசுவதற்கு ஏற்பாடு செய்துதந்தார். முதலில் திரு அமிர்தலிங்கம் பேசினர்.

## கவர்னர் ஜெனரலுடன் பேச்சு

"மட்டக்களப்பிலிருந்து வவனியா மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த ஒரு குழுவினர் இங்கு வந்து

## மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை

கொள்ள முடியாது தடைபட்டிருந்ததால் நானும் என் மனைவியும் அவர்களை அழைத்து வந்தோம். எங்களை மட்டக்களப்புபொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

இக்கேள்வி கவர்னர் ஜெனரலுக்கு அதிர்ச்சியை அளித்திருக்க வேண்டும். "நீங்கள் (திரு அமிர்தலிங்கம்) ஒரு கோஷ்டியோடு மட்டக்களப்பை வந்து அடைந்திருக்கிறீர்களாம். எனக்கு மட்டக்களப்பிலிருந்து செய்தி வந்திருக்கின்றது" என்று கவர்னர் ஜெனரல் குறிப்பிட்டார். தன்னுடன் வந்த குழுவினரின் பெயர்களை திரு அமிர்தலிங்கம் கூறினர். கவர்னர் ஜெனரல் திரு ஜில்லாவுடன் சம்பாஷணை நடத்தினர். கவர்னர் ஜெனரல் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்தியைக்கொண்டு வருமாறு பொலீஸ் சுப்ரின்ரென்டென்ட் திரு ஜில்லா உரத்த குரலில் உத்தரவிட்டார். ஒரு உயர்தர பொலீஸ் அதிகாரி குறிப்புப் புத்தகமொன்றைக்கொண்டு வந்து கொடுத்தார். பொலீஸ் சுப்ரின்ரென்டென்ட் அப்புத்தகத்திலுள்ள பெயர்களை வாசித்தார்.

### பதில்

திரு அமிர்தலிங்கமும் குழுவினரும் மட்டக்களப்புக்கு வந்தது சம்பந்தமாக கவர்னர் ஜெனரல் மாளிகைக்கு மட்டக்களப்பிலிருந்து அனுப்பப்பட்ட செய்தியில் ஏதோ சில தவறுகள் இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். கவர்னர் ஜெனரல் திரு அமிர்தலிங்கத்திடம் பன்னிரண்டு மணித்தியாலங்கள் மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் அவர்கள் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டதற்கு மன்னிப்புக் கேட்டார். என்னுடனும் அவர் பேசவிரும்பினர். அவருடைய குரலில் மிகவும் கனிவு காணப்பட்டது. கொழும்புக்கு வந்ததும் தன்னைச் சந்திக்குமாறு தொலைபேசியில் கேட்டுக் கொண்டார். நாங்கள் அடுத்த நாள் கொழும்பு வர இருக்கின்றேம் என்று கூறியதன்பேரில் மட்டக்களப்பு பொலீஸ் சுப்ரின்ரென்டென்ட் ஜில்லாவிடம் எல்லோரையும் உடனடியாகவிடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

### ஊரடங்குச் சட்டம்

இச் சம்பாஷணைகளின் போது நேரம்போனதே தெரியவில்லை. மாலை மணி 6-45 ஆகிவிட்டது. அப்போது ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தது. ஆறு மணிக்குமேல் மனித நடமாட்டம் தடுக்கப்பட்டிருந்தது. ஊரடங்குச் சட்டமென்றல் என்னவென்று புரியாத கிராமிய மக்கள் பலரின் உயிரை பொலீஸாரினதும் இராணுவத்தினரதும் துப்பாக்கிகள் பறித்தெடுத்துக்கொண்டிருந்த நாட்கள் அவை. புத்தி சொல்லி, எச்சரிக்கைசெய்து துரத்திவிடாமல் மனித உயிர்களை "சிட்டுப் புட்களைப்"போல் இந்நாட்டு இராணுவத்தினர் ஈவு இரக்கமின்றி அபகரித்த தினங்கள் அவை!

எங்கள் வீடுகளுக்குச் செல்ல பொலீஸ் சுப்ரின்ரென்டென்ட் ஜில்லா தன் காரைக் கொடுத்துதவினர். வவனியா மாநாட்டு [illegible] ணம்வரை 'மடமட'வென்று பேசி முடித்தோம்.

### உருக்கமான பிரியாவிடை

அடுத்த நாட் காலை, கொழும்பு செல்வதற்காக புறப்பட்டுக்கொண்டிருந்தேன். என் மகள் பூங்கோதை 'ஐயா 'சொக்கலேட்' வாங்கி வாருங்கள் கொழும்பிலிருந்து" என்று என் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கொஞ்சினுள். அவள் பளிங்கு கன்னத்தில் முத்தமிட்டு அனுப்பிவிட்டு பொலீஸ் நிலையத்திற்குச் சென்றேன். அங்கு திரு அமிர்தலிங்கத்தையும் என்னையும் அழைத்துச் செல்ல ஜீப் வண்டி ஆயத்தமாய் இருந்தது. திருமதி அமிர்தலிங்கம் பொலீஸ் நிலையத்தில் தம் அருமைக் கணவரை வழியனுப்பினர். அந்தக் காட்சியைக் கண்டவர்கள் கண் கலங்காமல் இருக்க முடியாது. அவர்களின் ஒன்றரை வயது குழந்தை காண்டீபன் யாழ்ப்பாணத்தில். அன்பு மனைவி மட்டக்களப்பில். அவர்களையெல்லாம் விட்டுவிட்டு நண்பர் அமிர்தலிங்கம் கொழும்பு புறப்பட ஆயத்தமானர்.

இருவரும் வண்டியில் ஏறி உட்கார்ந்தோம் நகரத்தெருவீதிவழியாக வண்டி செல்லும்போது தெருவின் இருமருங்கும் பல கனிவு ததும்பும் முகங்கள் எங்களைப் பரிவோடு பார்த்தன. கரங் கூப்பி வணங்கின. கைகளை உயர்த்தி வழியனுப்பின.

### இராணுவப் பொலிவு

எங்கள் வண்டியில் ஆயுதபாணிகளான பொலீஸார் கூடவே வந்துகொண்டிருந்தனர்.

வண்டியை ஒரு இன்ஸ்பெக்டர் செலுத்திக் கொண்டு வந்தார். எங்கள் வண்டியைத் தொடர்ந்து ஒரு இராணுவ ஜீப் வந்து கொண்டிருந்தது. அந்த வீரர்களின் கைகளில் சுழல் துப்பாக்கிகள் இருந்தன.

நாங்கள் அம்பாறை விமான நிலையத்தை அடையவும் விமானம் புறப்படவும் நேரம் சரியாக இருந்தது. விமானத் தளமெங்கும் இராணுவ வீரர்கள் துப்பாக்கிகள் சகிதம் காவல் புரிந்து கொண்டு நின்றனர்.

முன்பு தெரிந்த சில பொலீஸ் அதிகாரிகள் சிரித்த வண்ணம் நெருங்கி வந்து, கைகுலுக்கினர். விமானத்தில் ஏறப்போகும் சமயம் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பு அதிகாரி கேர்னல் உடுகம கைகுலுக்கிய வண்ணம் வழி அனுப்பி வைத்தார். "சிறந்த ஒரு பிரயாணம் இன்று உங்களுக்கு" என்று சொன்னுர் இராணுவ அதிகாரி உடுகம.

சிரித்தபடி நான் "ஏன்"? என்று திருப்பிக் கேட்டேன். "பிரத்தியேக விமானத்தில் அதிலும் இராணுவ விமானத்தில் செல்வது" என்று ஒருமாதிரிக் கூறினுர்.

### உள்ளே முஸ்தபா


விமானத்தில் நுழைந்ததும் முதலில் கண்ணில்பட்டவர்கள் இராணுவ வீரர்களே. விமானச் சாரதியும் ஒரு இராணுவ வீரரே. அந்த விமானத்தில் ஒரேயொரு அறிந்த மனிதர் இருந்தார் அவர்தான் பொத்துவில் பிரதிநிதி ஜனப் எம். முஸ்தபா.

"ஹலோ ராஜா" என்று அவர் வரவேற்ருர். விமானம் மேலெழுவதற்கான விளக்குகள் காட்டப்பட்டன. ஆசனங்களுடன் பொருத்தப்பட்ட பெல்ட்டுகளை ஒவ்வொருவரும் எடுத்துப் பூட்டிக்கொண்டோம். விமானம் ஆகாயத்தில் எழுந்து பறந்து சென்றது.

(தொடரும்)


# "அரஸ்கோ"

## தையல் மெஷின்களையே நீங்கள் தெரிவு செய்யுங்கள்



தோற்றம்—தயாரிப்பு—வேலைத்திறன்—உழைப்பு—பாவிப்பு எதிலும் வேறு எந்தத் தையல் மெஷினும் இதற்கு இணையாகாது

★ அரஸ்கோ தையல் மெஷின்கள் தரத்தில் உயர்ந்தவை. வேறு எந்த மெஷினுக்கும் குறைந்தவையல்ல என்பதற்கு உத்தரவாதமுண்டு.

★ அரஸ்கோ தையல் மெஷின் உப-உறுப்புக்கள் எங்களிடம் ஸ்டாக்கில் உண்டு. வேறு மார்க்கட்டிலுள்ள தரமான தையல் மெஷின் உப-உறுப்புக்களும் அரஸ்கோவுக்குப் பாவிக்கலாம்.

★ அரஸ்கோ தையல் மெஷின்கள் பத்துக்கு அதிகமான அழகிய மாடல்களில் எங்களிடம் கைவசம்

ஒருமுறை விஜயம் செய்து நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

சுலபமான தவணைகளில் பணம் செலுத்திப் பெற வசதியுண்டு.

பலவர்ணப்-பொத்தான்கள், நூல் வகைகள் முதலியவைகளும் மற்றும் தையலுக்கு வேண்டிய சகல உபகரணங்களும் மிகவும் சகாயமான விலையில் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும் இதர விபரங்களுக்கும் விலைப் பட்டியலுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

**ஆர். அரசரத்தினம் & கோ.,**

43, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்:-

106, ரெக்ளமேஷன் வீதி, கொழும்பு.

தந்தி: "கந்தவருன்" டெலிபோன்: 79970.


## ஊசிப் பட்டாஸ்

18 வயதுப் பெண்பிள்ளை சுயம்வரம் நடத்த உரித்துடையவளானல் ஏன் 18 வயதுடையவர்கட்கு வாக்குரிமை வழங்கக் கூடாது?

கம்யூனிஸ்ட் தோழரின் பேச்சு

மலைநாட்டு ராமசாமி, மீனுட்சிகள் எல்லாம் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தாம். அவர்களுடைய வாக்குரிமைக்கும் இப்படி அகோரமாகப் போராடினர்கள் என்றல்......!

தொப்பித் தோட்டப் பெண்ணின் ஏக்கம்

ஃ

"மத்திய வங்கியின் தலைமைப் பதவி யாருக்குக் கிடைக்கும்?"

தினசரி சோதிடப் பத்திரிகையின் தலைப்பு

பொருளியல், நிதியியல், வங்கியனுபவம் முதலியவற்றில் சூன்யமும் 'பெரியோர்' பக்தியில் தலைசிறந்தவருமானஒருவருக்கு கிடைக்கும் என்கிருர் இலங்கை அரசாங்கத்தின் வழமைகளையறிந்தவர் ஒருவர்.

ஃ

மண்டு: பிரதமர் பண்டாவின் சஷ்டியப்தபூர்த்தி தினத்தன்று மலைநாட்டுத் தமிழினத்திற்குச் சூன்யம் செய்யும் மசோதா நிறைவேறினது என்ன விளைவுக்குச் சகுனமாகும்?

சிண்டு: இலங்கையின் ஒற்றையாட்சி என்ற சகாப்தமும் பூர்த்தியாகிறதென்பதற்குத்தான்.

ஃ

பஸ் தொழிலாளர்கட்கு இன்னும் ஏழு நாள் (இரட்டிமடங்கு) மருத்துவ "லீவு"

பத்திரிகைச் செய்தித் தலைப்பு

"வெதருளை" என்ற மருத்துவர்கட்கு இரட்டிப்பு வருவாய் என்கிருர் மூலிகை பிடுங்குகிறவர்.

ஃ

"ருஷியாவிலும், சீனவிலும் பொலீஸ் படையும், சேனையும் மகாஜனங்கட்குப் பாதுகாப்புக் கொடுக்கின்றன."

ஒரு பாராளுமன்றப் பிரதிநிதி பேச்சு

யாரிடமிருந்து பாதுகாக்க வேண்டியிருக்கிறது என்று கேட்கிருர் ஒரு சந்தேகப் பிராணி.

ஃ

மைத்திரிபால சேனநாயகா மந்திரியாரை நோக்கி "75000 ரூபாய் செலவழித்து வீடு கட்ட பணம் எங்கிருந்து கிடைத்தது" என்று திரு சுந்தரலிங்கம் கேட்டதற்கு "வெளியிலே வந்து அதைத் திரும்பச் சொல் பார்க்கலாம்" என்று சவால் விடுகிருர் மந்திரியார்.

பத்திரிகைச் செய்தி

"நோ கொம்மென்ந்" அதாவது குறிப்புரைதேவையில்லையேயென்கிருர் ஒரு வாசகர்.

ஃ

பிச்சையெடுத்தலை சட்டவிரோதமான குற்றமாக்கு தொழில் மந்திரியார் மசோதா தயாரிக்கிருர்.

பத்திரிகைச் செய்தி

பிறநாட்டரசாங்கங்களிடம் மந்திரிகள் பிச்சைக்குச் செல்லுதல் விதிவிலக்காக்கப்படும் என்று எண்ணுகிருர் வீதியில் இருக்கும் பிச்சைக்காரர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

வி. மரியநாயகம், கிளிநொச்சி

கே: வாழ்க்கை சிலருக்குக் கசப்பதேன்.

ப: சுவைத்து அனுபவிக்கத் தெரியாததால். சுவைத்துண்ணத் தெரிந்தவனுக்கு அபின் கூட இனிக்கிறதல்லவா?

கே: இரண்டு கைகளிலும் ஆறுறு விரல்கள் உள்ளவர்கள் அதிர்ஷ்டக் காரர்களாமே உண்மையா?

ப: ஆம், உண்மைதான். பாலப்பருவத்தில் கணக்கு வாத்தியாரிடம் குறைய அடிபட்டிருப்பார்கள். ஆறும் ஆறும் எத்தனை யென்பதை அவர்கள் விரல் எண்ணிச் சொல்லிவிடலாமே!

கே: ஆறு போய்க் கடலில் விழுவது எதைப் போன்றது?

ப: சோறு போய்க் குடலில் விழுவதைப் போன்றது.

ஃ

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி

கே: ஒரு ஆடவனுக்குப் படுக்கை அறையிலும் போர்க் களத்திலும் வேண்டிய ஒரே பொருள் எது?

ப: ஆண்மை!

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்

கே: திருமதி விமலா விஜயவர்த்தன சிறையிலிருந்து ஊசியும் மெழுகுவர்த்தியும் (Needles and Candles) கொண்டு வந்திருக்கிறாரே எதற்காக?

ப: குளறுபடி தஹநாயகா போன்ற சில மந்திரிகளின் உளறு வாயைத் தைத்து மெழுகினால் "சீல்" வைப்பதற்காக.

கே: காதல் என்ற கூதலுடன் 'தடை' என்ற காய்ச்சலும் சேர்ந்து வந்து விட்டால் கல்யாணம் என்ன செய்யும்?

ப: காய்ச்சலின் வேகத்தால் கலியாணம் பொசுங்கி விடும்.

ஃ

டி. ஆர். குலசிங்கம், தாவடி

கே: தாங்கள் ஏழரை மாதம் எங்கு பதுங்கியிருந்தீர்கள்?

ப: ஏழரை பிடித்து அவசரகாலம் என்ற பண்டாரவின் அண்டாவுக்குள் பதுங்கிக் கொண்டிருந்தேன்!

ஃ

ஓ. எல். ஏ. மர்சூக், வெல்பாதுள்ள

கே: நடிகை சரோஜாவுக்குப் பெண் குழந்தை பிறந்திருப்பதாகக் கேள்வி. அவர் கணவன் யார்?

ப: இது தெரியாதா? குழந்தையின் தந்தை யாரோ அவரே குமாரி சரோஜாவின் கணவருமாவார்.

ஃ

குமாரி சக்கினா, இஸ்மாயில், கல்பிட்டி

கே: பண்டாவின் பதவி பறிபோனால்............

ப: பட்டிருப்பாரின் பதவிக்கும் திண்டாட்டம்தான்.

ஃ

வெற்றிவேந்தன், நரஹேன்பிட்டி

கே: எதிர் வீட்டு ஏந்திழையாள் எந்நேரமும் ஜன்னலினூடே என்னைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டுகிறாள். இதிலிருந்து விடுபட ஒருவழி கூறும் ஐயா குயுக்தியாரே!

ப: அகோ வாரும் பிள்ளாய் தோல்வி வேந்தரே, ஒரு வழியென்ன, மூன்று வழி சொல்கிறேன். இமைக் கதவை மூடலாம். மனக்கதவை மூடலாம். ஜன்னல் கதவைக் கூட அடித்து மூடிவிடலாம். அதற்குமேல் அவளால் என்ன செய்ய முடியும்?

கே: "வாழ்விலும் தாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் உங்களோடு ஒன்றாக வாழ்வதையே விரும்புகிறேன் கண்ணாளா" என்று கூறிய பச்சைக் கிளி "என்னை மறந்துவிடுங்கள்" என்று மாறினால்......?

ப: மறந்து விட வேண்டியதுதான். இல்லாவிட்டால் பச்சைக் கிளி இன்னொருவனுடன் பறந்து போவதைப் பார்த்து கண்ணாளன் புண்ணாளனாக வேண்டிவரும்.

ஃ

எஸ். பி. ஜெயம், திருகோணமலை.

கே: சில பெண்கள் கட்டிய கணவன் இருக்கையில் கள்ளக் காதலனுடன் ஓடி விடுகிறார்களே, ஏன்?

ப: ஓடக் கூடியவர்களுடன் தானே ஓட முடியும். இருப்பவரோடு எப்படி ஓட முடியும்? அதனால் தான்.

ஃ

க. துரைச்சாமி, யாழ்ப்பாணம்.

கே: ஒரு பெண்ணுடைய அன்பு எங்கே பதிந்திருக்கும்?

ப: காதல் உள்ள பெண்ணாயிருந்தால் அது கண்ணிலும், சாகசம் உள்ள பெண்ணாயிருந்தால் நாவிலும், கருத்துள்ள பெண்ணாயிருந்தால் பணத்திலும், தூய்மையுள்ள பெண்ணாயிருந்தால் இதயத்திலும் பதிந்திருக்கும்.

ஃ

செல்வி கு. தேன்மொழி, பதுளை.

கே: கடவுளை அடைவதற்கு சுருக்கமான வழி எது?

ப: கடவுளை அடைவதற்கு ஒரேயொருவழிதான் உண்டு. எனவே நீண்ட வழி யெது, சுருக்க வழியெது என்று தெரிந்தெடுப்பதற்கு வழியில்லை. கடவுளை அடைவதற்கு உள்ள வழி செத்துப்போவதுதான். உயிரோடு கடவுளை அடைந்தவர் இந்த உலகத்தில் இதுவரை யாரும் இல்லை. புத்தரும், யேசுவும், காந்தியும் கூடச் செத்த பின்னர் தான் கடவுளை அடைந்ததாக வதந்தி.

மிஸ்டர் குயுக்தியார்

C/o சுதந்திரன்.

த. பெ. 1183

கொழும்பு.—12.

ஃ

செல்வி மு. தளையசிங்கம், கொழும்பு.

கே: கொழும்பு கறுவாக் காட்டில் உள்ள பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் குடிக்கிறார்களாமே, உண்மையா? அவர்கள் குடிப்பது விஸ்கியா, பிரண்டியா,

ப: விஸ்கியா, பிரண்டியா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேர் கணவன்மாரின் இரத்தத்தைக் குடிக்கிறார்கள் என்பது தெரியும். பாக்கியுள்ள ஒருத்தி அவள் கணவனின் வியர்வையாவது பிழிந்து குடித்துவிடுவாள்.

ஃ

ப. ஐயாக்கண்ணு, வவனியா.

கே: தங்கள் மனைவியிடம் உயர்தர பட்டுச் சேலைகள் எத்தனையுண்டு?

ப: மந்திரி மரிக்காரிடம் எத்தனை டெலிபோன்கள் உண்டோ அத்தனை சேலைகள் என் மனைவியிடமுமுண்டு

ஃ

பி. வசந்தலக்ஷ்மி, திருகோணமலை.

கே: எழுத்தாளன் என்பவன் யார்?

ப: எண்ணங்கள் என்ற பிரஜைகளை எழுத்து என்ற சட்டங்களைக் கொண்டு நன்கு ஆளக் கூடிய மன்னன் எவனோ அவனே எழுத்தாளன் ஆவான்.

செல்வி செ. புவனசுந்தரி, வெள்ளவத்தை.

கே: ஒரு ஏழைப் பெண்ணின் காதலுக்கும் நவநாகரிகப் பணக்காரப் பெண்ணின் காதலுக்கும் என்ன வித்தியாசம்?

ப: ஏழைப் பெண்ணின் காதல் ஒரு கணவன் மூலம் பல பிள்ளைகளை உற்பத்தி செய்யும். பணக்காரப் பெண்ணின் காதல் பல கணவர்கள் மூலம் பல சள்ளைகளை உற்பத்தி செய்யும்.

---

# தியாகச் சின்னம்

(நாடகம்)

இளந் தம்பதிகளான ஒரு கணவனும் மனைவியும் இலங்கையின் புராதன சிற்பச் செல்வங்களையும், ஆட்சி சின்னங்களையும் கண்டு களிக்கும் நோக்கமாக அநுராதபுரம், சிகிரிய முதலிய இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு பொலநறுவைக்கு வருகிறார்கள்.

சிதைந்த பல சின்னங்களையும், சிவாலயங்களையும் பார்த்துவிட்டு பராக்கிரம சமுத்திரம் என்ற பிரமாண்டமான நீர்நிலையைக் கண்டு பிரமிக்கிறார்கள். குளத்தின் கரையிலே கற்பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் மாபெரும் சிலை மனைவியின் கண்களையும் கருத்தையும் கவர்கின்றது.

"இது யாருடைய சிலை?" என்று கேட்கிறாள் மனைவி.

கணவன் பதிலிறுக்கின்றான்: "கண்ணே, சிலர் இதை மஹா பராக்கிரமபாகு மன்னனுடைய சிலை என்கிறார்கள். வேறு சிலர் அகஸ்திய முனிவருடையது என்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மை வேறு......"

இந்த இடத்தில்தான், 'தியாகச் சின்னம்' என்ற சரித்திரம் தழுவிய நாடகத்தை எழுதியுள்ள ஸரஸ்வதி நாகராஜன் தமது சிந்தனைப் புரவியைக் கனவேகத்தில் தட்டிவிடுகிறார். ஒன்றன் பின் ஒன்றாக அற்புதமான கற்பனைக் காட்சிகள் மலர்கின்றன.

இன்றையப் பொலநறுவையாகிய அன்றைய சனநாதபுரத்தையும் கழுத்துறையையும் நிலைக்களனாகக் கொண்டு சிற்பி மாயவர், அவர் புதல்வி விநோதினி, கவியூர்ப் போரில் கோசலரைக் கொன்று வெற்றிக் கொடி நாட்டிய தளபதி அப்பிரமேயரின் மருமகன் தளபதி வீரவர்மன், மந்திரி ஜகத்பாலர், விக்ரமபாண்டியன், சேனபதி சுந்தரபாண்டியன் ஆகிய பாத்திரங்கள் சஞ்சரிக்கின்றன.

படிப்பதற்கும் நடிப்பதற்கும் ரஸமான இந்த நாடகம் அடுத்த வார சுதந்திரன் இதழில் ஆரம்பமாகிறது.

—ஆசிரியர் சுதந்திரன்.

---

# மக்கள் குரல்

## பைந்தமிழ் இதழ்

ஈழமண்ணில் இன்பத் தமிழர்களின் உரிமைக் குரலாக பல்லாண்டுகள் பவனி வந்த பைந்தமிழ் இதழ் "சுதந்திரன்", இங்கு கொப்பளித்த வகுப்புக் கலவரங்கள் காரணமாக உதயமான அவசரகாலச் சட்டத்தால் நிறுத்தப் பட்டது. காலமும் ஓடி விட்டது. திங்கள் ஏழரை மறைந்து விட்டன. தற்போது மறுபடியும் "சுதந்திரன்" தனது பொற்கதிர்களை வீசி மலர்ந்து விட்டது. வண்ணத் 'தமிழ்ச் சோலையில் மலர்ந்து — வளர்ந்த சுதந்திரன் வண்ணமாக — வளமாக சேர் புகழுடன் திகழ எமது அரிய பிரார்த்தனை.

அதன் ஆக்கத்திற்கு எமது இளைஞர் குழாம் என்றும், என்றும் ஊக்கமதை நல்கத் தயார்.

மு. பாரூக்,
39, கொழும்பு வீதி, கண்டி.

## கண்ணீர் விட்டேன்

தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலான சுதந்திரனுக்குத் தடை என்ற செய்தி கேட்டதும் [illegible] விட்டேன். ஏன்? ஈழத்தின் தமிழ் பேசும் மக்களுக்கு சிங்கள அரசாங்கம் புரியும் கொடுமைகளை, அது நடாத்தும் அநீதிகளை ஏனைய இதழ்கள் இயம்ப எத்தனையோ நாட்களுக்கு முன்னமே சுதந்திரன் இதழ், தமிழ் பேசும் மக்களுக்கு எடுத்துக் காட்டி விடும். அத்தகைய இதழுக்குத் தடை என்றதும் எத்தனை தமிழ் பேசும் உள்ளங்கள் தவித்தனவோ! அவர்களில் நானும் ஒருவன்.

சுதந்திரன் மீண்டும் வெளிவருவது குறித்து மிக்க மகிழ்ச்சி. கடந்த நாலு ஆண்டுகளாக கிழக்கு மாவட்டத்து கிராமமான தோப்பூரில் இருந்து பணம் கட்டி சுதந்திரன் இதழ் பெற்று வந்தேன். எனக்கு 18—5—58 சுதந்திரன் இதழே கடைசியாகக் கிடைத்தது. இப்பொழுது நான் தோப்பூர் முகவரியில் இல்லை, கீழ்வருவதே எனது புதிய முகவரி. இத்துடன் ரூபா 10/- அஞ்சற் கட்டளை (போஸ்டல் ஓடர்) எடுத்து ஒரு ஆண்டு இதழ்களுக்கு அனுப்பி உள்ளேன். பெற்றுக் கொண்டு பற்றுச் சீட்டுடன் இதழ் வாராவாரம் தவறாது அனுப்பித் தாருங்கள்.

சின். பொன்னையா,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## வருக! வருக!!

கலையும் திருவும் களிபுரியும் நம் இலங்கை கன்னித் தமிழர்க்கோர் 'சுதந்திரனா'ய் வந்துதித்து, ஈரைந்து ஆண்டுகளாய் இன் தமிழுக்கு இரவு பகல் கண் அயராது தொண்டு செய்து, பூப்படைந்த பாவை போல் காட்சி தந்து, பத்தாண்டு மலருடனே வந்தாய் அன்பே உன் உருவம் கண்டு நாம் களித்திடுங்கால் உன் எழிலில் ஆசை கொண்டோர் பொறாமை கொண்டு ஏழு திங்கள் நாள் முதலாம் உனை மறைத்தார். எமது உயிர் உன்னிடம் தான். நீ தான் இல்லை. காலில் சதங்கை கொஞ்ச கைவளை குலுங்க முத்துமாலை அசைய வருகின்றாய் எனக் கேட்டு 'நாம் தமிழர்' பூரித்தோம் "சுதந்திரனே"! வருக!! வருக!!! என வாயார வாழ்த்துகிறோம்.

க. சுப்பிரமணியம்,
காளிகோவிலடி, களபூமி,
காரைநகர்.

## உழைப்பு

தமிழர்தம் உரிமைப் போருக்காய் தனி முரசு கொட்டி வரும் தங்கள் பத்திரிகை — எங்கள் சுதந்திரம் காக்கும் சுதந்திரன்—தடை நீக்கப் பட்டுத் தொடர்ந்து வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. சென்ற சனிக்கிழமை, விடுபட்ட விலங்குடன் கையில் எழுதுகோல் தாங்கி எழுந்து வந்த சுதந்திரன் கண்டு களிப்புற்றேன்; அத்துடன் சிறு கவலை

(13-ம் பக்கம் பார்க்க)

---

## ஏஜண்டுகள் தேவை

தமிழ் நாட்டிலும், மலாயாவிலும் சுதந்திரன் விற்பனை செய்ய தகுதி வாய்ந்த ஏஜண்டுகள் தேவை; ஏஜன்ஸி நிபந்தனைகள், கமிஷன் முதலியவற்றிற்கு விண்ணப்பிக்கவும்:

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதந்திரன்

தபால் பெட்டி 1183
கொழும்பு, (இலங்கை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரங்கள்　　　திண்ணைப் பள்ளிக்கூடம்　　　பொருளாதாரம் 2

# பழைய திட்டம் புதிய உலகில் பொருந்தாது

## ANCIENT PLANNING INAPPROPRIATE TODAY

**பாத்திரங்கள்**

1. உபாத்தியாயர் உலகநாதர்
2. அப்பாக்குட்டி
3. குமரேசு

உபாத்தியாயர்:

என்ன அப்பாக் குட்டி, இன்றைக்கு நேரத்தோடே வந்துவிட்டாய்?

அப்பாக்குட்டி:

ஓம் உபாத்தியாயர் அண்டைக்கு நாங்கள் பேசினதிலை எனக்கு ஒரு விஷயம் புதிராயிருக்கு.

உபாத்தியாயர்:

என்ன புதிர்?

அப்பாக்குட்டி:

உழைப்புச் சந்தர்ப்பம். வேலையில்லாத் திண்டாட்டம் எண்டு எல்லாம் பேசினோம். ஆனால் எங்கடை காலத்திலே இந்தத் தொந்தரவுகள் ஒண்டுமிருக்க வில்லையே.

உபாத்தியாயர்:

ஆமாம். பழைய காலத்திலே சமூக அமைப்பு ஒரு நிரந்தரமான முறையைத் தழுவியிருந்தது. வருணச்சிரமதருமம் என்று அறிந்திருப்பீர்களே!

அப்பாக்குட்டி:

ஓம் அது ஒவ்வொருவரும் தன் தன் சாதித் தொழிலைப் பார்ப்பது. அதுதானே?

உபாத்தியாயர்:

ஆம். அந்த வருணச்சிரம தருமம் என்ற முறை சமூக வாழ்விலே ஒரு நிலைதரத்தைக் கொடுத்தது. ஒவ்வொருவரும் தான் தான் பிறந்த சாதிக்குப் பிரத்தியேகமான தொழிலில் ஈடுபடுவார்கள். அந்த நிலைமையிலே சமூகத்திற்குத் தேவையான பொருட்கள் யாவும் தக்க அளவிற்கு உற்பத்தியாகும். அதேமாதிரி ஒருவராயினும் தனக்கு உழைப்பதற்கு ஒரு தொழிலுமில்லையே என்று முறையிட வேண்டிய நிர்ப்பந்தம் எழமாட்டாது. சமூகம் சாசுவதமாக நிலைதளம்பாமல் இயங்கிக் கொண்டுவந்தது. இன்றைய உலகிலே தோற்றுகிற பிரச்னைகள் அந்த முறையின் கீழ் தோற்ற முடியாது. அதுதான் வித்தியாசம்.

அப்பாக்குட்டி:

அப்ப உபாத்தியாயர், ஏன் நாங்கள் இப்பவும் அந்தப் பழைய முறைமாதிரியமைச்சு நடந்தாலென்ன?

உபாத்தியாயர்:

அந்த மாதிரியாக இன்றைய உலகில் அமைக்க முடியாது. சமூக மக்கள் அதற்கு மனமொருப்பட மாட்டார். காலம் மாறிக்கொண்டு வருகிறது. மேலும் சில சில தொழில்களைச் சமூகத்திலே குறைவாக மதிக்கிறார்கள். இது தவறு என்றாலும் உண்மை நிலை இதுதான். அதனிமித்தம் அநேகர் அப்படியான தொழில்களில் ஈடுபட விரும்பார்கள். ஆதியிலே வருணச்சிரம தருமம் என்ற கட்டுப்பாடு உண்மையிலே ஒரு பொருளாதார முறையாகவே தோன்றியது. ஆயினும் காலகதியில் சிற்சில தொழில்களை குறைவாக மதித்தும் சிற்சில தொழில்களை உயர்வாக மதித்தும் நடத்தினதின் நிமித்தம் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற ஒரு வித்தியாசமும் அதன் வழிப்பட்ட மனப்பான்மையும் மக்களிடையே தோன்றின. இது காரணமாக வருணச்சிரம தருமம் போன்ற ஒரு முறையை இனிமேல் நிலைநாட்ட முடியாது.

குமரேசு:

என்ன, நான் வருவதற்கு பிந்திவிட்டேனோ?

உபாத்தியாயர்:

இல்லை இல்லை. அப்பாக்குட்டியர் இன்றைக்கு ஏற்கனவே வந்து ஒரு பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்.

குமரேசு:

என்ன பிரச்னை?

உபாத்தியாயர்:

அதாவது, முற்காலத்திலே இந்த உழைப்புச் சந்தர்ப்பம் இல்லாமை வேலையில்லாத் திண்டாட்டம் என்ற தொந்தரவுகள் இருக்கவில்லையே. ஏன் அப்படி என்று கேட்டார். நான் அதற்கு பழைய சமூக அமைப்பு வருணச்சிரம தருமம் என்ற கட்டுப்பாட்டுக்கு அமைந்து இருந்தது. அந்தக் கட்டுப்பாட்டின் கீழ் இந்தப் பிரச்னைகள் எழ இடமில்லையென்று கூறினேன். அவர் ஏன் நாம் இன்றைக்கும் அது மாதிரி ஒரு முறையைத் தயாரித்துஅமைக்கக்கூடாது என்று பதில் வினா எழுப்புகிறார். காலம் மாறிவிட்டது

சகாதேவன்

ஆகையால் அந்த முறை இனிமேல் பொருத்தமாகாது என்றேன். அப்பாக்குட்டியர் திருப்திப்பட்டதாகத் தெரியவில்லை.

குமரேசு:

ஆம் முன்னை நாட் பொருளாதாரத்திற்கும் இன்றைய பொருளாதாரத்திற்கும் ஒரு அடிப்படையான வித்தியாசம் இருக்கிறது. அதன் காரணமாக வருணச்சிரமதருமம் போன்ற சமூக அமைப்பு பொருளாதாரத் துறையில் எழும் பிரச்னைகளுக்கு மருந்தாகமாட்டாது.

உபாத்தியாயர்:

என்ன அந்த அடிப்படையான வித்தியாசம்?

குமரேசு:

முன்னை நாட் பொருளாதாரம் வளர்ச்சியற்று மாற்றமின்றி ஒரே நிலைப்பட்ட தன்மையைப் பொருந்தியிருந்தது.

உபாத்தியாயர்:

வளர்ச்சி யற்று மாற்றமின்றி ஒரே நிலைப்பட்ட தன்மையை யுடைய பொருளாதாரம் என்று குறிப்பதை சொற்பம் விளக்கமாகச் சொல்லுங்கோ.

குமரேசு:

இப்பொழுது சிலகாலமாகத்தான் நாங்கள் ஓரளவிற்குப் பொருள் உற்பத்தி முறையிலே சிறிது சிறிதாக மாற்றம் செய்திருக்கிறோம். முற்காலத்தில் ஆயிரக்கணக்கான வருடங்களாக திரும்பத்திரும்ப ஒரே வகையான பொருள் உற்பத்தி முறையையே கையாண்டு வந்தோம்.

அப்பாக்குட்டி:

ஓம் தம்பி நேத்துத்தானே இந்த "வாட்டர்பம்ப்" வந்தது. அதுக்கு முன்னர் நெடுக எங்கடை காலத்திலும் எங்கடை பேரன், பூட்டன், பாட்டன், கொப்பாட்டன் காலத்திலேயும் துலா மிதிச்சுப் பீலிப்பட்டை கட்டித் தானே தண்ணி யிறைச்சு வந்தநாங்கள். முந்தநாள் இந்தப் "பேர்க்சன் ட்ராக்டர்" வந்தது. அதுக்குமுன்னை நெடுக மாடு பூட்டிக் கலப்பையாலேதானே உழுது [illegible] கள்.

குமரேசு:

உற்பத்தி முறைகள் மாறுகின்றன. தொடர்ந்து மாறிக்கொண்டே போகும். நீங்கள் கூறிய உதாரணங்கள் மிகச் சுலபமான உற்பத்தி முறைகளாகும். உண்மையில் இன்று வழக்கத்திலிருக்கும் நூற்றுக்கணக்கான உற்பத்தி முறைகளைக் கையாளுவதற்கு மிக்க சிக்கலான பயிற்சிவேண்டும். பயிற்சிக்கு முன்னர் விஞ்ஞான சாத்திரம் தாராளமாகக் கற்கவேண்டும். ஆகவே தகப்பனிடம் மகன் கற்கும் முறையாகக் கற்றுத் திறமை பெற முடியாது.

உபாத்தியாயர்:

அதைவிட உற்பத்திக்கு இன்றியமையாத பலவகைச் சாதனங்களும் வேண்டுமே?

குமரேசு:

ஆம் பலவகையான இயந்திரங்களை உள்ளடக்கிய பிரமாண்டமான ஆலைகள் தேவை. அத்தகைய ஆலைகளில் பெருமளவில் தான் உற்பத்தி செய்தல் லாபகரமானது. அப்பொழுது நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நுண் கலையிலும் விசேட பயிற்சி பெற்றவர்களாக ஒருமித்துத் தொழில் செய்ய வேண்டும். இந்த நிலைமையில் தகப்பனிடம் மகன் பயிற்சி பெறும் முறையில் தொழிற் பயிற்சி பெறவோ தனிப்பட்ட முறையில் பொருள் உற்பத்தி செய்து விற்பனை செய்யவோ முடியாது. அதன் காரணமாக வருணச்சிரம தருமம் என்ற முறை முன்னர் ஒரு காலம் கொடுத்த பலனை இப்போது கொடாது.

உபாத்தியாயர்:

அதை விட இன்றைய உலகில் பிறநாட்டுப் பொருள் உள்ளூரில் விற்பனையாவதும் நம்ம நாட்டுப் பொருள் பிற நாட்டுக்கு ஏற்றுமதியாவதும் வழக்கமாகின்றதே.

குமரேசு:

ஆம். அது இன்றைக்குப் பொருளாதாரத் துறையில் நிலவும் ஒரு நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது. பெருமளவில் உற்பத்தி செய்வதுதான் இன்றைய நிலையில் லாபகரமானது. ஆகவே பெருந்தொகையாக உற்பத்தி செய்த பொருட்கள் ஒரு கிராமத்திலோ அல்லது ஒரு நாட்டிலோ மாத்திரம் விற்பனையாகி முற்றுப்பெறுது. பலதேசங்களை உள்ளடக்கிய சர்வதேச சந்தையிலேயே விக்கிரயமாக முடியும். இதுவும் பழைய நாட்களில் பொருளாதார இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட வருணச்சிரம தருமம் என்ற முறை பொருத்தமற்றுப்போனதற்குக் காரணமாகும்.

உபாத்தியாயர்:

இவற்றைவிட வேறு என்ன வகையில் இன்றைய பொருளாதாரம் பழைய நிலைமைக்கு வேற்றுமை காட்டுகின்றது.

குமரேசு:

ஒரு விசேட அம்சம் இருக்கின்றது. பழைய சகாப்தம் அற்றுப் புதிய சகாப்தத்தை அடைகின்ற நாடுகளிலெல்லாம் ஜனத் தொகை மிக வேகமாகப் பெருகிவருகின்றது. இதுவும் பொருளாதாரத் துறையில் பெரும் மாற்றங்களையும் சலன நிலைமையையும் உண்டுபண்ணிவிடும்.

அப்பாக்குட்டி:

இலங்கையிலே ஜனத் தொகை பெருகுவது உலகம் முழுவதிலும் ஒரு "றெக்கோட்" என்று சொல்லுகினமே.

உபாத்தியாயர்:

இலங்கையிலே ஜனத் தொகை வேகமாகப் பெருகுகிறதுதான். ஆனால் நம்ம தமிழினத்திலே அப்படி ஒரு வித அசாதாரண பெருக்கமும் காணப்படவில்லை.

அப்பாக்குட்டி:

ஏன் அப்படி?

குமரேசு:

அந்த விடயத்தை ஆராயப்போனால் ஒரு தனிப் பெரும் அத்தியாயமாகும். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அதைக் கவனிப்போம்.

உபாத்தியாயர்:

பொதுவாக ஏன் தற்பொழுது ஜனத் தொகைப் பெருக்கு அதிகமாகின்றது.

குமரேசு:

ஒவ்வொரு இன ஜீவராசிகளும் சந்ததியற்று சூன்யமாகப் போகாது இருக்கும் வண்ணம் இயற்கை வழி கோலியிருக்கின்றது. ஆயினும் பூரண ஆயுசுவரை வாழ்ந்திருக்காது இடையிலே மரணமாவதற்கு அளப்பரிய காரணங்கள் உண்டு. உதாரணமாக முதுமையின் தளர்ச்சியேற்பட முன்னரே தடுக்கக்கூடிய வியாதிகளினால் எண்ணற்ற மக்கள் முற் காலத்தில் இறந்து வந்தனர். ஆனால் இன்றைய உலகில் மருத்துவ சுகாதார வசதிகளினது தரத்தின் உயர்ச்சியும் அமைவின் தாராளமும் இத்தகைய அகால மரணங்களை பெரிதும் குறைத்திருக்கின்றன. அதுவே இன்றைய உலகில் ஜனத்தொகை பெருக்கத்தின் வேகத்திற்கு விசேட காரணமாகும்.

அப்பாக்குட்டி:

எங்கடை பெரியாச்சிக்குப் பன்னிரண்டு பிள்ளையள் பிறந்தது. ஆனால் மூண்டு தானே தப்பிப் பராயப் பட்டது.

உபாத்தியாயர்:

இந்தச் சோதிட சாத்திரத்திலே அரிட்டம் காட்டுகின்றது என்று சொல்லுவார்களே. அப்பொழுது கிரகசாரங்களும் இந்தக் காலத்திற்கு ஏற்றபடி மாறிவிட்டனவோ.

குமரேசு:

சோதிட சாத்திரிகள் அரிட்டம் என்று திட்டமாகச் சொல்லுவதில்லையே! அரிட்டக் குற்றம் என்று தானே சோதிடர்கள் சொல்லுவார்கள்! அந்தக் குற்றங்கட்குச் சாந்தி செய்தால் குணமாகுந்தானே! முன்னர் சாந்தி செய்வதற்கு மாந்திரீகர்களையும் பிராமணர்களையும் நாடிப் போவார்கள். தற்பொழுது டாக்டர்களிடம் போய்ப் பணம் இறைப்பார்கள்.

உபாத்தியாயர்:

சரி நாங்கள் கண்காணித்தவற்றை இப்படிச் சொல்லலாம்.

பழைய நாளைப் பொருளாதாரம் மாற்றமின்றி வளர்ச்சியற்று ஒரே நிலைப்பட்ட தன்மையை யுடையது. இன்றைய உலகில் பொருளாதாரம் மாற்றமும் வளர்ச்சியும் பொருந்திய சலனத் தன்மையைப் பொருந்தியது. இத்தகைய

(12ம் பக்கம் பார்க்க)

ஒரு சமூகம் சுயஆட்சியின்றி பிற சாதியினருக்கு அரசியல் துறையில் அடிமைப்பட்டால் அச்சமூகத்தின் தொழிற்றிறமை, கலைநுட்பம், மக்களின் தன்னம்பிக்கை, பொருளாதாரத்துறையில் கருமம் ஆற்றுவதற்கு வேண்டிய உற்சாகம், துணிவு முதலிய பண்பாடுகள் யாவும் வற்றிப்போகும். பொருளாதாரத்துறையில் மக்கள் சீர்கெட்டுப் பின்னடைவர். இதுதான் ஒரு சமூகத்தின் செல்வ நிலையின் உள் இரகசியம்.

இந்த உண்மையைத்தான் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகட்குமுன் வாழ்ந்த ஸ்கொட்டிஷ் சிந்தனையாளரும் பொருளியல் துறையில் தந்தையென்று பெயர்படைத்தவருமாகிய ஆதம் ஸ்மித் என்பவர் (Specialization and division of labour) என்று தொகுத்து புதிய உண்மைபோல் பிரகடனம் செய்தார். ஆனால் நம் தமிழ் நாட்டில் இந்த உண்மையை இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னரே உணர்ந்து அதைச் சமூக அமைப்பிலேயே பயன்படுத்தினர்.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜிரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பத்துகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75.　　சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50.　　சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசம்—கண்டேன்



## 1. யாத்திரையின் அவசியம்

தெய்வீக சிந்தனை நிறைந்த மக்கள் அனைவரும் யாத்திரையை விரும்புகின்றனர். அவர்களுக்கு யாத்திரை மிக அத்தியாவசியமாகின்றது. பண்டைக்காலத்திலிருந்தே பல்வேறு மதத்தவரும் பக்தி சிரத்தையோடு பரம்பொருளைத் தேடி, பல மைல் தூரத்துக்கு யாத்திரை செய்து வருகின்றனர். கிறிஸ்தவ மதத்தினர் பெத்தலேகாமைத் தரிசிக்கச் செல்கின்றனர். இஸ்லாம் மதத்தினர் மெய்வருத்தம் பாராது மெக்காவைத் தரிசித்து மகிழ்கின்றனர். பௌத்தர்கள் புத்தகயா, சாரநாத் போன்ற புண்ணிய தலங்களைத் தரிசித்துப் பேரானந்தம் அடைகின்றனர். இந்து மதத்தவர்க்குப் பல யாத்திரைத் தலங்கள் உண்டு. அவற்றுள் கைலயாயமே மிகச் சிறப்புற்ற தலமாக விளங்குகின்றது.

### யாத்திரை இருவகை

இறைவனைப் போற்ற மக்கள் புண்ணிய தலங்களை நாடிச் செல்லும் யாத்திரை சிறு யாத்திரை. பிறப்பெடுத்த ஜீவன் அனைத்தும், இறந்தும், பிறந்தும், உலகில் வாழ்ந்தும், முடிவில் மெய்ப்பொருளை அடைந்தும் மகிழ்வது பெரும் யாத்திரை. இறைவன் தந்த உடலாகிய வண்டியில் அமர்ந்த ஒவ்வொரு ஆத்மாவும் யாத்திரை செய்துகொண்டே இருக்கின்றது. ஒரு பிறப்பிலேயே பல்வேறு அனுபவங்களைப் பெற்றும், இன்ப துன்பத்துக்குட்பட்டும், யாத்திரை நடைபெறுகின்றது. ஒரு பிறப்பில் யாத்திரை முடியவில்லையானால், அப்பிறப்பில் கிடைத்த உடலாகிய வாகனத்தை நீக்கி, பிறிதோர் வாகனத்தை (உடலை) மறுபிறப்பில் அமைத்துக் கொண்டு சீவன் யாத்திரை செய்கின்றது. பல நூறு கோடி பிறவிகள் எடுத்தாயினும் ஆத்மா, முடிவிற் பரம்பொருளை அடைவது நிச்சயம். யாத்திரைக் காலத்தில் அடையும் அனுபவங்களோ பலப்பல. சிவனை நோக்கி சீவன் செய்யும் யாத்திரையை இன்னொருவிதத்திற் கூறின் தடையோட்டம் (Obstacle Race) என்றும் சொல்லலாம்.

### தடை ஓட்டம்

தடையோட்டம் இக்காலத்திற் பலருமறிந்த ஒரு விளையாட்டு. சிறுவர்கள் ஓட்டத்திற்கு ஆயத்தமாக நிற்பர். ஓடும் வழியில் உயர்ந்த மேசை, பதிந்த வாங்கு, நுழைந்து செல்ல வேண்டிய வளையம், தாண்டிச் செல்லும் குழி—இவை போலப் பல தடைகளிருக்கும். ஓடுவோர், உயரப் பாய்ந்தும், பதுங்கித் தவழ்ந்தும், நுழைந்தும், வளைந்தும், தாண்டியும், குதித்தும், இடத்திற்கேற்பத் தமது நிலைகளை மாற்றி, பல தடைகளைக் கடந்து, ஓடி முடித்தல் வேண்டும். முதலோடியவருக்குப் பரிசு தங்கப் பதக்கம். இரண்டாவதாக ஓடியவன் பெறுவதுசிறு வெள்ளிக் கோப்பை. மூன்றுவது ஓடியவன் பெறுவது வெள்ளிக் கோப்பை. அதன்பின் சென்றோர்க்கு எழுதிக் கொடுக்கும் பத்திரங்கள் சிலசமயம் கிடைக்கும். பலசமயம் வெறுங்கையோடு திரும்ப வேண்டி நேரிடும்.

### ஆண்டவன் பரிசு

ஆனால், எம்பெருமான் நடத்தும் தடையோட்டப் போட்டியோ தனி மகிமை பெற்றது. வாழ்க்கையெனும் தடையோட்டத்தில் ஓடுவோர் பலர். விளையாட்டிற் பங்கெடுக்கும் அனைவர்க்கும் பரிசு உண்டு. பரிசுப் பொருளோ ஒன்றற்கொன்று சிறிதேனும் வேற்றுமையில்லாத அருளாகிய கிண்ணம். முதலாவதாகச் செல்லினும் சரி, கடைசியாகச் செல்லினும் சரி, “எல்லோரும் வாருங்கள். வருவோர்க்கெல்லாம் அருட் கிண்ணம் வழங்குவேன்” என்று அழைத்தவண்ணமே இருக்கின்றார். உலகமாகிய மைதானத்திற் தடையோட்டத்திற் பங்குகொள்ளாமல், எங்காவது ஒளிந்துகொள்ள இயலுமா? அது முடியாத காரியம். எல்லோரும் ஓடித்தான் ஆக வேண்டும். ஓடாதிருக்க முடியாது. ஒருவன் தன்னைத் திடப்படுத்தி விளையாட விரும்பாவிடின் தலைவன், தாமாக அவன்முன் தடைகளைப் போட்டு, விளையாட வைத்துவிடுவான். என்னே அவன் கருணை! தன் குழந்தைகள் எல்லோரும் பரிசு பெற வேண்டும் என்று எண்ணி, ஓடாதவனுக்குப் பரிசு கொடுத்தல் நியாயமில்லையாதலின், அவர்களை ஓட வைத்து அருளை அளிக்கின்றான். வாழ்க்கை ஓர் விளையாட்டு. அதனையும், இறைவன் அருள் துணையாக ஆடினால், துன்பமிலா இன்பமேயாகும்.

### பற்று நீக்கம்


இவ்விதம் தடையோட்டம்போன்ற ஜீவ யாத்திரையின் தத்துவங்களை, உணரவும், அதனால் ஆத்மீக சிந்தனையை மிகுவித்து தெய்வீக சாநித்தியம் பெறவுமே தலங்களின் யாத்திரை உலகில் அமைந்துள்ளது. கரடு முரடான பாதையிலே மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது எத்தீங்குறினும் பொருட்படுத்தாது, இகழ்ச்சி புகழ்ச்சி வேண்டாது, காடும் மலையும் தாண்டி இரவும் பகலும் ஆண்டவன் சிந்தனையோடு, தரிசிக்க விரும்பிய புண்ணிய ஸ்தலத்தையே இலட்சியமாகக் கொண்டு செல்பவன் உயர்நிலை நோக்கிச் செல்லும் உத்தமனாகின்றான். தன் செயலின்றி, உண்பது உறங்குவது உயிர்ப்பது அனைத்துமே இறைவன் செயலென உணர்ந்து, “நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தும் சிவனருள் நினைந்து” வாழ்கின்றான். இறைவனிடம் ஆவியுடல், உடைமை அனைத்தும் அர்ப்பணிக்கப்படுகின்றன. அதனால் ஆத்மீக சாதனைக்குத் தடையாயுள்ள

சுவாமி சச்சிதானந்தா

“நான்”, “எனது” என்னும் இருவகைப் பற்றும் நீங்கி விடுகின்றன.

### கைலாயம் செல்லுதல்

இந்து மக்களுக்கு யாத்திரைத் தலங்கள் பல உண்டு என்று முன்னரே குறிப்பிட்டோம். எல்லாவற்றுள்ளும் கடினமான யாத்திரை கைலாச யாத்திரை. சில வருஷங்களுக்கு முன் யாத்திரை சென்றோர் மிக மிகக் குறைவு. மலைகளையும் காடுகளையும் அவற்றிடை ஓடும் ஆறுகளையும் கால் நடையாகவே கடந்து செல்ல வேண்டும். வழியில் தோன்றும் விபத்துக்களோ அனந்தம். இன்றுள்ள நவீன சாதனங்கள் அன்று இல்லை. ஆற்றில் ஓடும் நீரையும், காட்டில் கிடைக்கும் கந்த மூலபலாதிகளையும் உண்டு சென்றனர். இத்தனை நெருக்கடியில் சென்ற யாத்திரீகர் பெரும்பாலும் மீளாது மாண்டனர். அதனால், சிவபெருமான் உறையுங் கைலயங்கிரிக்குச் செல்வோர் உடலை உகுத்து, இறைவனோடு, ஒன்றாய்க் கலந்து விடுவர் எனக் கருதினர். இதனாலேயே மரணமடைவதை, கைலாயம் செல்வது என்று கூறும் வழக்கமும் வரலாயிற்று.



‘கைலயங்கிரி’யின் தோற்றம்

### மானச சரோவரம்

சிலர் கைலைமால் வரையினைக் காசினியில் உள்ள மானிடர் அடைதல் அரிது என்றும் கருதினர். அது உண்மையன்று. கைலையும் ஏனைப் புண்ணியத் தலங்கள் போன்று இம் மண்ணுலகத்திலேயே உள்ளது. யாத்திரை மிக்க கடினமானதே. எனினும் இயற்கையிலேயே இறைவன் திருவுருவினைத் தரிசித்துப் பேரின்பம் பெறும் நிலை கைலாச யாத்திரீகர் அடையும் தனிப் பெரும் பேறாகும். கைலாசகிரியைச் சுற்றி மானச சரோவரம் அமைந்துள்ளது. இந்த இயற்கை அமைப்பே பெரும் சமயத் தத்துவத்தை விளக்குகின்றது. மனது என்னும் பொய்கையே மானச சரோவரம்.

### இராட்சத தடாகம்

கயிலங்கிரி மாசற்ற மனதுள் மூழ்கித் தரிசிக்க வேண்டிய சிவமே யாகும். கலை கயிலையின் அண்மையில் உள்ள மற்றொரு வாவி. இராட்சத தடாகம். இது மானச சரோருவத்திற்கு முற்றும் மாறானது. மானச சரோருவம் தெளிந்து அமைதியுடன் விளங்கும். இராட்சத தடாகமோ அவ்விதமின்றி இருண்டு கலங்கி அலையை வீசிக் கொண்டே இருக்கும். அமைதியான மானசசரோருவத்தில் தெளிவுறக் காணும் கயிலையின் தோற்றத்தைச் சலனம் மிக்க இராட்சத தடாகத்திற் காணுதல் இயலாது.

(12-ம் பக்கம் பார்க்க)

---


## உங்கள் அபாயகரமான விரோதி



## பயோரியா

ஈறுகளில் இரத்தம் வடிதல்? வாய்ப் புண்? பல்லாட்டம்?

இந்த பயங்கர வியாதி உங்கள் பற்களை விழச் செய்வதுமன்றி, ஆரோக்கியத்தையும் கெடுத்து விடுகின்றது. தேகத்தில் ஏற்படும் வியாதிகளில் 85 சத விகிதத்திற்கு பயோரியா தான் காரணமென பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் அநேகர் இந் நோயின் அறிகுறிகளை அலட்சியம் செய்து நாளா வட்டத்தில் கடுமையான நோய்க்குள்ளாகின்றனர். நவீன சாஸ்திரீய முறைப்படி தயாரிக்கப்பெற்றுள்ள "பயோரிஸான்" எந்த நிலைமையிலுள்ள பயோரியாவையும்! நீக்குவதில் கைகண்ட மருந்து பயோரிஸான். ஈறுகளில் இரத்தம் வடிதலை நிறுத்தி, சீழ் பிடிப்பதைத் தடுத்து, பற்களை ஆட்டமில்லாமல், உறுதியாக நிலைகொள்ளச் செய்கிறது பயோரிஸான்.

விலை ரூபா. 3/50

தபால்செலவு பிரத்தியேகம்.

இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:

**பயனீர் பார்மஸி,**

**183, ஷாப்புத்தெரு, கொழும்பு.**


---

# எது கவிதை?

வண்ணத் தமிழ்ப்பூஞ் சோலை வளர்,
வாணிக் குயிலே! மகிழ்வொடு, நீ
உண்ணும் அமிழ்தக் கவிதை எது?
உணர்த்தாய், எனக்குன் மணிக்குரலால்! 1

அன்பால் உருக்கி வார்த்தபல
அஞ்சொல் இழைத்து, அழகியநற்
பண்பு துலங்கக் கற்பனையால்,
படைப்ப தெதுவோ? அது கவிதை! 2

முயன்று பொறுக்கிச் சொல்லடுக்கி
முடித்தல், செய்யுள்; எழில் நடையில்,
இயல்பாய் நல்யாப் பமைதியுடன்,
எழுவ தெதுவோ? அது கவிதை! 3

எளிதாய்க் குரலோ டிசைந்தினிக்க
இசைத்தல், பாடல்; ஆழ்ந்த பொருள்
மிளிர, மனத்தாற் சுவைத்துணர
விளைத்தல் எதுவோ? அதுகவிதை! 4

போலி நகைபோல், வெளிப்பகட்டுப்
புரியா(து), அகத்தும் புறத்தும், ஒரே
சீலக் கனக மெனப் பண்பாய்த்
திகழ்வ தெதுவோ? அதுகவிதை! 5

புனிதக் கவிதைக் கன்னியுடல்
புண்ப டாது, பூப்பெய்த,
இனிய புகழ்ப்பொன் னணியாக
இழைப்ப தெதுவோ? அது கவிதை! 6

ஆழ்ந்த சக்திக் கனலுமிழும்
அருள்மின் சொற்கள் நர்த்தமிடக்
காந்தம் போலத் தொட்டவரைக்
கவர்வ தெதுவோ? அது கவிதை! 7

ஆக்கு பவர்க்கும், உண்போர்க்கும்,
அல்லல் அகன்ற, அரிய புது
வாழ்க்கை யளிக்கும் உயர்தகைமை
வாய்ந்த தெதுவோ? அதுகவிதை! 8

இனத்தை, நாட்டைத் தாய்மொழியை,
இகத்தை, இழிந்த செயற்பதிபுன்
மனத்தை உயர்த்தும் ஆற்றலொடு,
மலர்வ தெதுவோ? அதுகவிதை! 9

பண்பார் நண்பர் தொடர்பே போல்,
பருகும் மழலைச் சுவையேபோல்,
இன்ப நலன்கள் பயில்தோறும்
ஈவ தெதுவோ? அதுகவிதை! 10

செஞ்சொற் சுவை, நற் பொருட்சுவை, பைந்
தேன்போல் இனிக்கும் கவிச்சுவை, வன்
நெஞ்சை மலர்த்தும் அருட்சுவைகள்
நிறைந்த தெதுவோ? அதுகவிதை! 11

காட்சிப் பொருளும் — கற்பனையும்
கலந்து மகிழ்ந்த களிப்பினில், சொல்
மாட்சி வடிவம் பெற்றுதிக்கும்
மழலை எதுவோ? அதுகவிதை! 12

உணர்ச்சி ததும்ப, நெஞ்சத்துள்
ஊற்றாய்ப் பெருகி, உயர்பண்பு
மணக்க, இனிமை, எழில்தவழ
மலர்வ தெதுவோ? அதுகவிதை! 13

மழலை முகத்தில் தவழ்நகைபோல்,
மலரும் உதயக் கதிரொளிபோல்,
அழகு மலர்போல், இயல்பாக
அலர்வ தெதுவோ? அதுகவிதை! 14

ஓசை வடிவம், சொல்லுறுப்பு,
உணர்ச்சித் துடிப்பு, உயிரோட்டம்,
மாசில் உளப்பண் பொளிதவழ
மலர்ந்த தெதுவோ? அதுகவிதை! 15

வானின் தூய்மை, கதிரின் ஒளி,
மலரின் மென்மை, கனல்வன்மை,
தேனின் இனிமை, தென்றல்நடை
செறிந்த தெதுவோ? அதுகவிதை! 16

குயிலின் நாதம், கிளிமழலை,
குழந்தை இதயம், புனல்தெளிவு,
மயிலின் நடனம், பொழில்வனப்பு
வாய்ந்த தெதுவோ? அதுகவிதை! 17

கடலின் குமுறல், இடிமுழக்கம்,
ககன வில்லின் கவின், மின்னற்
கொடியின் நளினம், முகிற்பொழிவு
கொண்ட தெதுவோ? அதுகவிதை! 18

கன்னற் சாறு, கானரசம்,
காதல் அமுது, பக்திதரும்
எண்ணற் கரும்பே ரின்பமெலாம்,
ஈவ தெதுவோ? அதுகவிதை! 19

இறைவன் தகைமை யென, அளவிட்
டிசைத்தற் கிபலா(து), உளத்தில், உணர்ந்(து)
உருகிச் சுவைக்கும் பேரின்ப
ஒளியாய்த் திகழ்வ துயிர்க்கவிதை! 20

— “பரமஹம்ஸதாஸன்”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 ஜனவரி மாதம் 18-ந் திகதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பவுடர் பால் கொடுத்து வரும் அமெரிக்க 'கெயர்' ஸ்தாபனம் இப்போது இலங்கைக்குப் பால் அனுப்ப முடியாது என்று கல்வி அமைச்சர் தஹநாயகாவுக்குத் தெரிவித்து விட்டதாம். இலங்கைக்கு பால் ஏற்றிவர கப்பல்கள் மறுத்து விட்டமையே இதற்கு காரணம் ஆகும். இங்கு நிலவும் துறைமுக சீர்கேடுகளினாலும், வேலை நிறுத்தங்களினாலும் கப்பல் கம்பனிகள் இலங்கையைப் புறக்கணிக்க முற்பட்டு விட்டன. துறைமுக சீர்கேடுகளுக்கு திரு பிலிப் குணவர்த்தனாவின் தொழிற் சங்கமே பெரிதும் காரணம் என்பது பகிரங்க இரகசியமாகும். அவர்கள் இறுதியாக அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருக்கும் கோரிக்கை துறைமுகத் தொழிலாளரைக் கொண்டு மூட்டை தூக்கும்படி சொல்லக் கூடாது என்பதாகும். இந்தப் பின்னணியை வைத்தே நமது காட்டூனிஸ்ட் சிவாஜி மேற் கண்ட கூடார்த்த சித்திரத்தைத் தீட்டியுள்ளார்.

## 'உமி உனக்கு அவல் எனக்கு'

ஒரு நாட்டின் சட்ட திட்டங்கள் இயற்றப்படும் போதே அவை யாவும் பரிபூரண நிறைவு பெற்றனவாயிருப்பதில்லை. அதனால் தான் பல சட்டங்களின் சரத்துக்களை முற்போக்கு அரசாங்கங்கள் அவ்வப்போது திருத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அப்படிச் செய்யப்படும் திருத்தங்கள், சட்டங்களில் தவறுதலாகப் புகுந்து விட்ட அநீதியை அகற்றுவதற்காக, குறைபாட்டை நீக்குவதற்காக, பிழையைக் களைவதற்காகவே செய்யப்படுகின்றன.

நமது இலங்கை அரசாங்கமும் கடந்த வாரம் இரண்டு சட்டத் திருத்தங்களை ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது.

ஆனால் இதில் உள்ள விசித்திரம் என்ன வென்றால் அப்படி நிறைவேற்றப்பட்டுள்ள இரண்டு திருத்தங்களும் ஏற்கனவே இழைக்கப்பட்ட அநீதிகளையும், குறைபாடுகளையும், பிழைகளையும் மேலும் அதிகரிக்கச் செய்வனவாக அமைந்திருப்பது தான்.

தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சிகளையும், அவர் தம் பிரதிநிதிகளின் ஆக்ரோஷமான எதிர்ப்பையும் கிஞ்சித்தும் பொருட்படுத்தாமல் அரசாங்கம் நிறைவேற்றியுள்ள (1) அரசமைப்பு சட்டத் திருத்தத்தையும், (2) பொது ஜனப் பாதுகாப்பு சட்டத் திருத்தத்தையும் தான் நாம் இங்கு குறிப்பிடுகிறோம்.

பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத் திருத்தத்தின் காரணமாக ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைப் பற்றிப் பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம். இப்போது அரசமைப்பு சட்ட திருத்தத்தின் பலாபலன்களை ஆராய்வதே இத்தலையங்கத்தின் நோக்கமாகும்.

அரசமைப்பு சட்டத் திருத்தத்தின் பிரகாரம் ஒரு தொகுதி நிர்ணய சபை நியமிக்கப்பட்டு, இலங்கையின் பாராளுமன்றத் தொகுதிகள் புதிதாக மாற்றியமைக்கப்பட விருக்கின்றன.

ஒரு நாட்டில் ஜனத்தொகை பெருகும் போது காலத்துக்கு காலம் புதிதாக தொகுதி நிர்ணயம் செய்வது வழக்கந்தான். ஆனால் இலங்கை அரசாங்கம் இன்று செய்யப் போகும் காரியம் தொகுதி நிர்ணயம் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களை மேலும் நசுக்கி, அரசியல் துறையில் பலவீனர்களாக்கி, ஒழித்துக் கட்டுவதற்கான ஒருசூழ்ச்சியே யாகும்.

அரசமைப்புத் திட்டத் திருத்தத்தினால் பல்வேறு சதிகளுக்கு அரசாங்கம் அந்தரங்கமாகத் திட்டமிட்டிருக்கிறது. அத்தனையும் தமிழ் பேசும் மக்களுக்கு—இலங்கைத் தமிழருக்கும்—மலை நாட்டுத் தமிழருக்கும்—பாதகமான சதிகளே. ஏற்கனவே பாரபட்சமான வாக்குரிமை, பிரஜா உரிமைச் சட்டங்களினால் பாதிக்கப் பட்டிருக்கும் தமிழ் மக்கள் இந்தப் புதிய சதியினால் மேலும் குற்றுயிராக்கப் படுகிறார்கள்.

இலங்கை ஜனத் தொகையில் 75,000 பிரஜைகளுக்கு ஒரு பிரதிநிதி வீதம் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் தொகையை 135 ஆக அதிகரித்து, அதற்கேற்றபடி தொகுதி நிர்ணயம் செய்வது என்பது அரசாங்கத்தின் முடிவு.

ஆனால் இந்த முடிவுப்படி இலங்கையின் மத்திய பகுதியான கண்டிப் பகுதிகளிலிருந்து, தோட்டப் பிரதேசங்களிலிருந்து, போதிய சிங்களப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு வருவது சாத்தியமில்லை. ஏனென்றால் அங்கு பரந்த தோட்டப்பிரதேசங்களில் மக்கள் ஐதாக வாழ்வது ஒரு காரணம். மற்றொரு காரணம், அங்கு பெருந் தொகையினராக வாழும் மலைநாட்டுத் தமிழர் பிரஜைகள் அல்லாதவர்களாகவும் வாக்குரிமை அற்றவர்களாகவும் இருப்பது.

ஒரு பிரதிநிதியை அனுப்பக்கூடிய ஒரு தொகுதியை வகுக்க 75,000 பிரஜைகள் தேவை. பிரஜா உரிமை வாக்குரிமையற்ற மலைநாட்டுத் தமிழரை ஒதுக்கி விட்டு, பிரஜா உரிமை வாக்குரிமையுள்ள சிங்கள மக்களை மட்டும் கணக்கெடுத்தால், அத்தொகையைக் கொண்டு மிகக் குறைந்த அளவு தொகுதிகள் தான் கண்டிய மாகாணங்களுக்கு ஒதுக்க முடியும். அதன்படி அப்பகுதியிலிருந்து மிகச் சொற்பமான அளவு சிங்களப் பிரதிநிதிகளே பாராளுமன்றத்துக்குள் புக முடியும்.

எனவே, 75,000 என்று கணக்கெடுப்பதற்கு மட்டும் பிரஜா உரிமை, வாக்குரிமையற்று வாழும் மலை நாட்டுத் தமிழர்களின் தலைகளையும் எண்ணிக் கூட்டிக் கணக்கெடுத்துக் கொண்டு தொகுதி நிர்ணயம் செய்வது என்றும், அதன் பிரகாரம் கண்டிப் பகுதிக்கு அதிகப்படியான பிரதிநிதிகளுக்கு வழி வகுப்பதென்றும் அரசாங்கம் நீதியற்ற முறையில் முடிவு செய்திருக்கிறது.

ஆனால் பொதுத் தேர்தலின் போது பிரஜா உரிமை வாக்குரிமையுள்ள (சிங்கள) வர் மட்டுமே போட்டியிட முடியும், வாக்களித்து பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்ப முடியும். தலை எண்ணிக்கை கொடுத்துதவிய மலை நாட்டுத் தமிழர் தொடர்ந்து பிரஜா உரிமை வாக்குரிமையற்ற அனாதைகளாகவே ஒதுக்கப்பட்டு நசுக்கப்பட்டு வருவார்கள். இது "உமி உனக்கு அவல் எனக்கு" என்ற கதைபோல் காணப்படுகிறது.

போதாக்குறைக்கு,மேற்படி சட்டத் திருத்தத்தினால் மலை நாட்டுத் தமிழரிடையே பதிவுப் பிரஜைகளானவர்களுக்கென்று வாக்குறுதியளிக்கப் பட்டிருந்த நான்கு பாராளுமன்ற ஸ்தானங்களும் பறிக்கப்பட்டு நீக்கப்பட்டு விடுகின்றன.

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு எத்தகைய மாபெரும் அநீதி செய்யப்படுகிறது என்பதைத் தமிழ் பேசும் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏனைய நாடுகளிலெல்லாம் சிறுபான்மை மக்களுக்கு அவர்கள் விகிதாசாரத்திலும் பார்க்க அதிகப்படியான

# அரசமைப்புத் திருத்தச் சட்டம் இழைத்துவிட்ட அநீதி

# இடதுசாரிகளும் தமிழர்களை விலை கூறி விற்று விட்டார்கள்

## "தன் கையே தனக்குதவி" என்பதே இனி நமக்குத் தாரக மந்திரம்

[ திரு. கு. வன்னியசிங்கம் கோப்பாய்ப் பிரதிநிதி ]

சிங்களம் மட்டும் சட்டத்துக்குப் பின், பொதுவாக தமிழ் பேசும் மக்களுக்கும் சிறப்பாக தமிழர்கட்கும் குறிப்பாக மலைநாட்டுத் தமிழருக்கும் அதிகமான தீங்கிழைக்கும் சட்டமொன்றுண்டானால் அது சமீபத்தில் பிரதிநிதிகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தச் சட்டம் என்றேகூறலாம். தீங்கிழைப்பதில் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு சிறிதளவுதானும் இச்சட்டம் பின் நிற்கவில்லை.

இச் சட்டத்தின்கீழ் புதிய தொகுதி நிர்ணய சபை நியமிக்கப்படவிருக்கிறது.

1946ல் வகுக்கப்பட்ட தொகுதிகளையே நிரந்தரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று எவரும் விரும்பவில்லை. ஆனால் புதிதாக தொகுதி நிர்ணயிப்பது என்ற போர்வையில் சிங்கள வகுப்புவாதம்தனது கோரத் தாண்டவத்தை நடத்தியிருக்கிறது.

இதற்கு அனுசரணையாக இடதுசாரிக் கட்சிகளும் நடந்து கொண்டது மிகவும் விசனிக்கத்தக்கது. இடதுசாரிக் கட்சிகளால் தமக்கு விமோசனம் ஏற்பட இருக்கிறது என்ற நம்பிக்கை வைத்திருந்தவர்களுக்கெல்லாம் இது சரியான தலையிடி கொடுத்திருக்கிறது.

### பெரும்பான்மையினர் பிரதிநிதித்துவம்

எந்த நாட்டிலாவது பெரும்பான்மையினத்துக்கு அவர்கள் விகிதாசாரத்திலும் அதிகப்படியான பிரதிநிதித்துவம் வழங்குவது வழக்கமில்லை. அதிகமான அரசியல் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு விகிதாசாரத்திலும் அதிகப்படியான பிரதிநிதித்துவம் கொடுக்கப் பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

ஆனால் 1948லும் அதற்குப் பிறகும் இயற்றப்பட்ட சட்டங்களின் பயனாக மலைநாட்டில் வதியும் தமிழ் தோட்டத் தொழிலாளிகளின் பிரஜாவுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டதும்அவர்களுக்குரிய ஸ்தானங்களும் சிங்கள மக்களைச் சேர்ந்தன. இதனால் சிங்கள மக்களுக்கு விகிதாசாரத்துக்கும் மேலதிகமான பிரதிநிதித்துவம் கிடைத்தது.

இவ்வித அநீதி அரசமைப்புத் திட்டத்தில் இடம்பெறாது நடைமுறையிலிருந்து வந்தது. இப்பொழுது இந்த அநீதியை அரசமைப்புத் திட்டத்திலேயே(இடதுசாரி பிரதிநிதிகள் உதவியுடன்) புகுத்திவிட்டது அரசாங்கம்!

### உரிமை பறிமுதல்

மலைநாட்டுத் தமிழ்தொழிலாளிகளின் வாக்குரிமை,பிரஜாவுரிமையைப் பறித்ததற்கு ஓரளவு பிராயச்சித்தம் தேடுமுகமாக அவர்களுக்கு பிரதிநிதிகள் சபையில்

(9-ம் பக்கம் பார்க்க.)

பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொம்யூனிஸ்ட் செஞ்சீனாவின் பாராளுமன்றமான தேசிய மக்கள் காங்கிரஸில் கூட 6 சத வீதமான சிறுபான்மை மக்களுக்கு 14 சத வீதமான ஸ்தானங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இலங்கையில் பெரும்பான்மையோர் தங்களுக்கு அதிக ஸ்தானங்களை உற்பத்தி செய்து கொள்கிறார்கள். சிறுபான்மையோர் உள்ள ஸ்தானங்களையும் இழந்து அரசியல் ஊமைகள் ஆக்கப்படுகிறார்கள்.

இதனாலேயே "சிங்களம் மட்டும் சட்டத்துக்குப் பின், பொதுவாகத் தமிழ் பேசும் மக்களுக்கும், சிறப்பாகத் தமிழர்களுக்கும், குறிப்பாக மலை நாட்டுத் தமிழருக்கும் அதிகமான தீங்கிழைக்கும் சட்ட மொன்றுண்டானல், அது சமீபத்தில் பிரதிநிதிகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தச் சட்டம் என்று தான் கூறலாம்" என்பதாக கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் பிறிதோரிடத்தில் பிரசுரமாகும் ஒரு கட்டுரையில் கூறியுள்ளார்.

தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இத்தகைய சதித் திட்டங்கள் பொதியப்பட்ட அரசமைப்பு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு இடதுசாரிகளான சமசமாஜிஸ்டுகளும், கொம்யூனிஸ்டுகளும் அரசாங்கத்தோடு சேர்ந்து தோள் கொடுத்து வாக்களித்து உதவி புரிந்திருக்கிறார்கள்.

இத்தகைய சமசமாஜிஸ்டுகளும், கொம்யூனிஸ்டுகளும் தான் மலை நாட்டுத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடுவார்கள் என்று [illegible] தமிழ் "தோழர்" களும் தமிழ் பேசும் மக்களில் ஒரு சாராரும் எண்ணிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களுடைய அறியாமையைக் கண்டு நாம் அனுதாபப்படுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி அரங்கில் கவிஞர் கண்ணதாசன் இல்லை

## கொள்கை காரணமாக

### பகிஷ்கரித்ததாக அறிவிப்பு

**வானொலி 'ஆகாஷ்வாணி' என்று அழைக்கப்படும் வரை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதில்லை என முடிவு**

(சுதந்திரன் சென்னை நிருபர்)

சென்னை 15—

திருச்சி, சென்னை வானொலி நிலையங்கள் ஆகாஷ்வாணி என்று இந்தியில் அழைக்கப்படும் வரை வானொலி நிகழ்ச்சிகளில் தாம் பங்கு பற்றப் போவதில்லை என்று கவிஞர் கண்ணதாசன் சபதம் செய்து கொண்டார். தமது இந்த முடிவை அவர் திருச்சி சென்னை வானொலி நிலையத்தாருக்கும் அறிவித்து விட்டார்.

பொங்கலன்று நடந்த வானொலிக் கவி அரங்கில் கவிஞர் கண்ணதாசன் பங்கு பற்றுவார் என்று முன்னர் குறிப்பிடப் பட்டிருந்தும் கடைசியில் அவர் பங்கு பற்றுததற்குக் காரணம் அவர் மேற்கொண்டுள்ள சபதம் தான் என்று தெரிகிறது.

#### ஏமாற்றமும் மகிழ்ச்சியும்

கவி அரங்கைக் கேட்டு ரஸிக்க ஆவலோடு காத்திருந்த அனைவரும் கவிஞர் கண்ணதாசன் அதில் பங்கு பற்றுததால் ஏமாற்றம் அடைந்தனர். தரமான கவிதை, சுவையான பாடல் இல்லையே, கண்ணதாசன் கவி இடம் பெறுததால் அரங்கு இருண்டு சோபை இழந்து விட்டதே என்று வருந்தியவர்கள் ஒரு வகையில் மகிழ்ச்சி அடையாமலும் இல்லை.

கவிஞர் கண்ணதாசன் தாம் மேற்கொண்ட முடிவால் தமது தமிழ்ப் பற்றையும், மன உறுதியையும், மக்கள் எண்ணத்துக்கு மதிப்பளிக்கும் பெருந்தன்மையையும், கொள்கைச்சிறப்பையும் புலப்படுத்தியதே அவர்கள் மகிழ்ச்சிக்குக் காரணம்.

#### போராட்டம்

ஆகாஷ்வாணி என்பதை வானொலி என்று தனித்தமிழில் சொல்ல அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கான பெரிய போராட்டத்தின் முதற்படி கண்ணதாசனின் நடவடிக்கை என்று கருதப்படுகிறது.

போராட்டத் திட்டத்தை வகுக்க கடந்த 6-ந் திகதி சர்வ கட்சி கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் முதலான பெரியோர் அடங்கிய இந்தக் கமிட்டியே இளவழகன் என்ற இருபது வயதுடைய வாலிபரின் உயிரைக் காப்பாற்றியது.

#### உண்ணாவிரதம்

இளவழகன் டிசம்பர் கடைசிப் பகுதியிலிருந்து ஜனவரி 6-ந் திகதி வரை (15 நாட்கள்) திருச்சி வானொலி நிலையத்தின் முன்பு உண்ணாவிரதம் இருந்தார். ஆகாஷ்வாணி வானொலி என்று மாற்றப் படாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்க உறுதி பூண்டிருந்த இளவழகனின் ஆபத்தான நிலை கண்டு பதினைந்தாவது நாளில் சர்வ கட்சிக் கமிட்டி குறுக்கிட்டு அவரது உண்ணாவிரதத்தை முடிப்பித்துக் கொண்டது.

சர்வ கட்சிக் கமிட்டி பெரிய போராட்டம் நடத்துவதென்று உறுதி அளித்ததின் பேரிலேயே இளவழகன் தமது தனிப் போராட்டத்தை முடித்துக் கொண்டார்.

#### பகிஷ்கரிப்பு

சர்வ கட்சிக் கமிட்டியின் போராட்டத் திட்டத்துக்கு ஆதரவு காட்டு முகமாக இனிக் கண்ணதாசனைத் தொடர்ந்து வேறு பல தமிழறிஞர்களும் கவிஞர்களும் 'ஆகாஷ்வாணி' நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரிப்பர் என்று பேசப்படுகிறது.

#### காங்கிரஸ் தலைமைப் பதவி

நாட்டு நிர்வாகத்தை ஏற்று நடத்தும் பொறுப்பு ஒரு குடும்பத்தின் கைக்கு மாறும் சூழ்நிலை உருவாகி வருகிறது. மகள் கொள்கை வகுக்க தந்தை அதை அமுல் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட இருக்கிறது.

அகில இந்திய காங்கிரஸ் தலைமைப் பதவி இப்போது காலியாகி விட்டது. தேபர் ராஜிநாமாச் செய்து கொண்டார். அவரது ராஜிநாமா அண்மையில் கூடிய காங்கிரஸ் கமிட்டியால் ஏற்றுக் கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து காலி ஸ்தானத்துக்கு போட்டி பலம். ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் வரை தேபர் தொடர்ந்து கடமை செய்யும்படி கேட்கப் பட்டிருக்கிறார். அவரும் ஜனவரி முடிவு வரை 'கெடு' வைத்திருக்கிறார். ஆகவே பெப்ரவரி முதல் தேதியிலிருந்து புதிய தலைவர், பதவி வகிக்க வேண்டும்.

#### யார் தலைவர்?

யார் அந்தத் தலைவர்? பலரின்பெயர்களும் அடிபட்டன தமிழ் நாட்டைச் சேர்ந்த நிதி, கல்வி மந்திரி சுப்பிரமணியம், மைசூர் நிஜலிங்கப்பா பிரதமர் நேருவின் புதல்வி இந்திரா காந்தி —இந்த மூவரின் பெயருமே கடைசியாகப் பலமாக அடிபட்டன.

#### மந்திரி சுப்பிரமணியம்

இப்பொழுது மந்திரி சுப்பிரமணியத்துக்கு 'நோக் அவுட்' அவரைத் தாம்தமது மந்திரி சபையிலிருந்து இழக்க முடியாது என்று முதன் மந்திரி காமராஜர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். 'சுப்பிரமணியத்துக்குத் தனிப் பெருமை வேண்டாம். தன்னுடைய மந்திரி சபை எதிர்க்கட்சித் தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடித்து எல்லோர் பதவிகளையும் காப்பாற்றுமளவுக்கு 'பலம்' பொருந்தி இருந்தால் அதுவே சுப்பிரமணியம் செய்யக்கூடிய பெரியதேசத் தொண்டு' என்பது காமராஜரின் அபிப்பிராயம். இதை ஏற்றுக்கொண்டு மந்திரி சுப்பிரமணியம் ஒதுங்கி விட்டார். தமிழ் நாடு, கட்சித் தலைமைப் பதவியைத் 'தியாகம்' செய்துவிட்டது.

#### மைசூர் நிஜலிங்கப்பா

மைசூர் நிஜலிங்கப்பாவும் தளர்ந்துவிட்டார். நேருவின் புதல்வி தலைமைப் பதவி ஏற்பதே சாலச்சிறந்தது என்று தாமே சொல்லத் தொடங்கிவிட்டார். 'பெரிய' இடத்தில் முட்டி மோதிக்கொண்டு நாமெல்லாம் ஏன் இடறி விழுந்து எழ வேண்டும் என்ற அவருடைய ஏக்கத்தால் தென்னாடு அடைய வேண்டிய கௌரவம் ஆழக்குழியில் புதைபட்டுப்போய்விட்டது.

இப்போது ஹோதாவில் 'நீட்டோலை வாசி'யாக நிற்பது நேருவின் புதல்வி. எதிர்ப்பு இல்லை. ஆரம்பத்தில் இருந்த சொற்பமும் எப்படியோ அவிந்துவிட்டது. எதிர்பார்க்கக்கூடியது தானே இது? அனேகமாக இந்திரா ஏகமனதாகவே அகில இந்திய காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யப்படலாம்.

#### நிலச் சீர்திருத்தம்

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக உச்ச வரம்பு நிர்ணயிக்கும் பிரச்னை தென்னாட்டில்

---

### கடல் கடந்த கதை

கடல் கடந்த கதை!— தரணியாண்ட பண்டைத் தமிழனின் பழங் கதையல்ல. தற்காலத் தன்மானத் தமிழன், தமிழரசுத் தளபதியின் புத்தம் புதிய கதை!

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம் தமது வாழ்க்கைத் துணைவி மங்கையர்க்கரசியாருடன் கடந்த வருடம் நடந்த இன கலவரத்தின்போது கப்பலோட்டிச் சென்று கிழக்கிலங்கைக் கரையில் காலடி வைத்த உண்மைக் கதை!

தமக்கே உரிய பாணியில் பிரத்தியேகமாகச் சுதந்திரனுக்கெனத் திரு அமிர்தலிங்கமே எழுதுகிறார். தொடர்ந்து வெளி வரும்.

ஆசிரியர்: சுதந்திரன்

---

பெரிய வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளாகி வருகிறது.

மக்களுக்கு உள்ள விளை நிலங்களை அவரவர் இவ்வளவுதான் சொந்தமாக வைத்திருக்கலாம் என்று வரையறை செய்யும் விவகாரம் இது. இந்தியாவில் பல ஆயிரம் ஏக்கர் விளை நிலம் உள்ளவர்களும் அதேசமயத்தில் ஒரு சாண் நிலம்கூட இல்லாமல் தவிப்பவர்களும் இருப்பது தெரிந்ததே. நிலம் இல்லாதவர்கள் உள்ளவர்களின் நிலத்தில் பாடுபட்டு உழைத்தாலும் பெரும்பாலும் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெறுவதில்லை. அவர்கள் ஒட்டாண்டிகளாக்கப்படும் ஈனம் இன்று நேற்றல்ல, பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது.

#### திட்டக் கமிட்டி

சோஷலிஸ பாதையில் முன்னேறிச் செல்லுவதாகச் சொல்லப்படும் இந்திய சர்க்கார் இந்த ஈனம் ஒழிக்கப்படுவது முன்னேற்றத்துக்கு மேலும் விசை கூட்டும் என்று கருதுகிறது. எனினும் இந்தத் துறையில் அந்தந்த மாநில அரசாங்கங்களே பணி செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டு நிலைமையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க திட்டக் கமிட்டி ஒன்றையும் நியமித்துக் கொடுத்திருக்கிறது மத்திய சர்க்கார்.

#### சிபார்சு

"சாதாரண ஒரு குடும்பத்துக்கு வருஷமொன்றுக்கு ரூபா 3600 வருமானம் தரப் போதுமான அளவு விளை நிலம் இருந்தால் போதும். (அந்த அளவு வருமானம் பெற சுமார் 9 ஏக்கர் நிலம் வேண்டும்) ஒரு குடும்பத்திடம் இதற்குமேலதிகமான நிலம் இருந்தால் அந்த மேலதிக நிலத்தில் கூட்டு (பண்ணை) விவசாய முறையை ஆரம்பிக்க வேண்டும்"—இதுதான் திரு வி. டி. கிருஷ்ணமாச்சாரியைத் தலைவராகக்கொண்ட "திட்டக் கமிட்டி செய்த சிபார்சின் சாரம்.

#### எதிர்ப்பு

இந்த சிபார்சை பெரும்பாலும் ஏழை மக்கள் வரவேற்கிறார்கள். பொதுவாக எல்லாக் கட்சிகளும் ஆதரிக்கின்றன. அதிக நிலம் படைத்த அன்பர்களே எதிர்க்கிறார்கள். உடைமையை இழக்க யாருக்கு இலேசில் மனம் வரும்?

இவர்கள் தமது எதிர்ப்புக்கு இரண்டு காரணங்கள் கூறுகிறார்கள். ஒன்று ஒரு குடும்பத்துக்கு திட்டக் கமிட்டி சிபார்சு செய்துள்ள வருமானம், வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இன்றைய நிலையில் போதாது என்பது. மற்றது கூட்டு விவசாய முறை தனியார் நடத்துவது போன்று இலாபகரமாகவும் இலகுவாகவும் நடைபெறுது என்பது.

---

## அரசமைப்புத்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிவுப் பிரஜைகட்கென தனி தொகுதிகளையமைத்து அவற்றிற்கு மூலம் 4 பிரதிநிதிகளைத் தெரியும் உரிமை வழங்கப்பட்டது. அதன்பின்னர் இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் மலைநாட்டுத் தமிழ் மக்களைப் பதிவு செய்ய முடியவில்லையென்று சாக்குப் போக்குச் சொல்லி அவர்கள் தேர்தலைப் பின்போட்டு வைத்திருந்தார்கள். இப்பொழுது தொழிலாளர்களுக்காகப் போராடும் இடதுசாரித் தோழர்கள் உதவியுடன் இவ்வுரிமையும் சட்டபூர்வமாக பறிக்கப்பட்டு விட்டது! தனித் தொகுதி முறை வகுப்புவாதமாம்!

#### கொடிய சட்டம்

ஆனால் ஓர் சிறுபான்மை இனத்தின் வாக்குரிமை பிரஜாவுரிமையைப் பறித்து அவர்களை அரசியல் அனாதைகளாக்கிவிட்டு, அவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு 16 ஸ்தானங்களை சிங்கள மக்களுக்கு கொடுக்கும் வகுப்புவாதத்தை பெயரளவில் எதிர்த்து, பேச்சளவில் மிக மிக வன்மையாகக் கண்டித்துவிட்டு, காரியாம்சத்தில் முற்றாக ஏற்றுக்கொண்டார்கள். கூட்டுத் தொகுதியில் ஒருசில ஸ்தானங்களை பதிவுப் பிரஜைகளுக்கென ஒதுக்குவது வகுப்புவாதம் என வாதிப்பவர்கள் சிறுபான்மை இனத்தின் உரிமைகளை கபளீகரம் செய்து பெரும்பான்மையினம் அதிக பிரதிநிதித்துவம் பெறும் திட்டத்தை ஆதரிக்கும், அநீதியை அரசமைப்புத் திட்டத்தில் புகுத்தியது மட்டுமல்லாமல் 1971ம் ஆண்டுவரை அதை நிலைநாட்டியும் விட்டார்கள். மலைநாட்டுத் தமிழர்களின் பிரஜாவுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டதன் பின் கொண்டுவரப்பட்ட சட்டங்களில்வேறெந்தச் சட்டமும் மலைநாட்டுத் தமிழ் மக்களை இவ்வளவு பாதித்திருக்குமென்று சொல்ல முடியாது.

#### வடக்கிலும் கிழக்கிலும்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்திலும் விகிதாசாரப்படி துண்டு விழுந்திருக்கிறது. இப்பொழுது இருக்கும்ஸ்தானங்களிலும் பார்க்க வடக்கு மாகாணத்துக்கு 4 ஸ்தானங்களும் கிழக்கு மாகாணத்துக்கு 4 ஸ்தானங்களும்கிடைக்கும் என்று நாம் மகிழ்வதற்கில்லை. கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற சிங்களக் குடியேற்றத்தின் பயனாக அங்குகிடைக்கும்ஸ்தானங்களில் கட்டாயமாக இரண்டு, அல்லது மூன்று தொகுதிகள் சிங்கள மக்களுக்கு போய்விட இடமுண்டு.

இப்புதிய திட்டத்தின்கீழ் பலவகைகளிலும் தமிழ்மக்களுக்கெதிராக சதி நடந்திருக்கிறது. அதற்கு யூ. என். பி., எம். ஈ. பி. கட்சிகள் மட்டுமல்ல இடதுசாரிக் கட்சிகளும்கூட உடந்தையாக இருந்துவிட்டன!

#### போராட்டம் தான் ஒரே வழி

அவைகளும் தமிழ் மக்களை இனப் பாகுபாட்டின்பேரால் விலைகூறி விற்றுவிட்டன என்றே சொல்ல வேண்டும்.

"தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை தங்கள் போராட்டத்தினால்தான் பெறலாமே தவிர எவர் கையை எதிர்பார்த்தும் பெற்றுக்கொள்ள முடியாதென்பது தெட்டத் தெளிவாகிவிட்டது. தன் கையே தனக்குதவி என்பதுதான் இனித் தமிழர்களின் தாரக மந்திரமாக வேண்டும்.

---

### புதிய பகுதி

"இவை மூட நம்பிக்கைகளா?" என்ற ஒரு புதுப் பகுதி சுதந்திரனில் அடுத்தவாரம் ஆரம்பமாகிறது.

---

## சுதந்திர.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களாகிய நாம் எமது ஆதரவை அளிப்போமாக. அது எங்கள் கடமை.

சுதந்திரன் பல்லாண்டு தமிழனின் உரிமைக் குரலாக விழங்க வேண்டும் என்று ஒவ்வோர் தமிழனும் இறைவனை வழுத்த வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் எனது மகிழ்ச்சியையும் ஆசியையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

என். ஆர். இராஜவரோதயம்

---


## தேவை

சுதந்திரன் ஆசிரியர் பகுதியில் வேலை பார்ப்பதற்கு ஒரு சிங்களம்—தமிழ் மொழி பெயர்ப்பாளர் தேவை. சிங்களப் பத்திரிகைகளிலிருந்து செய்திகளைத் தமிழில் மொழி பெயர்க்கக் கூடியவராகவும், சுயமே கட்டுரைகள் தீட்டக் கூடியவராகவும், ஆங்கில அறிவு உடையவராகவும் இருக்க வேண்டும். வயது, தராதரம், அனுபவம் முதலியன குறித்து 31—1—1959 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர்: சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடல் சிரித்தது!

சிறுகதை — எழுதியவர்: எஸ். அகஸ்தியர்

மூன்று நாட்களுக்கு முன் அந்தக் கடற்கரையில் முத்து பிணமாகக் கிடந்தான். அந்தச் சடலத்தின் சதைப் பிண்டங்கள் பிய்ந்து போய்க் கிடந்தன.

மீன்களின் மாமிச வெறி வேட்டைக்கும், கடல் அலைகளின் முரட்டு மோதல்களுக்கும் ஆளாகி அழுகி நெக்கு விட்டுப்போன அந்தப் பிரேதம் கரையில் சதா மோதிக் கொண்டிருந்தது.

காகங்கள் அதன் கண்களைத் திறந்து தின்று தீர்த்து விட்டன. இன்னும் அதன் நாற்ற 'வெடில்' அந்த ஊரை உசுப்பிவிட்டுக்கொண்டு தானிருந்தது.

"பாவம்! நாலு வருடங்களுக்குமுன், அடைக்கல மாதா கோயிலில் அவனைத் தன் நாயகனாகச் சத்தியப் பிரமாணம் செய்து ஏற்றுக் கொண்ட மேரியைக் கூடத் தவிக்க விட்டு அவன் செத்துப்போய்விட்டான்"

"நாசமாய்ப் போக. அவள் தான் அவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டாள். அதுதான் அவன் கடலில் விழுந் துசெத்துப்போய்விட்டான்"

"பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா?"

"மாஞ்சோலை வேதசாட்சி கோயிலிலே போய்ப்பார். அப்போ தெரியும் பொய்யா, மெய்யா என்பது"

கடற்கரைக் காற்றோடு அள்ளுப்பட்டு வந்த இந்த வார்த்தைகள், முத்துவின் தந்தை—கிழவன் கயித்தானுக்கு நன்றாகக் கேட்டன.

"ஐயோ முத்து..."

கிழவன் குரல் எடுத்துப் பலமாகக் கத்தினான்.

அவனுடைய கண்கள் அந்தக் கடலை வெறித்துப்பார்த்துச் சபித்தன.

கடலையும் குடிசையையும் மாறி மாறிப் பார்த்துக் கடைசியில் கடல் மண்ணை அள்ளி எறிந்து திட்டி, 'ஓ' வென்று அழுத கிழவன், மேலே பார்த்து எதிலோ லயித்தான்.

இருதயம் உருகியது; உருகிய அந்த இருதயத்திலே, செத்துப்போன அவன் மகன் முத்துவும் அவன் கூட்டாளி மரியானும் பாசத்தின் சாயலில் தோன்றினார்கள்.

குமுறிப் பாயும் கடலலைகளைக் கிழித்துக்கொண்டு உலாஞ்சி உலாஞ்சித் தூக்கியெறியும் தோணியின் அணியம் முத்துவைத் தொட்டிற் குழந்தைபோல் ஆட்டியது.

கறுத்துத் திரண்டு வரும் மேகத் திவலைக் கூட்டங்கள் 'சோ'வென்று வெறித்துச் சீறிப்பாயும் புயல் காற்றில் பட்டு மாய்ந்தன.

கடல் உறுமியது; காற்றுப் பேயென அடித்துச் சீறியது. முத்து, கோடாகத்தை இறுக்கிக் கட்டிக்கொண்டு கூதல் திரச் சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்துத் 'தம் பிடித்து' இழுத்தான்.

கொண்டல் மழை குடியைக் கெடுக்கும் என்பது அவனுக்குத் தெரியும். இப்போ அவன் மனம் கொண்டல். கரையோரம் தாவியது.

'மேரி என்ன பாடோ...?'

அவன் அவளுக்காக மேலே பார்த்துச் செபித்தான்.

"ஐயோ தேவனே!"

மீண்டும் இடி முழக்கம்; கண்களைப் பறிக்கும் வெட்டு மின்னல்; இரைந்து கொட்டும் சோனாவாரி மழை; தொடர்ந்து அலறல் காற்று......

"அண்ணே, பாயை இழக்கு"

முத்து பலமாகக் கத்தினான்.

"டேய், நீ ஆத்தான் கயித்தை விடடா"

கடையாலிலிருந்து மரியான் உத்தரவிட்டான். அந்த உத்தரவுக் குரல் முத்துவின் காதுகளுக்கு எட்டவில்லை. "மரியான் அண்ணே, என்ன சொன்னாய்?" என்று குரலெடுத்துக் கேட்டான்.

"சனியனே, ஆத்தான் கயித்தை அவிட்டுவிடடா. தோணி கடலுக்குள் சரியப் போகுது"

முத்து பயந்துபோனான். மரக்கோல்களையும், சவளையும் எடுத்து அடங்க வைத்துவிட்டு, மரியான் இன்னும் தன் உயிரை வாங்கப் பார்ப்பானோ என்று எண்ணி ஏங்கி அவனை வெறித்துப் பார்கிதான்.

"சோம்பேறிக் கழுதை இங்கே வாடா"—

மரியான் கோபத்தோடு அழைத்தான்.

கரிய இருளில் அவன் முக பாவத்தைக் காண முடியவில்லை.

"நீ, கடையாலிலே இரு. நான் அணியத்திலே நிற்கிறேன். என்ன நடுங்குகிறாய்? கூதலா? பல்லைக் கடித்துக் கொண்டு கம்பைப் போடு

> தன் ஆசை மனைவி மேரிக்கு, முத்து தேடிக் கொடுத்தது துணை. வெறும் துணையேதான். அது தனக்கே வினையாக முடியுமென்று அவன் எண்ணினானா?

கூதல் பறக்கும். என்ன நான் சொன்னது கேட்டதா?"

இவ்வாறெல்லாம் சொன்னபின் மரியானுக்கு அவன் மீது இரக்கம் பிறந்துவிட்டது. மீண்டும் "ஊண்டித் தாங்கடா தம்பி. அந்தக் கொட்டிலிலே போய் நெருப்பு எரித்துக் கூதல் காய்வோம்" என்றான்.

முத்துவிற்கு இப்போ உற்சாகம் கரைபுரண்டோடியது.

பரவைக் கடலைத் தேடி அணியத்து முனையை வைத்துத் தாங்கினான். எனினும் மனைவி மேரியின் நினைவு வந்ததும் அவன் பலமிழந்து சோர்வடைந்துவிட்டான்.

'அடைக்கலமாதாவே, வீட்டிலே மேரி குளிராலும் என் நினைவினாலும் ஏங்கிச் சாவாளே...அவளுக்கு நல்ல ஆறுதலைக் கொடு'

அவன் மேலே பார்த்து மீண்டும் வேண்டிக்கொண்டான்.

மேரியை அவன் கைப்பிடித்து ஒரு ஆண்டு கழியவில்லை என்பது மரியானுக்குத் தெரியும்; கிண்டல்பண்ணினான்.

"பொன்னையா விட்டிலே கட்டிப் பிடித்துக்கொண்டிருக்காமல் உழைச்சுக் கொட்ட வந்திட்டியா? அங்கேயும் இங்கேயும் மனம் ஓடினால் தொழில் உருப்பட்ட மாதிரித்தான்"

இதைக் கேட்டு முத்து தன்னை மறந்து சிரித்தான்.

அவள் கொடுக்கும் கொள்ளை இன்பத்தைப் புலன்களில் செலுத்திக் களித்தான்; உடல் திரண்டது.

கடல் ஓய்ந்தது; காற்று அடங்கியது.

★

விடிவெள்ளி கிளம்பிவிட்டது. மேரி தனியாய்த் தவித்தாள். இன்னும் அவள் கல்யாணப்புதுப் பெண்தான். ஒரு பூவோ பிஞ்சோ பிடிக்காதது அவளுக்கு ஒரே மனக் குறை. அவளைக் கேட்பானேன். [illegible] அவனை எண்ணிப் பட்ட[illegible]டு...அப்பப்பா...!

அவன் இன்னும் வரவில்லை. அவள் நெஞ்சு இருண்டது; மனம் நிலைகொள்ளாது அலைந்தது. மேலே பார்த்து மேரி மாதாவை வேண்டிச் செபம் செய்தாள்.

வலையையும் பறியையும் தோளில்போட்டுக்கொண்டு குடிசை நோக்கி வந்து கொண்டிருந்த முத்துவைக் கண்ட மேரி அழுதாள். அவள் கண்கள் வீங்கிப் போயிருந்தன.

"கடந்த இரவு அவள் என் உயிருக்குப் பயந்திருப்பாள். அதனால்தான் இந்த நிலைக்கு ஆளாகித் தவிக்கிறாள். என்ன இருந்தாலும் பெண் அல்லவா?" என்பது அவன் அபிப்பிராயம். அதிலே அவனுக்கு ஒரு பெருமிதம்.

"நான்தான் வந்துவிட்டேனே, இன்னும் ஏன் அழுகிறாய்? கஞ்சி கிடந்தால் போய்க் கொண்டுவா, போ"

வாழ்க்கைச் செலவு கோரி அரசாங்க ஊழியர்கள் செய்த வேலைநிறுத்தம், கறுப்புச் சந்தைக்காரர்களுக்கு யோகம் அடித்துவிட்டது. சீனிக்கும் மாவுக்கும் தட்டுப்பாடு. அவள் பனங்கட்டியையும் சுடு தேனீரையும் கொடுத்தாள்.

அவன் சுவைத்துக் குடித்தான்.

அவன் கன்னத்திலே ஒட்டியிருந்த கடற்பாசி ஒன்றை அவள் தன் மெல்லிய விரல்களால் அழுத்திப் பரிவோடு எடுத்து அப்புறப்படுத்திவிட்டு அருகில் அமர்ந்துவிட்டாள்.

அவன் கண்கள் அவளைக் கொஞ்சலாகப் பார்த்தன; அவள் சிரித்தாள்.

"ஏய், இப்படி வா"

அவன் அழைத்தான்; அவள் எழுந்தாள்.

"ராத்திரிப் பயந்திட்டியா?"

அன்பு வெறி அவன் கண்ணை மயக்கியது. அவள் அட்டைபோல் சுருண்டு அவன் மடியில் கிடந்தாள்.

"நீ......!"

இறந்துபோய்க் கொண்டிருக்கும் ஜீவனுக்கு ஒரு பேச்சு வேறு? அவளால் பேச முடியவில்லை; அவனும்...!

★

இரவிரவாகக் கடலில் மாய்ந்து நான்தான் விதியினால் மடிந்து சாகிறேனென்றால், அவளும் அதற்காகத் தனிமையில் இரவு முழுதும் பயந்து சாவதா? என்ற ஒரு எண்ணம் அவனை வாட்டியது. ஒரு குழந்தை குட்டியாவது கிடைத்திருந்தால் கொஞ்சம் துணையாகக்கூட இருக்கும்......

மேரியில் வைத்த உயிர் அன்பு, அவனை எப்படியெல்லாமோ சிந்திக்க வைத்தது.

இப்போது அவனுக்குத் தன் சித்தப்பன் மகன்மீது மனம்போய்விட்டது. அவனும் சிறு பயல்தானே!

தின்று கொழுத்துச் சும்மா திண்ணைக்கு மண் எடுப்பவன், அண்ணை பெண்சாதிக்குத் துணையாய் இருக்கட்டுமே!

முத்து மறுநாளே மாணிக்கத்தின் சுதந்திரத்தில் மண்ணைப் போட்டுவிட்டான்.

திருவிழா, பேசும் படம், முச்சந்திச் சிரிப்பு ஆகியவைகளுக்கு மாணிக்கம் இனி முழுக்குப் போட வேண்டியதுதான். அதனால் ஆத்திரம்தான். என்றாலும் அண்ணன் சொல்லை எப்படித் தட்டுவது? ஒப்புக்கொண்டான்.

★

அன்றும் கடல்கொந்தளித்தது. ஆனால் அவள் உள்ளமோ குதூகலித்தது. மூன்று வருடங்களாக இத்தகைய நிகழ்ச்சிகள் எத்தனையோ தடவைகள் நடந்தன. முத்து ஒரு அப்பாவி. அவன் மனம் பேதலிக்கவில்லை.

★

அன்றொருநாள்...காற்று, விட்டுவிட்டு 'வெருக்' கென்று உதறித் தள்ளியது. மழைத் தூறல் ஓயவில்லை. மேகமண்டலத்தினலைகள் கருக்குருவிகள் போல் திரண்டு படை படையாகப் பறந்தன. தோணியில் இடிந்துபோய் இருந்த முத்து மேரியை நினைத்துச் செபமாலை ஓதினான்.

மீண்டும் இடிமுழக்கம். கண்களைக் குருடாக்கும் திடீர் மின்னல்; வாசிப் பொழியும் மழை, காற்று...... மீண்டும் தொடர்ந்து காற்று ..., புயல்......!

"தேவமாதாவே!"

அவன் மேரியை நினைத்துப் பலமாகக் கத்தினான்.

"என்னடா பயித்தியம்? ஆண்டவனிலே பழியைப் போட்டுக்கொண்டு தோணியைத் தள்ளித்தாங்கு."

முத்துவிற்கு மரியான் தைரியம் கூறினான்.

"உனக்கு என்னண்ணை தெரியும். அவள் என்னை எண்ணிச் செத்துப்போவளே"

மரியான் சிரித்தான். ஊரிலே மேரியையும் மாணிக்கத்தையும் பற்றிப் பேசப்படுவதை மரியான் அறிந்து வைத்திருந்தான்.

"ஏன்டா முத்து, உன் பெண் புதிசா உன்னை நேசிக்கிறாவா? எப்பதொடக்கம்?"

முத்து பரபரப்படைந்தான். எதிர்பாராத கேள்வியாதலால்.

"என்ன அண்ணே அது? என்ன கேட்டாய்?" என்றான்.

"சரி சரி ஊண்டித் தள்ளித் தாங்கு" என்றவாறு ஏதோ கூறிப் பேச்சை வேறு பக்கம் திருப்பினான் மரியான். எப்படியோ மூன்று கூடைகளும் இரண்டு பறிகளும் நிரம்ப மீனும் இறாலும் பிடித்து விட்ட சந்தோஷத்தில் முத்து தடுமாறினான்.

முத்து வலையையும் பறியையும் மாட்டித் தோளில் போட்டுக் கொண்டு துள்ளி ஆடிக்கொண்டு குடிசை நோக்கி நடந்தான்.

வழக்கத்திற்கு மாறாக வீடும் பூட்டியிருந்தது. செத்தையின் ஓலைக் கீறுக்குத் துவாரங்களினூடே தன் கண்களை அகலத் திறந்து பார்த்தான் முத்து. அவளைக் காணவில்லை.

"ஐயோ கடவுளே!"

அவன் ஏங்கிப்போனான்.

மாணிக்கம்.........?

அவனையும் காணவில்லை!

மரியானின் எதிர்பாராத கேள்வி அவன் மனத்திரையில் அப்போதுபளிச்சிட்டது.

"அடைக்கல மாதாவே!" என்று அவன் வாய் முணுமுணுத்தது.

வலையும் பறியும் முற்றத்தில் அலங்கோலமாகக் கிடந்தன.

அவன் ஓடினான். வாழ்வளித்த ஆழிக்கே ஓடினான்.

அது சிரித்து அவனை வரவேற்றது. காற்று ஓய்ந்தது.

சிறிதுநேரத்தில் தனது அலைக் கரங்களால் கடல்தாய் அவனைத் தாலாட்டி மீளாத நித்திரைக்கு ஆளாக்கினாள்.

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்
கருத்தைக் கவரும் வடிவங்களிலும்
சிறந்த பாவனையிலும்
உறுதியான சாயத்திலும்
முன்னணி வகிக்கிறது
லதா
கேம்பிரிக்
சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.
இலங்கை முழுவதிலுமுள்ள புடவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.
ஏகவினியோகஸ்தர்கள்:
குண்டன்மால்ஸ்
26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் பறிமுதல்! இன பேதம்

## நிற வித்தியாசமே காரணம்

### நீதிக்கு முழுக்குப்போடும் இந்தக் கொடுமை ஜனநாயக நாடுகளிலும் நடக்கிறது

## தட்டிக் கேட்பார் யாருமில்லை

### ஐக்கிய நாடுகள் சபையிடம் போதிய பலமில்லை

ஜனநாயக நாட்டில் வாழும் சாதாரண ஒரு மனிதன். அவனுக்கு தன்னுடைய வாழ்க்கை எத்தகைய கட்டுப்பாட்டுக்கு அமைவாக நடக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கப் பொதுவாக எப்பொழுதுமே தோன்றுவதில்லை.

அவன் உண்பான்; உடுத்துவான்; உறங்குவான். தன்னுடைய அன்றாட வேலைகளுக்கு சென்று திரும்புவான். அவனை வழியில் யாரும் தாக்குவது இல்லை; பிடித்து சிறையில் வைப்பதும் இல்லை. அவன் ஒரு பத்துப்பேர் கொண்ட சமூகத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி, ஆயிரம் பேர் கொண்ட சமூகத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும்சரி, இலட்சக்கணக்காணோரைக் கொண்ட சமூகமாயிருந்தாலும் சரி, அந்த மனிதன் யாருக்கும் அஞ்சுவதில்லை. அதனால் நிராயுதபாணியாகவே வெளியே சென்று திரும்புவான்.

அது மட்டுமா? தனக்குப் பிடித்தமானவர்களைத் தன் வீட்டுக்கு வரவழைத்து மகிழ்வான். பிடிக்காதவர்களை வெளியில் விட்டுக் கதவை மூடிக்கொள்வான். இத்தனைக்கும் அவன் பழங்காலத்து மகாராஜாவோ அல்லது பெரிய படைத் தளபதியோ அல்ல. லட்சக்கணக்கான பிற மக்களைப்போல் அவனும் ஒரு சாதாரண பிரஜை. ஜனநாயக நாட்டில் வாழ்பவன்.

#### ஜனநாயக நாட்டில்

பழங்காலத்தில் பலம் பொருந்திய அரசர்களுக்கும் அவர் தம் வாரிசுகளுக்கும் இருந்த சுதந்திரத்தை இன்று இந்த ஜனநாயக நாட்டுச் சாதாரண பிரஜை அனுபவிக்கிறான் என்றால் அதில் ஆச்சரியம் இல்லை. ஜனநாயகக் கோட்பாட்டில் உள்ள "சட்டம்" "ஒழுங்கு" என்ற கட்டுக் கோப்புகளே அவனுக்கு அத்தகைய சுதந்திரத்தை அளிக்கின்றன. எதுவித ஆயுதமும் தன்வசம் இல்லாமல் தட்டம் தனிய வாழும் அந்த மனிதனுக்கு எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் அரசாங்கப் பாதுகாப்பும் உதவியும் கிடைக்கின்றன. பொலீஸ் உதவுகிறது. சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

இந்த நிலைமை சர்வ சாதாரணமானதாக நம்மில் பலருக்கு தோன்றுகிறது. ஆதிமுதல் இருந்து வரும் ஒழுங்கு முறை என்று படுகிறது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வானம் போல, வெண்மதி போல இந்த ஒழுங்கு முறையும் இருந்தே தீரும் ஒன்று என்ற மாதிரித் தெரிகிறது. காரணம்? இன்றைய உலகத்தைக் கண் எடுத்துப் பார்க்கும் நாம் அது இன்று உள்ள நிலையிலேயே ஆதியில் உருப்பெற்றதாக ஏனோ எண்ணி விடுகிறோம்.

#### மாற்றம்

ஆனால் முக்கியமாக நாம் எண்ண வேண்டிய பிறிதொன்று உண்டு. அதாவது உலகம் இன்றைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டது எப்படி? இதற்கு எத்தனை சக்தி வேண்டும்? எவ்வளவு தியாகம் செய்ய நேர்ந்திருக்கும்? எத்தனையோ இராப்பகலாக உழைத்து உழைத்து தமது உயிரையே தொலைத்து இருப்பார்கள்? அவர்கள் பட்ட பாட்டையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம் முன்னோர்களின் முயற்சி நிச்சயமாக வெற்றி அளித்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நமக்கு நம்பிக்கை பிறக்கிறது. அவர்களால் உலகில் மாற்றத்தை உண்டு பண்ணி அதை முன்னேற்றப் பாதையில் இழுத்துச் செல்ல முடிந்திருக்கிறது. அவர்களால் முடிந்த காரியம் நம்மால் முடியாதா என்ன? இன்று என்ன மாற்றம் வேண்டிக் கிடக்கிறதோ அதை நாம் செய்து முடித்து விடலாம். முன்னோர் உதாரணம் நமக்கு ஓர் முன் மாதிரி.

#### உழைப்பின் வெற்றி

நிலைமை எப்படியோ மாறியிருக்கிறது. ஜனநாயகக் கட்டுக்கோப்பில் சட்டமும் ஒழுங்கும் ஏதோ சர்வ சாதாரணமானவையாகத் தெரிகின்றன. ஆனால் ஒன்று, சட்டமும் ஒழுங்கும் எப்பொழுதும் இருந்ததில்லை. இப்பொழுதும் எல்லா இடங்களிலும் இருக்கவில்லை. இருக்கும் இடங்களிலும் எப்பொழுதும் இருக்கும் என்ற நம்பிக்கை இல்லை. நீண்ட காலம் மிகக் கடுமையாக முயற்சித்ததன்பயனாக மனிதன் அடைந்த வெற்றிதான் இன்று ஜனநாயகக் கட்டுக்கோப்பில் உள்ளடக்கியிருக்கும் சட்டமும் ஒழுங்கும் என்றால் அது பிழையாகாது. கிடைத்த வெற்றியைப் பாதுகாக்க முனைய வேண்டும். இல்லையேல் காலகதியில் அதை இழந்து தவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

மனிதன் ஜனநாயக நாட்டில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் எதுவித பயமின்றியும் இருக்க முடியும். இந்த நிலை நாட்டில் சட்டம் என்று ஒன்று இருப்பதனாலேயே சாத்தியமாகிறது. சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. எல்லோரும் அதை மதித்தே நடக்க வேண்டும் என்பது நியதி.

#### தண்டனை

தவறினால் என்ன சம்பவிக்கிறது? உதாரணமாக ஒருவன் அயல்வீட்டில் திருடிவிட்டான் என்றால் அவன் சட்டத்தின் பேரால் கைது செய்யப்பட்டு அவன்மீது நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து விசாரணை நடத்தப் படுகிறது. விசாரணையின் பின் திருடியவனுக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. அவனுக்குக் கிடைக்கும் தண்டனை திருடியதை யெல்லாம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதும் இனிமேல் அவன் நல்லவனாக, கண்ணியவானாக நடக்க வேண்டும் என்பதுமாக இருக்கலாம்.

பிறரைத் தாக்கித் துன்புறுத்திய ஒருவனும் நீதி மன்றத்தில் நிறுத்தி விசாரிக்கப் படலாம். பின்பு அவனுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

இப்படியே, ஒருவரைக் கொலை செய்தவனுக்கும் தண்டனை கிடைக்கும். அது தூக்குத் தண்டனையாகவும் இருக்கலாம். தண்டனை ஒருவன் செய்த குற்றத்துக்கு தகுந்தாற் போல இருக்கும்.

#### குற்றம்

குற்றம் செய்பவர்கள் தத்தம் மன இயல்புகளுக்கு [illegible] பச் செய்கிறார்கள். [illegible] இயல்புகள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இல்லை. மக்களின் மன இயல்புகள் மாறுபட்டு இருப்பதுபோல, அந்த மாறுபட்ட இயல்புகளின் விளைவாகச் செய்யப்படும் குற்றங்களுக்கும் வெவ்வேறு தண்டனைகள் கொடுக்கப்படுகின்றன. தண்டனைகள் சமுதாயத்தில் தெட்டத் தெளிவாக வரையறுக்கப்பட்டு இருக்கின்றன. ஆயினும் சில சமயங்களில் பலதரப்பட்ட குற்றங்களுக்கும் ஒரே வித தண்டனை கிடைப்பதும் உண்டு.

குற்றமும் தண்டனையும் பொதுவாக ஒன்றுக்கொன்று நேர்நிலையில் இல்லாதபோதிலும் அவை மனிதனைப் பொறுத்த மட்டில் ஒரே நிறை உள்ளவையாக இருக்கின்றன. குற்றம்செய்வதும் மனிதன் அல்லவா?

ஒருவன் செய்யும் குற்றம் மூன்று வகையில் அமையும். ஒன்று அடுத்தவனின் உரிமைகளைப் பறிப்பதாய் இருக்கும். இரண்டு அடுத்தவரின் சுதந்திரத்தை அபகரிப்பதாய் இருக்கும். மூன்று அடுத்தவனின் உயிரை எடுப்பதாய் இருக்கும். அதேபோல குற்றம் செய்தவனுக்கு அளிக்கப்படும் தண்டனையும் அவனது உரிமைகளை, சுதந்திரத்தை, உயிரைப் பாதிப்பதாய் இருக்கும்.

#### மனித உரிமைகள்

மனிதனுக்கு உள்ள மூலாதாரமான செல்வம் அவன் அனுபவிக்கும் சில உரிமைகள், பேணும் சுதந்திரம், காக்கும் உயிர். அதாவது வேறு விதமாகச் சொல்வதானால் மனித உரிமைகள் எனலாம்.

மனிதனின் இந்த மூலாதாரச் செல்வத்தை வரையறுத்து வழக்கில் இருத்த எவ்வளவு பொறுமையும் புத்திக் கூர்மையும் அறிவுத் திறனும் தேவைப்பட்டன என்பதை நினைத்துப் பார்ப்பது கூடச் சுலபமல்ல. ஆயின் சட்ட ஒழுங்கு முறை பற்றி வேறாகக் கூறவேண்டியதில்லையே!

#### சட்டமும் தீர்ப்பும்

நீதிமன்றத்திலே கைதிக் கூண்டிலே நிறுத்தி ஒரு குற்றவாளி விசாரிக்கப்படுகிறான். அதை நேரில் சென்று பார்த்தவர்களுக்கு தெரியும் ஒரு சங்கடம். குற்றவாளியின் முகத்தைப் பார்த்தால் அவன் அப்பாவியாகத் தோன்றுவான். அவனைப் போல குற்றம் புரியாத அப்பாவி வேறு யார் இருக்க முடியும் என்றுகூட எண்ணத் தோன்றும். ஆனால் யார் குற்றவாளி, யார் சுற்றவாளி என்று சரிவரத் தெரிந்து கொள்வதில்தான் நமது திறமை தங்கியிருக்கிறது. குற்றம் புரியாதவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். நமது நாகரிகமே அந்த அடிப்படையில் அமைந்திருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

விசாரணையில் ஒரு சிக்கல் இருக்கிறது. சாட்சியங்கள் அவற்றிற்கு மறுப்பான எதிர்ச் சாட்சியங்கள்- இவை கூட வரும். இவற்றிற்கு மேலாகச் சட்டம் இருக்கிறது. முடிவு அல்லது தீர்ப்பு [illegible] அதனாலேயே மனித உரிமைகள் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட மட்டிலும் கிரிமினல் சட்டம் முக்கியமானதாகக் கருதப் படுகிறது.

#### எதிர்ப்பு

இந்த விளக்கத்தைச் சிலர் — அதாவது மனித உரிமைகளை மனிதருக்கு வழங்கத் தயங்குகிறவர்கள் மறுக்கிறார்கள். கண்டிக்கவும் செய்கிறார்கள்.

இப்படி எதிர்ப்பவர்கள் தனிமனிதர்கள் மாத்திரமல்ல. சில நாடுகள் கூட எதிர்க்கின்றன. தற்கால சட்ட ஒழுங்கு முறைகளைச் சம்பிரதாயத்துக்கு வைத்துக் கொண்டு அவை நடத்தும் தர்பார் சொல்லும் தரமன்று. மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த பழைய காலத்து நாடுகளோ என்று எண்ணுமளவுக்கு அந்த நாடுகளின் செயல் கீழ்த்தரமானதாக இருக்கிறது.

மனிதன் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவனாக, ஒரு குறிப்பிட்ட நிறம் படைத்தவனாக, ஒரு குறிப்பிட்ட அரசியல் கொள்கை உடையவனாக இருப்பது குற்றம் என்று அந்த நாடுகள் கருதுகின்றன. தண்டனையும் கூட விதிக்கின்றன.

#### பரிதாப நிலை

அவனுக்குக் கிடைக்கும் தண்டனை அவனுடைய மனித உரிமைகளை, சுதந்திரத்தை, ஏன் உயிரையே பாதிப்பதாய் அமைந்துவிடுகிறது. நிரபராதியின் பாதுகாப்புக்கு அவன் குற்றம் புரியவில்லை என்ற உண்மை நிலை பயன்படாது போகுமானால் வேறு வழியில்லை; அவன் சட்டத்தின் கையில் பாவையாகிவிடுகிறான். சித்த சுவாதீனமற்ற தந்தை குழந்தையின் கழுத்தை நெரித்து அதைக் கொல்ல எத்தனிக்கும்போது குழந்தை ஏதும் செய்ய இயலாமல் தவிக்கும் அல்லவா! அந்தக் குழந்தையின் நிலை தான் இவனுக்கும்.

#### நிவாரணம்

இப்படியான சந்தர்ப்பங்களில் சர்வதேச அடிப்படையில் அமைந்த ஸ்தாபனமோ குழுவோதான் குறுக்கிட்டு ஆவன செய்யவேண்டும். அதுவே சாத்தியமான காரியம்.

இன, மத, மொழி நிலை காரணமாக மனிதன்மீது குற்றம் சுமத்தி அவனைத் தண்டிக்கும் படுபாதகச் செயல் புரியும் நாட்டைக் கண்டித்து நீதி வழங்குவதற்கான அதிகாரம், பலம், சட்ட சார்பு எல்லாம் சர்வதேசக் குழுவிடமோ அல்லது ஸ்தாபனத்திடமோதான் இருக்க முடியும். அந்த ஸ்தாபனமோ குழுவோ தனது பொறுப்பை உணர்ந்து பணி செய்தால் அன்றி மனிதன் வீண் வேதனைக்குள்ளாக்கப்படும் விபரீதம் களையப்பட மாட்டாது எனலாம்.

#### ஐக்கிய நாடுகள் சபை

ஒரு துரதிர்ஷ்டம். இன்று உள்ள சர்வதேச ஸ்தாபனத்திடம் உலகின் எல்லாப் பாகங்களிலும் உள்ள மக்களைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய அதிகாரமோ, பலமோ அல்லது சட்டத் தத்துவமோ கிடையாது.

(12-ம் பக்கம் பார்க்க)

## இதோ விளக்கம்

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுடைய பேராதரவைப்பெற்ற ஒரே ஒரு அரசியல் ஸ்தாபனமாக இன்று விளங்குவது இலங்கைத் தமிழரசுக் கட்சிதான். அதனால் தமிழ் மக்கள் அக்கட்சி மீது அபரிமிதமான பாத்தியதை கொண்டாடுகிறார்கள்.

தமிழரசுக் கட்சியும் அதனைச் சார்ந்த தலைவர்களும் கடைப்பிடிக்கும் கொள்கைகள், மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆதியன பற்றி அவ்வப்போது ஆராய்ந்து விளக்கம் தேடிக்கொள்ள தமிழ்பேசும்மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களும், பொது விஷயங்களில் தாம் மனம் போனபோக்கில் நடந்துகொள்ளலாம்; ஏன் என்று கேட்க ஆளில்லை என்று நினைக்க இடமில்லை. 'கூறுங்கள் பதில்' எனக் கேட்கும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு. எனவே, தான் இப்பகுதி.

நேயர்கள் தங்கள் நியாயமான சந்தேகங்களைக் கீழ்க்காணும் பத்திரத்தில் கேள்விநபத்தில் நிரப்பி "இதோவிளக்கம்", C/o ஆசிரியர்: சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு என்ற விலாசத்துக்கு அனுப்புவார்களானால் நாம் அதை உரிய தலைவரிடம் சமர்ப்பித்து விளக்கம் பெற்று இங்கு பிரசுரிப்போம் வினா விடுப்போரின் பெயரும் சேர்த்துப் பிரசுரிக்கப்படும்.

—ஆசிரியர்: சுதந்திரன்

### இதோ விளக்கம்

பெயர் ........................................

விலாசம் ........................................

வினா ........................................

........................................

........................................

........................................

கையொப்பம் ........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையதிட்டம் புதியஉலகில்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சலனத் தன்மைக்குக் காலாயிருப்பது ஜனத்தொகைப் பெருக்கம்; உற்பத்தி முறையில் மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படும் நிலைமை; உற்பத்தியாகும் பொருட்களின் தொகுப்பு விரிந்து கொண்டிருக்கும் தன்மை (the tendency for the range of production to expand). இதன் காரணமாக மக்களின் தேவைகளின் தொகுப்பும் விரிந்தும் சலனமடைந்தும் இருக்கின்றது. ஒரு நாட்டுப்பொருளாதாரத்தின் சலனத் தன்மையும் வளர்ச்சியும் இறக்குமதி, ஏற்றுமதி சர்வதேச சந்தை என்ற அம்சங்களினால் மேலும் அதிகரிக்கப்படுகின்றது. இதன் காரணமாக மக்கள் மனோபாவம் மாறிக்கொண்டிருக்கின்றது. இன்றைய உலகில் ஒவ்வொருவரும் ஒரோர் தொழிலில் ஈடுபடுவது சம்பிரதாயத்தின் வற்புறுத்தலின்பேரில் அன்று; ஒவ்வொருவரும் ஒரோர் தொழிலில் ஈடுபடுவது தம் தம் சுயஇச்சையின் உந்தலின் பெறுபேறுகவேயாகும். ஒவ்வொருவரின் சுயஇச்சையும், அதாவது தொழிலைப் பயில்வதில் காட்டும் தெரிவு, பெறக்கூடிய ஊதியம் அல்லது ஆதாயத்தின் கணிசத்தை ஒருதரப்பிலும், அவற்றைப் பெறுவதில் ஏற்படும் கஷ்டங்கள் செலவுகள் தியாகங்களையும் அதற்குரிய வழிவகைகள் வசதிகளையும் மற்றத்தரப்பிலும் எடைபோட்டு செய்த முடிவுகளைப் பிரதிபலிக்கும்.

இந்தச் சூழலில் பழைய முறைகளை யனுசரித்தோ அதன் பிரமாணங்களைப் பயன்படுத்தியோ நாம் ஒரு சித்திகரமான திட்டம் இட முடியாது.

குமரேசு:

உபாத்தியாயர் மிகவும் நன்றாகத் திரட்டிக் கூறியிருக்கிறீர்கள்.

அப்பாக்குட்டி:

கொஞ்சம் முன்னம் இந்த வருணாச்சிரம தருமம் பழைய காலத்திலே பயன் தந்தது எண்டு சொன்னியள் அது என்ன மாதிரி.

குமரேசு:

விஞ்ஞான சாத்திரத்தின் சக்திகள் உபயோகப்படுத்த முந்திய காலத்தில், நாட்டுப் பொருளாதாரம் மாற்றமும் வளர்ச்சியுமின்றி ஒரே நிலைபட்ட காலத்தில், வருணாச்சிரம தருமம் உண்மையில் உசிதமான ஒரு பொருளாதாரத் திட்டம்தான். ஒவ்வொருவரையும் சாதிப்பிரிவை அடிப்படையாகக் கொண்டு குறித்த குறித்த தொழில்களில் பயிற்சி செய்ய வைக்கும் முறை ஒவ்வொரு கலையைப் பயில்பவரும் மிக்க சாமர்த்தியம் அடைவதற்கு துணையாகும். சிறுபராயத்தில் ஒரு கலையை கற்றால்தான் விசேட சாமர்த்தியம் பெறமுடியும். சிறுபராயத்தில் கலை கற்பதென்றால் தகப்பன் செய்யும் நுண் தொழிலையே கற்றல் வசதியாகும். மேலும் தொழில்களைச் சாதி பாகுபாட்டின்பேரில் பிரித்து நியமம் செய்வதால் ஒவ்வொருவரும் ஒரோர் தொழிலிலேயே தங்கள் வாழ்க்கையை செலவழிப்பர். அதன் காரணமாக அவர்கள் தொழிற்றிறமையும் அவர்களால் ஆக்கக்கூடிய பொருளின் உற்பத்தியும் பெருகும்.

இந்த உண்மையைத்தான் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகட்குமுன் வாழ்ந்த ஸ்கொட்டிஷ் சிந்தனையாளரும் பொருளியல் துறையில் தந்தையென்று பெயர் படைத்தவருமாகிய ஆதம் ஸ்மித் என்பவர் (Specialization and division of labour) என்று தொகுத்து புதிய உண்மைபோல் பிரகடனம் செய்தார். ஆனால் நம் தமிழ் நாட்டில் இந்த உண்மையை இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னரே உணர்ந்து அதைச் சமூக அமைப்பிலேயே பயன்படுத்தினர்.

உபாத்தியாயர்:

இந்தியாவில் விளங்கும் பழைய ஆலயங்களும் இதர கட்டிடங்களும் சந்ததி சந்ததியாகத் தரப்பட்ட சிற்பக் கலைத் திறனின் சிகரத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

குமரேசு:

ஏன், சிற்பக் கலையில் மாத்திரமன்று. ஒவ்வோர் கைத்தொழிலும் இந்திய மக்களின் தொழிற் திறமை முன்னணியில் நின்றதற்கு காரணம் பரம்பரை பரம்பரையாக ஒவ்வோர் தொழிலில் பயிற்சி பெறவைக்கும் சமூக முறையின் பயன்தான். சிற்பக் கலைத் திறன் கல்லில் செதுக்கியபடியால் நம் கண்ணுக்குமுன் இன்னிறக்குந் தோற்றுகின்றது. மற்றும் கலைகளிலும் இந்திய மக்கள் முன்னணியில்தான் நின்றனர். ஏன்? 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியாவிலிருந்து இறக்குமதியாகின்ற விசேட ரகப்பட்டு பருத்தி, கம்பளிப் புடைவைகளின் போட்டிக்குத் தம்மால் எதிர் நிற்க முடியவில்லை யென்றும் அதன் காரணமாக இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் துணிகட்கு தடையுத்தரவு விதிக்க வேண்டுமென்றும் லங்காஷயர் நெசவுத் தொழிலாளர் "ஆன்" மகாராணிக்குச் சமர்ப்பித்த மனுவை இன்றைக்கும் காணலாம்.

அப்பாக்குட்டி:

என்ன? இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு 18-ம் நூற்றூண்டில் துணி ஏற்றுமதி செய்தவையெண்டும் அந்த இந்தியத் துணிகளுடன் இங்கிலீசு நெசவாளர் போட்டி போட முடியாமல் தடையுத்தரவு கேட்டவர்கள் என்றும் சொல்லுறியளா?

குமரேசு:

ஆம். அதுதான் உண்மை. ஒரு சமூகம் சுய ஆட்சியின்றி பிற சாதியினருக்கு அரசியல் துறையில் அடிமைப்பட்டால் அச் சமூகத்தின் தொழிற்றிறமை, கலை நுட்பம், மக்களின் தன்னம்பிக்கை, பொருளாதாரத் துறையில் கருமம் ஆற்றுவதற்கு வேண்டிய உற்சாகம் துணிவு முதலிய பண்பாடுகள் யாவும் வற்றிப்போகும். பொருளாதாரத் துறையில் மக்கள் சீர்கெட்டுப் பின்னடைவர். இதுதான் ஒரு சமூகத்தின் செல்வ நிலையின் உள் இரகசியம்.

உபாத்தியாயர்:

சரி நேரமாகின்றது. வருகிற சனிக்கிழமை சந்திப்போம்,

குமரேசு:

நன்று. நான் போய் வருகிறேன்.

அப்பாக்குட்டி:

அப்ப நானும் வரப் போறன்.

உபாத்தியாயர்:

நன்று.

நாடக விமர்சனம்:

## "இன்பக் கனவு"

பொங்கற்புது நாளன்று இலங்கை தேசிய கலைக் கழகத்தார் தந்த 'இன்பக் கனவு' நாடகத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆரின் ஆணித்தரமான கருத்துக்கள் கிடைத்தன. இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆரின் 'கணீர்' என்ற குரல் கேட்டது. ஜெமினியின் ரஞ்சகமான நடிப்பு இருந்தது. என். எஸ். கேயின் நகைச் சுவையும் கூடக் கிடைத்தது.

கதையில் புதுமைக்குப் பஞ்சம் ஏற்பட்ட போதிலும் சிக்கல்கள் சில சேர்த்துப் பின்னப்பட்டதால் அது சோபிதமடைந்தது.

### நடிப்பில் முதலிடம்

நாடகத்தின் உயிர்த் துடிப்பாக இருந்த பாத்திரங்கள் ராஜனும் சிவகாமியும் ஆவர். அநாதைக் கன்னியாக வந்த சிவகாமிக்கு தான் ஒதுங்கியிருக்கும் இடிந்த கோவிலில் இடம் கொடுத்து தங்கை போல ராஜன் கருதிவர, அவள் ஒருநாள் "என்னை நீயே மணந்து கொள் ராஜா" எனக் கேட்கிறாள். "இல்லை சிவகாமி!...உன் முகத்தில் தங்கையின் சாயல் தான் தெரிகிறது!...அண்ணா என்றே கருது!" என அவன் துடிக்கும் இடத்தில் திரு. தோ. ஜெரேமின் நடிப்பு 'பளிச்'சிட்டது! அந்தக் கட்டத்தை தொடர்ந்து பின்னால் அவர் நன்கு நடித்தார். அவரது நடிப்பிலும், வசன உச்சரிப்பிலும் "இராசேந்திரன் பாணி" அப்படியே தெரிகிறது. பைத்தியமாக நடித்த கட்டங்களில் அவர் ஜெமினிகணேசனைப் பின்பற்ற முயற்சித்திருக்கிறார். நடிப்பில் முதலிடம் அவருக்குத்தான்.

### முகபாவம்

சிவகாமியாக நடித்த செல்வி. ஏ. எம். கலா... ரசிகர்கள் நெஞ்சில் ... கூடியவகையில் நல்ல முறையில் நடித்துள்ளார். சோக கட்டங்களில் மிகவும் சோபித்தது அவரது நடிப்பு. வீராவேசமாய் பேச வேண்டிய இடங்களில் குரல் கம்... விட்டது ஒரு குறை. மறறப்பட உணர்ச்சிகளை முகபாவம் மூலம் திறமையாக வெளிக்காட்டி அபாரமாக நடித்தார்.

### நகைச் சுவை

பாத்திரத்துக்கேற்ற தோற்றம், உடை, பேச்சு எல்

(13-ம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே நாம் ஒன்றை மறந்து விடக்கூடாது. ஐக்கிய நாடு சபைசர்வதேசமனித உரிமைப் பிரகடனத்துக்கு ஒப்புதல் தெரிவித்து அதை ஏற்றுக்கொண்டிருப்பது ஏதோ உண்மைதான். ஆனால் இது இந்தத் துறையில் வெறும் ஆரம்ப நடவடிக்கை மட்டுமே என்றுதான் சொல்ல முடியும்.

### நமது கடமை

நமக்கெல்லாம் ஒரு கடமையுண்டு. பரந்த நோக்கம் படைத்தவர்கள் அந்தக் கடமையை உதறித் தள்ளிவிடுவதற்கில்லை. மனிதன் எங்கிருப்பவனும் இருந்தாலும் சரி அவன் வேதனைக்குள்ளாக்கப்படும் அநீதியை ஒழிப்பதில் தீவிரமாக முனையவேண்டும். நீதி எல்லோருக்கும் பொதுவானது. அங்கு இங்கு எனாதபடி அது எங்கும் விளங்கச் செய்ய வேண்டும். உலகமே நீதி வடிவாகத் திகழ நாம் நம்மாலானதைச் செய்தே தீரவேண்டும். சர்வதேச ஸ்தாபனங்களின் கூட்டு முயற்சியோடு நம் ஒவ்வொருவருடைய தனி முயற்சியும் சேர்ந்தால் வெற்றி நிச்சயம்.

—(யுனெஸ்கோ)




1

கைகளை மட்டும் உபயோகிப்பவன் தொழிலாளி. கையையும் தலையையும் உபயோகிப்பவன் தொழில் வினைஞன். கைகளோடு, தலையையும் இதயத்தையும் கலந்து உபயோகிப்பவன் நுண்கலைஞன்.

—பிதா மத்யூ றெக்கோட்

2

நகரங்களின் விரிவினாலும் ஜனத்தொகையின் பெருக்கத்தினாலும், பொருள் உற்பத்தியினாலும் ஒரு நாடு நாகரிக நாடாகி விடாது. அந்த நாட்டில் எப்படிப் பண்பட்ட மனிதர்கள் வாழ்கிறார்கள்; அவர்கள் எத்தனை பேர் வாழ்கிறார்கள் என்பதில் தான் நாகரிகம் தங்கியிருக்கிறது.

—ஞானி எமர்ஸன்

3

மறுமலர்ச்சி எழுத்தாளனாக இருக்க விரும்பினாலும் விரும்பு. அது பாவமான காரியங்களில் ஒன்றல்ல. ஆனால் அதற்காகக் காதல் கதைகள் என்ற நிழலில் காமக் கதைகள் எழுதுவோரைக் கண்டால் அவர்கள் நட்பிலிருந்து சிறிது விலகி நில். அதை விட நல்லது அவர்களைத் திருத்துவது. இயலாத போது, மிகவும் நல்லது, அவர்களை வெறுக்கக் கற்றுக் கொள்வதேயாகும்.

—கி. ஆ. பெ. விசுவநாதம்

4

கோவிலுக்கு நியமிக்கப்பட்ட தர்மகர்த்தா கோவில் பணத்தையும், அதிகாரத்தையும் தன்னுடையதென்று நினைப்பது பாவம்; சட்டத்துக்கு விரோதம். கடவுள் தண்டனையும் கிடைக்கும். அதேபோல் சர்க்காரின் பணத்தையும் அதிகாரத்தையும் நிர்வகிக்கும் ஜனப் பிரதிநிதிகள் அவற்றைத் தங்களுக்கு சொந்தமென நினைப்பது மகாபாவம்.

— ராஜாஜி

5

நடமாடும் தெய்வங்களுக்கு, நாட்டில் ஒந்தக் குடிசையில்லை. நல்வாழ்வைப்பெறவழியில்லை. இந்த இழிந்தநிலையில் மக்களின் ஒரு சாராரின் மதி, மாரியம்மனுக்குத் தங்கத்தால் பீடம் தயாரிக்கும் அளவிற்குச் சென்றிருக்கிறது,

——அறிஞர் அண்ணா

6

"புகை வண்டியில் ஏறுங்கள்; ஆனால் எங்கே போக வேண்டும் என்று சொல்லும் உரிமை உங்களுக்கு இல்லை. வண்டியை ஓட்டும் உரிமையும் உங்களுக்கு இல்லை" என்று சொல்லுவதே முடியாட்சி முறையாகும்; அதுவே தடியாட்சி முறையுமாகும்.

"புகை வண்டியில் ஏறும் உரிமை உங்களுக்கு உண்டு; எங்கே போக வேண்டும் என்று சொல்லும் உரிமையும் உங்களுக்கு உண்டு; இன்னார் ஓட்ட வேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு" என்று சொல்வதே குடியாட்சி முறை.

ஆனால் இந்த இரண்டும் கெட்ட ஒரு முறையே இப்போது பல நாடுகளிலும் வாழ்கின்றது. அதனால்தான் மக்கள் எல்லோரும் அமைதி வேண்டும் என்று விரும்பினாலும் குழப்பமே நிறைந்திருக்கின்றது.

—டாக்டர் மு. வரதராசனார்

7

முருகனுடைய சேவடி அழகு பொலிவது. சிவந்த நிறமுடையது. ஆதலின் சேவடி என்று சொல்லுகிறோம். செம்மை, இலக்கணங்கள் எல்லாம் நிரம்பியதற்கு அறிகுறி; நேர்மைக்கு அடையாளம்; நிறைவுக்குரியது; உயர்வைக் குறிப்பது; வளப்பத்தைப் புலப்படுத்துவது; நன்மையைக் காட்டுவது.

நேராக உயர்ந்த மலையைச் செங்குத்தான மலை என்பதும், நேர்மையான உள்ளம் உடையவனைச் செம்மனத்தான் என்று சொல்வதும் மரபு. செம்மையாகச் செடி வளர்ந்திருக்கிறதென்றால் நன்றாக வளம் பெற அது வளர்ந்ததையே குறிக்கும். செம்மையாகச் செய்தான் என்றால் குறைவின்றி நிறைவாகச் செய்தான், திருத்தமாகச் செய்தான் என்று கொள்கிறோம்.

இப்படியே செம்மை என்பது நிறத்தை மாத்திரம் குறிப்பதோடு நில்லாமல் பல சிறந்த பண்புகளைக் குறிக்கும் செஞ்சொல்லாகவும் நிற்பதைச் செந்தமிழ் நாட்டு வழக்கும் செந்தமிழ் நூல் வழக்கும் காட்டுகின்றன.

—கி. வா. ஜகந்நாதன்

8

தம் மனைவி விரும்பியபடி நடக்கின்றவர், தம் நண்பருக்கு உற்ற குறைகளைத் தீர்க்கமாட்டார்; வேறு நல்ல செயல்களையும் செய்ய மாட்டார்.

—திருவள்ளுவர்

9

வரப்போகும் உன் மனைவியிடம் அழகு அவசியம் இருக்கத்தான் வேண்டும். ஆனால் அவள் கையில் பணம் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அது பாங்கியில் இருந்தால் போதுமானது. உன்னிடம் சாமர்த்தியம் இருந்தால் முதல் இரவிலேயே அதை உன் பெயருக்கு மாற்றிக் கொள்ளலாம்.

—குயுக்தியார்

## கைலாசம் கண்டேன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

### கைலாசம் தரும் விளக்கம்

சற்றேஆழ்ந்து சிந்திப்பின் மானசசரோருவம் சாத்விக குணத்தையும், இராட்சத தடாகம் ராக்ஷத குணத்தையும் புலப்படுத்துகின்றன. சாத்வீக உள்ளத்தில் சிவபோதத்தைக் காணமுடியும். ராக்ஷத குணம் படைத்த உள்ளத்தில் மெய்ப்பொருளின் தோற்றம் தெரியாது. ராக்ஷத குணமும் சாத்வீக குணமும் மற்று நிர்க்குணத் தன்மையிலேதான் இறைவன் உள்ளார் என்ற தத்துவத்தை இரு தடாகங்களையும் விடுத்து மத்தியில் இலங்கும் கைலாசம் விளக்குகின்றது.

—(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## — சுதந்திரன் சுருக்க விளம்பரக் கோவை —


நல்ல உணவுப் பொருட்கள் விலை சகாயமாகப் பெற வேண்டுமா? பிரசித்திபெற்ற இடம்

**லையன் ஸ்டோர்ஸ்**

171, காஸ்வேர்க் ஸ்ட்றீற், கொழும்பு—11. போன்: 7009

**தையல் ஒரு கலை**

ஜிப்பா, சேட், காற்சட்டை தைக்கும் கலையில் கைதேர்ந்த எங்களிடம் ஒருமுறை விஜயம் செய்தால் உங்கள் உடைகள் உங்களை மன்னராக்கும். வேண்டிய ஜவுளி ரகங்களும் உண்டு.

**விஜயா**

168, செட்டியார் தெரு, கொழும்பு—11.

காரசாரமான ஆடு, கோழி, நண்டுக் கறிகளுடன் ரஸமான யாழ்ப்பாணம் சாப்பாட்டுக்கு ஏற்ற இடம்

**நியூ ஜாப்ன ஹோட்டல்**

86, செக்கடித் தெரு, கொழும்பு.

கலண்டர் உலகில் புதுமையானது பிரசித்திபெற்றது

**'லீலா'**

பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

**லீலா ஸ்டோர்ஸ்,**

249, நோறிஸ் றேட், கொழும்பு—11


**சாஸ்வேல்ஸ் சந்தனாதி**

கூந்தல் கறுத்து செழித்து வளர உதவுவது-குளுமை தருவது-வாசனை ஊட்டுவது

எஸ். ஏ. எஸ். வேலாயுதம்பிள்ளை

68, பழைய சோனகத் தெரு கொழும்பு.

நல்ல பொருட்கள் பலநாள் பாவிக்கலாம்.



ஆகையால் திறமான றபர் ஸ்டாம்புகள், புளக்குகள் குறிக்கப்பட்ட நேரத்தில் குறைந்த சார்ஜில் செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை ஆர்டர் செய்து பாருங்கள்.

**ரஞ்சித்ஸ்**

156, நட்டா தெரு, கொழும்பு.

சிறந்த தலைமுடி, நேர்த்தை வகைகளுக்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்களுக்கு பிரசித்திபெற்றது

**பான்ஸி கவுஸ்**

68, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

**'நாடோடி'**

இளந்தமிழ் மாத இதழ்.

கதை, கட்டுரை, கவிதைகள், சிறுவர் புத்தி விருத்திப் போட்டி, அச்சுக் கூப்பன்கள், கதைப் போட்டி இன்னும் பல.

தனிப் பிரதி ச. 10. வருட சந்தா ரூ. 1-50.

**நாடோடி** அக்கரல்ல ஒப்பநாயக்கா


## மக்கள் குரல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் தோன்றியது. கட்டுப்பட்ட கைகளுடன் எழுதுவது நின்று விலங்குதனை வெட்டி யெறிந்து வீரமுரசு கொட்டி விடுதலைக்கீதம் பாடும் நாள் எந்நாளோ என்ற கவலை தான். சுதந்திர தாகத்தை ஊட்டி வளர்த்து எம்மைச் சுதந்திரப் பாதையில் அணி வகுக்க வைக்கும் சுதந்திரன் சுதந்திரப் பள்ளுப் பாடும் நாள் மிக அண்மையில் தான் இருக்கிறது என்றுணர்கிறேன். அதற்காக அல்லும் பகலும் நாம் அயர்வின்றி உழைத்திடுவோம்.

ந. மகாதேவன்,
வெள்ளவத்தை

### மகிழ்ச்சி

இலமாதகாலமாக நிறுத்தப் பட்டிருந்த "சுதந்திரன்" இம்மாதம் மீண்டும் வெளி வந்திருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் சமூக, இலக்கிய, அரசியல் வாழ்வின் விழிப்பிற்குச் "சுதந்திரன்" ஆற்றிய சேவை அற்பமானதல்ல. நமது உரிமைக்குரல் "சுதந்திரன்" முன்பிலும் அதிக சக்தியுடன் விளங்குமாக!

புத்தாண்டு வாழ்த்துக்கள்!!

சி. எஸ். பரமேஸ்வரன்,
அராலி

## இன்பக்கனவு

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் பொருந்தி, அசல் சாத்திரியாராகவே நடித்தார் திரு சரிப். க. டாவி! வேலைக்காரன் கபாலியாக வந்தவர் சில இடங்களில் "அதிகப் பிரசங்கித்தனமாக நடித்தாலும், பொதுவில் பரவாயில்லை. கந்தசாமி முதலியாரிலும் அதிகம் குன்றயில்லை.

கண்ணனாக நடித்தவர் வெறும் துடிப்பு மட்டும் நடிப்பாகிவிடாது என்பதை உணர்ந்து நடித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். திறையச் சந்தர்ப்பங்களிருந்தும், விமலாவாக வந்தவர் அவற்றைத் தவறவிட்டுவிட்டார். கண்ணன்-விமலா பாத்திரங்கள் வசன உச்சரிப்பில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்.

### பிச்சைக்காரி

காட்சி ஜோடனைகள் நன்று, ஒளி—ஒலி அமைப்பு பரவாயில்லை, 'மேக்-அப்' செய்தவருக்கு விமலாவின் மீது என்ன கோபமோ? அவ்வளவு அரிதாரத்தை குழைத்து முகத்தில் 'அப்பி' இருக்க வேண்டாமோ! அன்றன்றுடு சாப்பாட்டுக்கே தாளம் போடும் பிச்சைக்காரிக்கு பட்டாடையும் கையிலும், கழுத்திலும், காதிலும் அத்தனை நகைகளும் எப்படிக் கிடைத்தனவோ, தெரியவில்லை.

நாடகத்தின் நடுப் பகுதியில் இருந்த விறுவிறுப்பு முன்னும் பின்னும் கூட இடம்பெற்றிருக்குமேயானால் இன்னும் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். நாடகத்தின் தொடர்பு அறுந்திருந்த குறைபாடும் மறைந்திருக்கும். மொத்தத்தில் நடிப்பிலும் நட்டுவாங்கத்திலும் அனுபவசாலியான திரு எஸ். ராஜரத்தினத்தின் கண்காணிப்பில் உருவான இன்பக் கனவு சுவையான நாடகமாகவே அமைந்தது.

— புதுமைப்பிரியன்

## திமிங்கிலம்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பிராணிகள் கொல்லப்பட்டு உட்கொள்ளப்படும்.

திமிங்கிலத்தின் மூளை அளவில் பெரியது. அதற்கு அறிவுக் கூர்மை மிகுதி. அமைதியாக இருக்கும்போது தீங்கு செய்யாது. சினம் கொண்டால் ஆவேசம் கொள்ளும் பொதுவாக திமிங்கிலத்தின் கர்ப்ப காலம் 9 மாதம். சில வகை திமிங்கிலங்கள் 12 மாதங்கள் கர்ப்பமாயிருப்பதுண்டு. கருவில் வளரும் குட்டி, தாய் திமிங்கிலத்தினால் நன்கு வளர்க்கப்படும். ஒருமுறை ஒரு குட்டி போடும். தாய் திமிங்கிலம் குட்டியை நன்கு பேணும், சிலவகை திமிங்கிலங்கள் (உதாரணமாக நீலத் திமிங்கிலம்) 2 குட்டிகள் போடுவதும் உண்டு. திமிங்கில வேட்டை வட அமெரிக்காவில் கிரீன்லாந்து பகுதியிலும், ஐரோப்பாவிலும் நடைபெறுகிறது. திமிங்கில வேட்டை, மற்ற விலங்குகளை வேட்டையாடுவது போல அவ்வளவு எளிதான காரியமல்ல. மிகுந்த பனிப் பகுதிகளுக்குக் கடலில், கப்பலிலும் படகுகளிலும் சென்று திமிங்கிலங்களைத் துரத்தி ஈட்டியால் குத்தியும், துப்பாக்கியால் சுட்டும் கொன்று வேட்டையாடுவார்கள். திமிங்கிலத்தின் தோல், இறைச்சி, பால், எலும்பு யாவும் விலை மதிப்பு மிக்கவை ஆகும்.

## வட பகுதியில் அலுமினிய தொழிற்சாலை

காங்கேசந்துறையைச் சேர்ந்த மாவிட்டபுரத்தில் ஓர் அலுமினியத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை தை மாதத்திலிருந்து இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக அலுமினியப் பாத்திர வகைகள் தயாரிக்கப்படும். இதற்காக அனுபவம் வாய்ந்த தொழில் நுட்பதாரியொருவர் மேல் நாட்டிலிருந்து இங்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இத் தொழிற்சாலையில் தொழில் ஆரம்பமானதும் வட பகுதியிலுள்ள வேலையின்றி இருக்கும் நூற்றுக் கணக்கான இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும். இது மாதிரியான அலுமினியத் தொழிற்சாலை வடபகுதில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலையின் சொந்தக்காரர் திரு. திருஞானசம்பந்தர்.

## வளரும் எழுத்தாளர் ஆண்டு விழா.


வளரும் எழுத்தாளர் சங்கத்தின் ஆண்டு விழாவை எதிர்வரும் மார்ச் மாதம் இறுதிப் பகுதியில் நடாத்துவதென, கடந்த 11-ம் திகதி நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆண்டு விழாவில், சுதந்திரன் ஆசிரியர் திருஎஸ். டி. சிவநாயகம், பண்டிதர் சபா ஆனந்தர், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பிரதம பேச்சாளர்களாக ஒழுங்குகள் செய்யப்படுகிறார்கள். விழாவுக்கு தலைமைதாங்க திரு வீ. ஏ. கந்தையா அழைக்கப்பட்டுள்ளார். சங்கீதம் நடனம் ஆகிய கலா நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.


**கல்வியே கருந்தனம்**

ஒவ்வொரு வீட்டுப் பெண்ணும் விரும்பும் தையல் மெஷின்

**"கெயிட் & நியூ"**



பக்கங்களுக்கு இயங்கி, அளவற்ற விதமான சித்திரத் தையல், பொத்தான் தையல், வளைவுத் தையல் பூவேலைகள் செய்யும் அதிசய மெஷின்.

இது ஒரு ஜெர்மன் தயாரிப்பு

| | |
|---|---|
| கை மொடல் | ரூபா 375-00. |
| கால் மொடல் | ரூபா 450-00. |
| டெயிலர் மொடல் | ரூபா 475-00. |

சோல் ஏஜண்டுகள்:

**டொலர் கார்ப்பரேஷன்,**

71, குமார வீதி, புறக்கோட்டை, கொழும்பு. போன்: 6910.

உயர்ந்து இமயமலை. சிறந்தது அஜந்தா சித்திரம். புகழ் பெற்றது

**கனகலிங்கம்**




**சுருட்டு**

காரம், மணம், குணம் நிறைந்த தரத்தில் நிகரற்றது.

**V. கனகலிங்கம் பிள்ளை & சன்ஸ்,**

15, சென் ஜோன்ஸ் றேட் கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட வினுக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. இங்கிலாந்திலுள்ள ஸி. ஐ. டி. பொலீஸ் தலைமை நிலையம் "ஸ்கொட்லண்ட் யாட்" என்று அழைக்கப்படுவது ஏன்?

2. இந்துக்கள் பசுவைத் தெய்வாம்சம் உடைய பிராணியாக வணங்குகிருர்கள். இப்படிப் பூனை எங்காவது வணங்கப்படுவதுண்டா?

3. "ஸ்லீப்பாற்றன்" (Sleepatron) என்ருல் என்ன?

4. "எது சரியானது என்பதைத் தெரிந்த பின்னும் அதைச் செய்யத் தயங்குவது கோழைத்தனம்" என்ற மணிமொழியைக் கூறியவர் யார்? 1. மகாத்மா காந்தி 2. கௌதம புத்தர் 3. சீன ஞானி கொன்பியூஸியஸ் 4. கிரேக்க ஞானி சோக்ரட்டஸ்.

5. உலகத்தின் மிக உயர்ந்த கட்டடம் எது?

6. கடலில் கப்பல் பாதையின் தூரத்தை எப்படிக் கணக்கிடுகிருர்கள்? தரையில் தூரத்தைக் கணக்கிடுவதற்கும் இதற்கும் வித்தியாசமுண்டா?

7. திகம்பர சுவாமிகள் என்ருல் யார்?

8. உலகம் உருண்டை என்று நாம் அறிவோம். அதன் நடு வயிற்றிலே ஒரு கோடு கிழித்தால் அதன் நீளம் எத்தனை மைலாகும்? (1) 30763 மைல், (2) 24830 மைல், (3) 47400 மைல்.

9. ஏழைகளின் வாகனம் என்று சொல்லப்படுகிற பைசிக்கிள் வண்டியை முதன்முதல் கண்டுபிடித்தவர் யார்? எப்போது?

10. இரண்டு தேசங்களுக்கு இடையில் வழக்கு ஏற்பட்டால் அது விசாரணை செய்யப்படும் சர்வதேசக் கோர்ட்டின் பெயர் யாது?

## ..............பண்டிதனுவான்

# சுகதேகிகளாய் வாழ்வோம்

(ஜோ. கிளேரியன் லோங்)

மானிடராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் மிகச் சொற்ப காலமே இவ்வுலகத்தில் சீவிக்கிறோம். இச் சொற்ப சீவியத்திலும் முக்கால் பாகம் மூப்பு, நோய் பசி, துன்பம் முதலியவற்ருல் கழிந்து விடுகின்றது. சில காலமே நாம் சுகத்தோடு சீவிக்கிறோம்.

பட்டாடை உடுத்திப் பாங்கான மாளிகையிலே புகழோடு வாழும் செல்வந்தன் தன் உடலிலே நோய் கண்டு சீவிய காலம் முழுதும் அழுந்துவானுகில் அவனுடைய செல்வத்தினுலும், புகழினுலும் அவனுக் கென்னபயனுண்டு. அன்ருடம் கூழைக் குடித்துக்கொண்டு தானும் சுகதேகியாய் வாழும் ஏழை செல்வந்தனிலும் எவ்வளவோ மேலானவன் ஆவான்.

ஆகையால் நாம் நமது உடலை பிணிகளினின்றும் காப்பாற்றிக் கொள்வது மிக அவசியமாகும். எம்முடனேயே உடன் பிறந்து கொல்லும் நோயானது எம்மை எந்நேரமும் அனுகவே காத்திருக்கின்றது. நாம் சிறிது அசட்டையாயிருந்தாலும் போதும். உடனே எம்மை ஒட்டிக் கொள்ளும் நோயோடு சீவிப்பவன் எப்போதும் இவ்வுலகத்துக்குப் பாரமாய் இருக்கிருன். அவன் கை, கால்கள் பெலனற்றுக்சோர்ந்து கிடப்பதால் அவன் பிறருக்கு ஒரு உதவியும் செய்ய முடியாது. தனக்குத் தானும் ஏதும் [illegible] முடியாது. போதாக் குறைக்கு அவன் உற்ருர் உறவினர்களுக்குப் பெருந்துன்பத்தையே அளிக்கிருன். நடைப் பிணமாகத் திரியும் நோயாளி தனது உடலைச் சுமக்கிருன். ஆனல் சுகதேகியை அவனது உடல் சுமக்கிறது.

சிலர் நோய் வந்தபோது அந் நோய்க்குரிய மருந்துகளைக் குடியாமல், பேயினுல் உண்டானதென நினைத்துக் கொண்டு பேய்க் காரியங்களாகிய, வெளிச்சம் பார்த்தல், மந்திரித்தல் முதலிய பல காரியங்களைச் செய்கிருர்கள். இதனுல் நோய் அதிகப்படுகிறதேதவிர குறைவதில்லை. எய்தவனிருக்க அம்பை நோவதுபோலிருக்கிறது இவர்கள் காரியம். இதனுல் பணம் விரயமாவதுடன் அவர்கள் ஆயுளும் குறைகிறது.

ஆகையால், நாம் நோயின்றி வாழ முயற்சிக்க வேண்டும். நமது தேகத்திலே சுத்தமான இரத்தம் ஓட வேண்டும். நல்ல சீவசத்துள்ள உணவு வகைகளை நாம் நாள்தோறும் உண்ணவேண்டும். அதிமுக்கியமான தேகாப்பியாசத்தை மறந்துவிடக் கூடாது. புகை பிடித்தல், அபின், லேகியம், போன்ற மயக்கும் பொருட்களைப் பாவித்தல் முதலிய கெட்ட பழக்கவழக்கங்களை அடியோடு வெறுக்க வேண்டும். இதனுல் நமது தேகம் அநேக நோய்களிலிருந்து காப்பாற்றப் படுகின்றது. ஆகவே இவை போன்ற சுகாதார வழிகளைக் கையாண்டு சுக[illegible]யாக. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்".

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மர்ணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2

பெயர்..........................................

பாடசாலை..........................................

விலாசம்..........................................

..........................................

.......................... ..........................

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

# வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

# திமிங்கிலம்

(லே. சுப்பையா)

கடலில் வாழும் பிராணிகளுள் மிகப் பெரியது திமிங்கிலம். திமிங்கிலம் பாலூட்டும் இனத்தைச் சேர்ந்தது. பாலூட்டிகளுக்குள்ள சிறப்பு இயல்புகள் யாவும் திமிங்கிலத்துக்கு உண்டு.

திமிங்கிலம் 80 அடியிலிருந்து 100 அடி நீளம் வரை வளரும். திமிங்கிலங்களின் தோல், சாம்பல், கறுப்பு, நீலம் முதலிய நிறங்களில் இருக்கும். ஆனல் வயிற்றின் அடிப்புறத் தோல் வெண்மையாக இருக்கும். தோலில் மயிர்கள் காணப்படுவதில்லை. ஆனல் தலைப்புறம் மட்டும் சிறிது மயிர் இருக்கும். தோல் உறுதியாகவும் கெட்டியாகவும் இருக்கும்.

திமிங்கிலத்தின் இரத்தம் வெப்பமாயிருக்கும். திமிங்கிலத்தின் உடலுக்கு வெப்பத்தை யளிக்க உடலின் எல்லாப் பாகங்களிலும் தோலுக்கடியில் கெட்டியான கொழுப்பு இருக்கிறது. இக் கெட்டிக் கொழுப்பு திசுக்களின் தொகுதியால் உண்டானது. சுமார் 70 டன் நிறையுள்ள ஒரு திமிங்கிலத்தில் 30 டன் கெட்டிக் கொழுப்பு இருக்கும். 4 டன் எடையுள்ள இக் கொழுப்பிலிருந்து 3 டன் எண்ணெய் எடுக்கலாம். உணவு கிட்டாத குளிர் காலங்களில் துருவப் பகுதிகளில் வாழும் திமிங்கிலங்களுக்கு இக் கொழுப்பு உணவாகப் பயன்படுகிறது.

நீரின் அசைவுக்கு ஏற்றவாறு திமிங்கிலத்தின் உடல் மீனின் உடலமைப்பை ஒத்துள்ளது. இதற்கு முன் கால்கள் உறுதியான தோலினுல் இணைக்கப்பட்டு, நீரில் நீந்தத் துடுப்புபோல் அமைந்துள்ளது. முதுகின்மேல் ஒரு துடுப்புக் காணப்படுகிறது. இத் துடுப்புக்கள் திமிங்கிலத்திற்கு நீரில் சலனத்தின்போது சம நிலையை அளிக்கின்றன. திமிங்கிலத்தின் உணவு மீன் வகைகளே ஆகும். உணவு பிடிக்க வாயைத் திறந்தவண்ணமே நீந்தும். இவற்றின் பற்கள் அதற்கேற்றவாறு வளைந்துள்ளன. திமிங்கிலங்களுக்கு 50 ஜோடி பற்கள் இருக்கின்றன. திமிங்கிலத்தின் வாய்க்கும் மூச்சுக் குழலுக்கும் தொடர்பு இல்லை.

திமிங்கிலத்தின் தலை பெரிதாக இருக்கும். மூக்குத் துளைகள் நலையின் முன் புறமும் அமையாமல் பின் புறம் முதுக்குப் புறம் தள்ளி அமைந்துள்ளது. முதுகின் புரமாக மூக்குத் துளைகள் அமைந்திருப்பதால், திமிங்கிலம் தலையை நீருக்கு மேலே தூக்காமலே மூச்சுவிட முடிகிறது. திமிங்கிலம் 5 நிமிடத்திலிருந்து 10 நிமிடத்துக்கு ஒரு முறை மூச்சு விடும். திமிங்கிலம் மூச்சு விடும்போது ஒரு பெரிய ஒலி கேட்கும். இதை தூரத்திலிருந்து பார்ப்பவர்கட்கு புகையுடைய ஒரு நீர் ஊற்றுப் போலக் காணப்படும்.

திமிங்கிலத்திற்கு வெளிக் காதுகள் இல்லை. கண்கள் நன்கு அமைந்துள்ளன. திமிங்கிலத்தின் எலும்பு சிறிது மெதுவானது. வால் புறமுள்ள முள்ளெலும்புகள் அசையக்கூடியவை. திமிங்கிலத்தின் தோலில் மற்ற பாலூட்டிகளைப்போல் எண்ணெய்ச் சுரபிகளும் வேர்வைச் சுரபிகளும் இல்லை.

திமிங்கிலம் நீருடன் சிறிய பிராணிகளை உட்கொண்டு வாயை மூடும்போது, சல்லடை போன்ற பல் அமைப்பின் வழியே வேண்டாத நீர் தள்ளப்படும். பின் ரம்பம் போன்ற பற்களால் அப்

(13-ம் பக்கம் பார்க்க)

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. ஸி. ஐ. டி. தலைமை நிலையம் கட்டப்பெற்றிருக்கும் இடத்தில் முன்பு ஒரு பெரிய அரண்மனை கட்டப்பட்டிருந்தது. ஸ்கொட்லாந்து தேசத்து மன்னர்களும் இராணிகளும் இங்கிலாந்துக்கு விஜயம் செய்யும் காலையில் அந்த அரண்மனையிலேயே தங்கி வந்தனர். எனவே அப்பிரதேசம் "ஸ்கொட்லண்ட் யாட்" என்று அழைக்கப்பட்டது.

2. பழங்காலத்து எகிப்தியர்கள் பூனையை வணங்கினர். பூனை இறந்தபோது அதன் பூதஉடலை தைலமிட்டுப் பாதுகாத்தனர். சவ அடக்கத்தின்போது பெரிய கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன. 1895ம் ஆண்டு எகிப்திலுள்ள ஒரு பூனைச் சவக்காலை தோண்டப்பட்டபோது ஒரு லட்சத்து எண்பதினுயிரம் பூனைகளின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. இவை தொன் ஒன்று 5 பவுண் வீதம் எலும்புப் பசளைப் பொருளாக இங்கிலாந்துக்கு விற்கப்பட்டன.

3. "ஸ்லீப்பாற்றன்" (Sleepatron) என்பது விஞ்ஞானிகளால் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் ஒரு மின் யந்திரம். இதன் எடை சுமார் 4 ருத்தல். இந்த யந்திரம் "சோ" வென்று மழை பெய்வதுபோன்ற ஒருவித இன்னிசையை எழுப்புகிறது. இந்த இசையைக் கேட்டதும் உடனே யாருக்கும் தூக்கம் வந்துவிடும். நித்திரை குறைந்தவர்களுக்கு தூக்கத்தை உண்டுபண்ணுவதற்காக இந்த யந்திரம் உபயோகிக்கப்படுகிறது.

4. சீன ஞானி கொன்பியூஸியஸ்.

5. உலகத்தின் மிக உயர்ந்த கட்டடம் அமெரிக்காவிலுள்ள எம்பயர் ஸ்டேட் கட்டடமாகும். 102 மாடிகளையுடைய இக்கட்டடத்தின் உயரம் 1250 அடி.

6. கப்பல் பாதையின் தூரத்தையும் மைல் கணக்கில்தான் அளக்கிருர்கள். ஆனல் அது 'கடல் மைல்' என்று பிரித்துச் சொல்லப்படுகிறது. கடல் மைலும், தரை மைலும் தூரத்தில் சமமானவை அல்ல. தரை மைல் 5280 அடி நீளமாகும். கடல் மைல் 6080 அடி நீளமாகும். ஆகவே கடல் மைல் தரை மைலைவிட நீளமானது.

7. கௌதம புத்தருடைய காலத்திலேயே, அதாவது கி. மு. ஆரும் நூற்ருண்டில், மகாவீரர் என்பவர் ஜைன மதம் என்று ஒரு புதிய மதத்தை ஸ்தாபித்தார். அஹிம்சைக் கொள்கைதான் இம் மதத்தின் அத்திவாரமாகும். மனிதன் தன்னைப் பலவிதங்களிலும் ஒறுப்பதன்மூலம் மோட்சம் அடையலாம் என்று ஜைனர்கள் நம்பினுர்கள். மகாவீரர் தோற்றிய ஜைனக் கொள்கையைப் பின்பற்றிய துறவிகள், பின்னர் இரு பிரிவினராகப் பிளவுண்டார்கள். வெள்ளை உடைத் துறவிகள் ஸ்வதம்பர சுவாமிகள் என்றும் வான் திற உடை தரித்த துறவிகள் திகம்பர சுவாமியார்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

8. 24830 மைல்.

9. வல்லமெண்ட் என்பவர் 1855ல் பைசிக்கிள் வண்டியை உற்பத்தி செய்தார்.

10. சர்வதேசக் கோர்ட்டின் பெயர் ஹேக் டிரிபியூனல் (Hague Tribunal) என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணம் பேசினால்.....!

பரதன்

எனக்கு இலங்கையில் ஒரு நன்மதிப்பை தந்து, எனது இனத்தைப் பெருக்க வழிசெய்யும் ஈழத்து மக்களுக்கு என் இனத்தின் சார்பில் நன்றி. கடந்த வருடத்தில் சுமார் 700 கொலைகளை வெளுத்து வாங்கிவிட்ட நீங்கள்; இந்த 59ல் என்ன விடவா போகிறீர்கள்? சபாஷ்! உங்களுடைய வேகம் இயற்கையை வென்று விடும்போலிருக்கிறது; 'கன்கிராஜுலேஷன்ஸ்!' நிற்க—

இங்கு என்னைப் பேச அழைத்திருக்கிறீர்கள். என்னைப்பற்றிச் சொல்லுவதற்கு அதிகம் ஒன்றுமில்லை. எப்படிப் புரட்டிப் பார்த்தாலும் பிணம் பிணம்தான். பணமென்றால் பிணமும் பேசும் என்று நீங்கள் அர்த்தமில்லாமல் சில பழமொழிகளைச் சோடித்து வைத்திருந்தால் அதற்கு நான் பொறுப்பாக முடியாது. அப்படிப்பட்ட மானங்கெட்ட செயலை நான் மறந்தும் கூடச் செய்வதில்லை. ஆகையால் நான் பிணமான கதையை மட்டும் சொல்லி எனது சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

எனக்கு—உயிர் என்னிடம் தஞ்சம் புகுந்திருந்த காலத்துக் கதை இது—எனது தகப்பனார் ஆசையோடு பட்டுச்சாமி என்று பெயர் வைத்தார். அது காலப்போக்கிலே தேய்ந்து பட்டு என்று மாறியது. நான் அதை இன்னும் கொஞ்சம் தேய்த்துவிட்டு மிஸ்டர் பட் என்று நாகரிகமாக அழைத்துக்கொண்டேன்.

இனிக் கதையின் கடைசிப் பகுதிக்கு வருவோம். காலம் வேகமாக ஓடுகிறது என்பதைக் காட்டவே கதையை இத்தனை வேகமாகச் சொல்லுகிறேன்.

இன்னும் ஒன்பது வருட காலத்தில் எனது வயது நூறாகப்போகிறது என்ற பெருமை எனக்கு! இந்தப் பெருமையில் பங்குகொள்ள யாரும் இல்லை; ஏனென்றால் எனக்கு யாரும் இல்லை.

அந்தத் தென்னந்தோட்டம்தான் எனது இராச்சியம். அதன் நடுவே, "கிழே விழவா, வேண்டாமா?" என்று கேட்டுக்கொண்டே பரிதாபமாக நிற்கும் ஓட்டைக் குடிசைதான் எனது பாசறை. ஒரு வயதுபோன நாயும் அதனுடைய ஐந்து குட்டிகளும்தான் எனது சைன்யம். இந்தப் பிரகாரமாக மதிப்புக்குரிய மிஸ்டர் பட்—அதாவது நான் தர்பார் நடாத்தி வரும் காலத்திலே, ஒருநாள் இரவு நல்லபடியாக நித்திரைக்குப் போன என்னால் விடியும்பொழுது நல்லபடியாக எழுந்திருக்க முடியவில்லை, ஒரே குத்து, உளைவு, வலி...

அடடா, இன்னும் நூறு கிடுகுகள்பின்னக்கிடக்கின்றனவே. நாலு வேலியும் அவசியம் அடைத்தாக வேண்டுமே. எத்தனையோ மரங்களில் உடன் தேங்காய் பறிக்க வேண்டும். எனது கிழட்டு மனம் துடித்தது. எனவே அவசியம் அரசாங்க இலவச ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்வது என்ற முடிவுக்கு வந்தேன்.

கோட்டுச் சேட்டுக் காற்சட்டை மாட்டி, தலையை அழகாக வாரிவிட்டு, பவுடர் பூசி அலங்கரித்துக்கொண்டு 'ஜம்' என்று புறப்பட்டேன் என்றால் நம்பமாட்டீர்கள். நினைவாக ஒரு ஐம்பது சதத்தை எடுத்துக் கந்தல் வேட்டியில் முடிந்து, ஞாபகமாக வெற்றிலைப் பையையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார் மிஸ்டர் பட்—அதாவது நான்.

அன்று ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த முதல் மனிதன் நான்தான். எனக்கு மாலை சூட்டி பூச்செண்டு தந்து வரவேற்க வேண்டாம். 'வா' என்று ஒரு கழுதையாவது கத்த வேண்டாம்? சுவரோரமாக அமர்ந்து வெற்றிலைப் பையைச் சாவதானமாக அவிழ்த்தேன்.

அங்கு வேலை பார்ப்பவன் போலும், 'மாராப்புச் சட்டை' அணிந்த ஒரு சிப்பந்தி வந்தான். அகில உலக வைத்திய சேவா சங்கத்தின் போஷகப் பெருமான் வந்ததுபோல இருந்தது அவனுடைய வருகை.

"ஏய் கிழவா! என்ன வேணும்?" என்று மருந்து வாங்க வந்த இந்த நோயாளிக் கிழவனை, சம்பளம் வாங்கிக்கொண்டு வைத்திய சேவை செய்யும் அந்தச் சிப்பந்திப்பயல் 'கடி'த்தான்.

"இல்லைத் தம்பி. மருந்து வாங்கவென்றுதான்........... ..............." முனகினேன்.

"அதற்கு இங்கே ஏன் விழுந்து கிடக்கிறாய்? போய் வரிசையில் நில்" என்று அதட்டினான் அந்தப் பொது நலச்சேவகன்.

"டாக்டர் வந்து மருந்து தருவார். சுகமடையலாம். கிடுகு பின்னலாம். வேலியடைக்கலாம்" என்ற நம்பிக்கையில், 'டாக்டர் வருகிறார் ப்ராக்' என்ற டக்டக் ஒலியின் பொருளை விளங்கிக் கொள்ளும் திராணியற்று, பரிசோதனையறையின் திருக்கதவு திறந்தருளாதோ என்று ஏங்கிக்கொண்டு நின்றார் மிஸ்டர் பட்—அதாவது நான்!

கதவு திறக்கப்பட்டது. ஆட்களை 'ஒழுங்காக' உள்ளே அனுப்புவதற்கு ஒரு சேவகன் — அவனைத் தற்காலிகமாக நந்தன் என்று அழைப்போம் — வாசலில் வந்து நின்றான். நந்தனுடைய பக்கத்துவீட்டுக்காரர் தூரத்தில் வந்து நின்று

> கடந்த வாரம் 'கற்பு' பேசியதைத் தொடர்ந்து இந்த வாரம் இங்கு 'பிணம்' பேசுகிறது.
>
> திருவாளர் பட்டுச் சாமி வெறுமே 'பட்டு' ஆகக் குறுகி பட்டு பின்னர் 'மிஸ்டர் பட்' ஆக பின்னால் தேய்ந்து மூன்றால் பருத்தது ஒன்றும் புதுமையில்லை. நடப்பது இருபதாம் நூற்றாண்டல்லவா!
>
> மிஸ்டர் பட் பிணமானதில் கூட ஆச்சரியமில்லை. அந்தப் பிணம் என்ற சொல்லுக்கு அவர் பாத்திரராகிய விதம் இருக்கிறதே, அதுதான் அற்புதம். படித்துப் பாருங்கள்.
>
> அடுத்த வாரம் இத் தொடரில் 'நாகரிகம்' பேசும்.

தலையைச் சொறிந்தார். அவர் உள்ளே அனுப்பப்பட்டார். வரிசை வரிசையாகவே நின்றது.

நந்தனுடன் கூடி வேலை செய்யும் ஒரு சகதொழிலாளி ஒரு பையனை அழைத்துவந்தான். நந்தனுக்கு ஒரு சிகரட்டை அன்பளிப்புச் செய்துவிட்டு ஏதோ ரகசியம் பேசினான். பையன் இரண்டாவதாக அனுப்பப்பட்டான். வரிசை வரிசையாகவே நின்றது.

வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதில் இருந்து இறங்கிய ஒரு வண்ணக் குமரி'டம்பப் பை'யைக் கையில் சுழற்றியபடி வந்து நந்தனுடைய காதுகளில் எதையோ ஆங்கிலத்தில் கொஞ்சினாள். அந்த ஆங்கிலம் நந்தனுக்கு விளங்காத போதிலும், அவள் மூன்றாவதாக உள்ளே போனாள். வரிசை வரிசையாகவே நின்றது.

ஆஸ்பத்திரிக்குள் ஒரு குடும்பம் நுழைந்தது. தலைவன் மேல்நாட்டு உடையணிந்திருந்தான்; கையில் கறுப்புக் கண்ணாடி. தலைவி கவுண் அணிந்திருந்தாள்; தலையில் கொசு வலை. பின்னைச் செல்வங்கள் போலும், கூட இரண்டொரு குழந்தைகளும் ஒரு உயர்ந்த சாதி நாயும்............!

"டாக்டர் இருக்கிறாரா?" என்று மிடுக்காகக் கேட்டார் அந்தப் பிரமுகர். நந்தன் நாலு கால் பாய்ச்சலில் உள்ளே ஓடினான். சிறிது நேரத்தில் டாக்டரே பிரசன்னமானார்.

"ஹல்லோ! கம் கம்" என்று இருமினார் டாக்டர். குசலம் விசாரித்தார். அளவளாவினார். உள்ளே அழைத்துச் சென்றார். அரசாங்கம் அச்சடித்துக் கொடுத்திருந்த இலவசக் காகிதத்தில் அத்தனை பேருக்கும் மருந்து எழுதி, கூட அழைத்துச் சென்று மருந்து கலக்குபவனிடம் கொஞ்சம் பிரத்தியேகமாகச் சொல்லி, நல்ல நிறமுள்ள மருந்தாக வாங்கித்தந்து, திருப்பியழைத்து வந்து காரில் ஏற்றி 'டாடா' போட்டார். வரிசை வரிசையாகவே நின்றது-நோயாளர் வரிசை!

"மூன்றும் நம்பர், மூன்றும் நம்பர்" என்று நந்தன் கத்தினான். யாரும் வரவில்லை.

"மூன்றும்நம்பர்ச் செவிட்டு மூண்டம் யார்?" என்று மரியாதை செய்தான். அது கூட அந்தச் செவிட்டு மூண்டத்துக்குக் கேட்கவில்லைப் போலும், நாலாம் நம்பர் உள்ளே போனது.

மூன்றாவது நம்பர்க்காரனான நான், ஆஸ்பத்திரியில் நிகழ்ந்த அற்புதங்களைக் கண்டு மெய்மறந்து வாங்குக்குக் கீழே தூங்கிப்போய் விட்ட ரகசியத்தை நந்தனுக்கு ஏன் சொல்லவேண்டும்?

அன்று மாலை —

எல்லாச் சனங்களும் வெளியேறிய பின்னர், அந்த வாங்குக்கு அடியில் இரண்டு பொருட்கள் இருக்கக் கண்டார்கள். ஒன்று மிஸ்டர் பட்டின் வெற்றிலை இருந்த பை; மற்றது மிஸ்டர் பட்டின் உயிர் இருந்த 'பை'—அதாவது நான்!

ஆமாம், செத்தது அந்த டாக்டரோ சிப்பந்தியோ அல்ல..............!

---

# நீலவேணி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"எல்லாம் உங்கள் இந்துமதியோடு கொஞ்சத்தான்!"

"இந்துமதியா?"

"ஏன் புரியவில்லையோ? உங்கள் புதிய துப்பறியும் தொடர் நவீனத்தின் கதாநாயகி இந்துவைத்தான் குறிப்பிட்டேன்"

ஒரு பெரிய கண்டம் நழுவியது அழகேசனுக்கு. "அப்பாடா!" என்று ஒரு பெருமூச்சுவிட்டுக்கொண்டு, 'ஓ! அவளைச் சொன்னாயா? ஆமாம் நீலம். எங்கள் பத்திரிகையில் விரைவில் வெளிவர இருக்கும் என் புதிய நவீனமான 'இந்துமதி' ஒரு அதிசய பாணியில் உருவாகிக்கொண்டிருக்கின்றது. இது வரை எந்த ஆசிரியனும் கையாண்டிராத ஒரு புதிய உத்தியில் உதித்துக்கொண்டிருக்கிறாள் என் 'இந்து.' பெயர்தான் இந்துமதி என்று தண்மையாக இருக்கிறதே தவிர, நவீனம் பூராவும் நெருக்கடியான கட்டங்களும், துப்பாக்கி வேட்டுகளும், கோரமான கத்திச் சண்டைகளும், புலியின் பாய்ச்சலும், பாம்பின் படமெடுப்பும், மர்ம முகமூடியணிந்த பயங்கர இருள் மனிதன் 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்' நிறைந்த தோற்றமும், விடுவிக்க முடியாத தலைசுற்றும் சம்பவப் பின்னல்களும், அத்தியாயத்துக்கு அத்தியாயம், வரிக்கு வரி காணப்படும் இதில் இன்னுமொரு புதுமை என்னவென்றால், முந்திய என் நவீனங்கள் போல் வாராவாரம் பிரசுரமாகாமல் இந்த நவீனம் தினசரி இதழ்களிலேயே பிரசுரமாக இருக்கிறது" என்று பொழிந்து தள்ளினான் அழகேசன். இடையில் மூச்சு விடுவதற்குக் கொஞ்சம் நிறுத்தி மீண்டும் தொடர்ந்தான்:

"அதற்காகக் கொஞ்ச நாளைக்கு இராப் பகல் என்று உழைக்க வேண்டியிருக்கிறது. என் 'இந்து'வை உருவாக்கி அழகு பார்க்கு மட்டும் எனக்கு ஓய்வே இருக்காது. உன்னுடன் [illegible] ஊர்சுற்றவும் [illegible] வராது. ஏன்? உன் கண்கவிலேயே இனி நான் படாமலும் இருக்கக்கூடும். இந்துமதிக்கு 'முற்றும்' எழுதிய பின்னர்தான் எனக்கு நிம்மதி" என்று ஒருவாறு முடித்தான் அழகேசன்.

"நல்லவேளை இப்போதாவது தன் சொற்பொழிவுக்கு 'முற்றும்' வைத்தானே அண்ணா" என்று நெஞ்சார அவனைப் [illegible] நீலா.

கூடவே தன் அண்ணாவின் இந்துமதி பைத்தியத்தை எண்ணி உல்லாசம் தெரிக்கும் 'களு'க்கென்ற சிரிப்பையும் உதிர்த்து வைத்தாள்.

நீலாவின் சிரிப்பு அழகுவை என்னவோ செய்தது.

"நீலம்! உன் சிரிப்பை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்றான்.

மீண்டும் ஒரு பிரசங்கத்துக்கு என் 'சமயசந்தர்ப்பம்' தெரியாத சிரிப்பு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தொலைத்துவிட்டதா? என்று குமைந்துகொண்டு, "என் சிரிப்புக்கு அப்படியொன்றும் பிரமாதமான அர்த்தம் கிடையாது. வீணாக நவீனம் நவீனம் என்று இப்படி எழுதிக் குவிக்கிறாயே, ஏதாவது பயன் உண்டா என்று கேட்க வந்தேன்" என்றாள்.

தன் தங்கை நீலம் தன் சிரிப்புக்கு ஏதோ காரணங் கூறி மழுப்பப் பார்க்கிறாள் என்றும், உண்மையில் வேறு எதையோ மனதில் மறைத்துக்கொண்டுதான் அவள் சிரித்திருக்கிறாள் என்றும் அவன் கருதினான்.

சிலசமயம் அந்த ரகஸ்யம் அவளுக்கும் தெரிந்திருக்கக் கூடுமோ? என்றும் சம்சயித்தான் அழகு. அதற்குள் நீலா, "அண்ணா! நேரமாகிறது. அப்போ நீ என்னுடன் வரத்தான்மாட்டாய், இல்லையா?" என்று குரல் கொடுத்தாள்.

"நான்தான் சொன்னேனே, எப்படியும் [illegible] உன்னுடன் [illegible] நீ பேஷாகப் போய் வா" என்று விடை கூறினான் அழகு.

கார் நீலவேணியோடு சிட்டாகப் பறந்தது. கார் சென்ற திசையையே பார்த்துக்கொண்டு நின்ற அழகேசனின் சிந்தனை தீவிரமாகத் தொழில் புரிந்தது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல் வீட்டுக்குள் விரைந்தான். நேரே மாடியிலுள்ள தன் அறைக்குள் நுழைந்து டெலிபோன் 'டயலில்' ஏதோ ஒரு எண்ணைச் சுழட்டி யாருடனோ சிறிது நேரம் பேசிவிட்டுக் கீழே வந்தான்.

அவன் கீழே வந்து சொற்ப நேரம்தான் ஆகியிருக்கும். அதற்குள் வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. காரிலிருந்து இறங்கி வந்தான் டாக்டர் சங்கரன். வரும்போதே, "ஹலோ! அழகு! ஏதோ 'ஆக்ஸிடெண்டாமே,' அடி பலமா?" என்று கேட்டுக்கொண்டே வந்தான்.

"ஸீரியஸ் இல்லை!" என்று ரத்தினச் சுருக்கமாகப் பதில் சொன்னான் அழகு.

"ஒரு அவசர கேஸ். மல்லிகைத் தோட்ட பங்களாவுக்குப் போக வேண்டும். அஜந்தாவுக்கு உடம்பு சரியில்லையாம். ஏறு காரில்" என்றான் சங்கரன். கார் பறந்தது......

(தொடரும்)

---


## வியாபாரத்திற்கழகு

## விளம்பரம் செய்தல்


---

## வாழ்க மணமக்கள் வாழ்க நீடூழி!

**1959ம்** ஆண்டில் மணம் முடிக்கப்போகும் இளந் தம்பதிகளுக்கும் அவர் தம் உறவினருக்கும் ஒரு நற் செய்தி.

புது மணத் தம்பதிகளின் புகைப்படங்களை "வாழ்க மணமக்கள் வாழ்க நீடூழி" என்ற இப்புதிய பகுதியில் பிரசுரித்து விளக்கமும் தர எண்ணியுள்ளோம். வாசக நேயர்களும், ஏஜண்டு நண்பர்களும், மற்றும் அன்பர்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பெரிதும் பயன் படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

படங்கள் பிரசுரிப்பதற்கான மேலும் விவரங்களை திருமணப் பகுதி, C/o ஆசிரியர்: சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான இரண்டாவது வாரம்! !

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **நவா** (கொம்பனித்தெரு)

**விஜயா** (மட்டக்களப்பு) **மொடர்ன்** (பதுளை) **மனோஹரா** (யாழ்ப்பாணம்) **வெம்பிளி** (கண்டி)

**ஸ்ரீகிருஷ்ணு** (திருகோணமலை) **தீவொளி** (நுவரெலியா) **ஜெமினி** (ருகலை) **விஜிதா** (மஸ்கேலியா)

ஆகிய பன்னிரண்டு திரைகளில் வெற்றி முரசு கொட்டுகிறது

**சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்**



# பதி பக்தி

(பழய தலைப்பு புதிய கதையமைப்பு)

கதை, வசனம்..... M.S.சோலைமலை • சங்கீதம்............ விஸ்வநாதன்•ராமமூர்த்தி • நிர்வாகம்..... G.N.வேலுமணி • காமிரா...... G.விட்டல்ராவ்

BAKTHA

பொறுமைக்கும் குமுறலுக்குமிடையே போராட்டம் இவையிரண்டுக்குமிடையேயுள்ள வேற்றுமையை கதையாலும்,நடிப்பாலும் வெளிப்படுத்தும் திரை ஓவியம் பதிபக்தி.

பொறுமையின் சிகரமாக- **ஜெமினி கணேசன்,** குமுறும் எரிமலையாக **சிவாஜி கணேசன்,** இவ்விரண்டுக்குமிடையே அன்புக்குக் கட்டுப்பட்டு ஆத்திரப்படாது இடுக்கண்பட்டபோதும் இலட்சியம் தவறாத தமிழ் நாட்டுத் திலகமாக **சாவித்திரி** கலைப் பித்தனாக **சந்திரபாபு,** ஹாஸ்ய விருந்தளிக்க **தங்கவேலு** முதலியோர் நடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 ஜனவரி மாதம் 18-ந் திகதி பிரசுரிக்கப்பட்டது.